கீரணி

(கிராம நலம்)

கதிர் 15] நவம்பர் 1969 [நெல் 2

குழந்தைகள் மலர்



தமிழ் நாடு அரசின் கிராம வளர்ச்சி & உள்ளாட்சித் துறைத் திங்கள் வெளியீடு

இணைக்குநர்கள் :

திரு. இ. சி. பி. பிரபாகர், ஐ.ஏ.எஸ்.
ஊர் வளர்ச்சி & உள்ளாட்சித் துறைச் செயலர்

திரு. ஜி. திருமால், எம்.ஏ., ஐ.ஏ.எஸ்.
ஊர் வளர்ச்சித் துறை இயக்குநர்

* * *

பதிப்பாளர் :

திரு. சி. வேங்கடசாமி, எம்.ஏ.

* * *

ஆண்டுச் சந்தா ரூ. 3-50

தனி இதழ் விலை 35 காசு

* * *

கதை, கட்டுரை, கவிதை, செய்திகள் அனுப்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஆசிரியர், சீரணி, கோட்டை, சென்னை-9

* * *

சத்தா மற்றும் நிர்வாகம் குறித்துத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

மக்கள் தொடர்பு அதிகாரி, கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம், கோட்டை, சென்னை-9

* * *

ஆசிரியர் :

திரு. சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி.

உள்ளே..

எண்	பொருள்	பக்கம்
1.	நேரு பிறந்த நாள்	4
2.	வெற்றி வழியில் வேலூர்	6
3.	குழந்தைகள் குற்றமல்ல	9
4.	குழந்தை ஒரு மலர்	13
5.	அவனே வாழ்த்துங்கள்	16
6.	கர்ப்பு	17
7.	வையத்துள் வாழ்வாங்கு வாழலாம்	20
8.	பேதையும் மேதையாகிடலாம்	24
9.	சத்தூட்டத் திட்டத்திற்கு சத்தூட்டுவோம்	25
10.	7-9-1969ல் குறளகத்தில் நடைபெற்ற கிராமக் கூட்டுறவுத் தொழில் நிறுவனங்களின் பேராளர்கள் கூட்டத்தில் அமைத்திய கதர்-கிராமக் கைத்தொழில் ஆயத்தின் தலைவர் திரு. யூ. என். தேபர் அவர்கள் ஆற்றிய உரை	31
11.	குடும்பநலத் திட்டம் ஏன்?	33
12.	கிராமப் பொருளாதாரத்திற்குப் பணைத்தொழில்	36
13.	அரசு கண்ட வெற்றி	41
14.	உழவன் மகள்	44
15.	கூடி வாழ்வோம்	53
16.	குடும்ப ரகசியம்	57
17.	ஏர் முனை வெல்க!	63
18.	தானே வந்த சுழற்கேடயம்	65
19.	இனி எண்ணெய் இறக்குமதியே இல்லை!	67
20.	'பஞ்சாயத்து ராஜ்' இதழிலிருந்து	69
21.	இன்டென்சிவ் அக்ரிகல்சர் இதழிலிருந்து	73
22.	ஊராட்சி அரசிதழ்	79
23.	பார்த்தோம் - படித்தோம் - பட்டதைச் சொல்கிறோம்	88

இந்தியத் தலைமை அமைச்சராய் ஈடிணையற்ற பெருமையுடன் பணியாற்றிப் பெரும் புகழ் நிறுவிச் சென்ற நேரு பெருமகனார் பிறந்த நாளான நவம்பர் 14, நாடு முழுதும் குழந்தைகள் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

குழந்தைகள் நாட்டின் செல்வங்கள். அவர்கள் அறிவுள்ள குழந்தைகளாக வளரும்போது, நாடே அறிவாலயமாக நலம் பெற்று விளங்கும். ''பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த மக்கட்பேறு அல்ல பிற'' என்னூர் திருவள்ளுவரும்.

ஒரு தலைமுறைக்கான குழந்தைகளை வாழ்வாங்கு வாழும் வகையில் ஒழுங்குபடுத்திவிட்டோமானால், பின் வாழையடி வாழையென என்றும் எங்கும் இன்பமே சூழ்ந்து நிற்கும்!

வருங்காலச் சந்ததிகளை உருவாக்குவதில் அனைவரும் ஒருங்கிணைந்து ஒருமித்த கருத்துடன் செயலாற்றிப் பயன் விளைவிக்கவேண்டும் என்ற பொதுக் கருத்தை வளப்படுத்தும் நாளாகக் 'குழந்தைகள் நாள்' அமைவதாகுக!

— ஆசிரியர்.

எதிர்காலத் திருநாட்டில் நல் ஒளியைப் பாய்ச்சக் கூடியவர்கள் இன்றைய இளைஞர்கள்- மலரா மொக்குகள்- மாணவ மணிகள். மாணவர்கள் ஒரு நாட்டின் இருள் போக்கும் சுடர் விளக்குகள்; சுவைக் கனிகள்.

நேரு பிறந்த நாள்

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

குழந்தை யெல்லாம் கூடுவோம்
கூடிக் குதித்தே ஆடுவோம்
மழலை மொழியில் பாடுவோம்
மகிழ்ந்து தாளம் போடுவோம்.

''குழந்தை யோடு இருக்கவும்
குழந்தை யோடு பேசவும்
குழந்தை யோடு ஆடவும்
கொள்ளை ஆசை உள்ளது''



என்று சொன்ன நேருவை
இந்த நாடு பெற்றநாள்
என்றும் நமது நெஞ்சிலே
இருக்கும் நேரு பிறந்தநாள்.

''எனது பிறந்த நாளையே
இன்ப மூட்டும் குழந்தைகள்
தினமாய்க் கொள்வோம்'' என்றநம்
தேசத் தலைவர் பிறந்தநாள்.

இந்தி யாவில் மட்டுமா?
இல்லை, இல்லை; உலகிலே
எந்த நாடுக் குழந்தையும்
இவரைப் போற்றும் நல்லநாள்!

தேச நலனே எண்ணியே
தினமும் பாடு பட்டவர்;
ஆசை யாக நாமெலாம்
அழைக்கும் 'மாமா' பிறந்தநாள்.

நாட்டை ஆளும் தலைவராய்
நாமும் ஆக நல்வழி
காட்டும் அருமை நேருவைப்
போற்றி ஆடிப் பாடுவோம்.

இன்று குழந்தைகள் நீங்கள்
—எனினும்
இனிஇந்தநாட்டினீர் ஆளப்பிறந்தீர்!
இன்று குழந்தைகள் நீங்கள்!
நன்றாய்ப் படியுங்கள் நாட்டின்
குழந்தைகாள்!
ஒன்றாய் இருங்கள் உயர்வினை
எண்ணுங்கள்!
இன்று குழந்தைகள் நீங்கள்!
குன்றினைப் போல்உடல் வன்மை
வேண்டும்!
கொடுமை தீர்க்கப்போர் ஆடுதல்
வேண்டும்!
தின்றதையே தின்று தெவிட்டுதல்
இல்லாமல்
அன்றன்று வாழ்வில் புதுமை
சூழவேண்டும!
இன்று குழந்தைகள் நீங்கள்!
பல்கலை ஆய்ந்துதொழில்பலகற்றும்
பாட்டிற் சுவைகாணும் இசைமையும்
ஊற்றும்
அல்லும் பகலும் இந்நாட்டுக்
குழைப்பீர்கள்!
அறிவுடன் ஆண்மையைக் கூவி
அழைப்பீர்கள்!
இன்று குழந்தைள் நீங்கள்!

—பாரதிதாசன்

வெற்றி வழியில் வேலூர்

சி. என். பாலகிருட்டிணன்

அறிவாலயங்கள் எங்கு பார்த்திடினும் நாள்தோறும் கட்டப்படுகின்றன. வருங்கால நல்லமைச்சர்களே, மருத்துவர்களே, பொறியாளர்களே, அரசியல்வாதிகளே, பொருளாதார நிபுணர்களே, விஞ்ஞானிகளே, பேராசிரியர்களே எல்லாம் உருவாக்கும் நற்பணியில் மிகுந்த வேகமாக, இவ் அறிவாலயங்களாகிய கல்விக் கூடங்கள் பணிபுரிந்துகொண்டு வருகின்றன. தமிழ்நாடு அரசு, ஒவ்வோர் ஆண்டும் கல்விக்காக, நிதி ஒதுக்கீடு செய்வதில் மிகவும் தாராள மனப்பான்மையோடு நடந்து கொள்கிறதென்றால், அது நாட்டு மக்களின் பால் கொண்டுள்ள அன்பின் பிணைப்பையும், இளைஞர், சிறுவர், சிறுமியர்மேல் கொண்டுள்ள நல்லெண்ணத்தையும்தான் காட்டுகின்றது.

எத்தனை ஆரம்பப் பள்ளிகள், உயர் நிலைப்பள்ளிகள், கல்லூரிகள் தொடங்கினாலும் இன்னும் போதுமான அளவுக்குப் பள்ளிகள் இல்லை யென்கிற நிலைதான் இருந்து வருகிறது. மக்கள் தரும் வரிப்பணத்திலிருந்து எவ்வளவு செலவு செய்து இவ்வறிவாலயங்களைக் கட்டி வைத்திடினும், நாம் 'போதும்' என்ற நிறைவைப் பெறமுடியாத நிலையைக் காண்கிறோம். உயர் நிலைப்பள்ளிகளில் விஞ்ஞானக் கூடங்கள் இல்லை; விஞ்ஞான பாடங்களுக்கான துணைக் கருவிகள், சாதனங்கள் இல்லை என்கிற நிலை இருந்து வருவதையும் காண்கிறோம். இவற்றை யெல்லாம் நீக்கிட வழி வேண்டாமா?

அதற்கான வழியை உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு மா. முத்துசாமி அவர்கள், தெள்ளத் தெளிய எடுத்துக்கூறி, அமைத்துக் கொடுத்தார்கள்...! எங்கே அந்த வழி என்கிறீர்களா? இதோ!

1969ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20ஆம் நாள்; சனிக்கிழமை; வட ஆர்க்காடு மாவட்டத்தின் தலை நகரான வேலூர் குயப்பேட்டைப் பகுதியிலுள்ள நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் பிற்பகல் 12 மணிக்கு ஒரு விழாவிற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டு இருந்தன. அப்பள்ளிக்கு இருந்து வந்த குறை, அதுவும் பெருங் குறை, விஞ்ஞானக்கூடம் இல்லாதது. அந்த இல்லாமையைத் தீர்க்கத் தான் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட விஞ்ஞானக் கூடத்தைத் திறக்க விழா எடுத்திருந்தார்கள், வேலூர் நகர மக்கள்.

சட்ட மன்ற உறுப்பினர் திரு. மா. பா. சாரதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற அந்த விழாவில், விஞ்ஞானக் கூடத்தைத் திறந்து வைத்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்து சாமி அவர்கள் உரை நிகழ்த்தும் போது பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:

''நாட்டிலே இதுபோன்ற விஞ்ஞானக் கூடங்கள், அறிவாலயங்கள் நிறையத் திறக்கப்படவேண்டிய நிலை இன்னும் இருந்துகொண்டுதானிருக்கிறது. அரசோ, தன்னுள் இயன்றளவு நிதி ஒதுக்கீடு செய்தும், பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரை நாம் நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்துவிட்டோம் என்ற நிறைவைப் பெறமுடியாமல் இருந்து வருவதைப் பார்க்கின்றோம். இதைத் தீர்க்க முடியாதா? இல்லை தீர்க்க முடியாத காரியமா? அமெரிக்க நாட்டு மக்கள் அம்புலியில் கால் வைத்து விட்டார்கள். அப்படியிருக்க, இந்தச் சின்னஞ்சிறிய காரியத்தை நம்மால் சாதிக்கமுடியாது எப்படிப் போய்விட முடியும்? ஆகவே இந்தக் காரியத்தில் வெற்றி காண நல்ல வழி ஒன்றுண்டு; அதை மக்களாகிய நாம் மனமுவந்து செய்ய வேண்டும்.''

''கடவுளுக்குக் காணிக்கை செலுத்துவதற்கு நாம் தயங்குவதில்லை; தப்புவதுமில்லை. அப்படிச் செலுத்துவதை நான் தவறு என்று கூறவில்லை. ஒரிரண்டு மாதங்களுக்கு முன்னர் கூட இசைக் குயில் திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள்,

தாம் பாடிய பாட்டுக்களின் ஒலித் தட்டுகள் விற்பனை மூலம் கிடைத்த தனியுரிமைத் தொகையான(Royalty) சுமார் ரூ. 35,000ஐ, திருப்பதி ஏழுமலையானுக்குக் காணிக்கையாகச் செலுத்தியதாகப் பத்திரிகைகள் மூலம் அறிந்தோம். அவர்களிடத்தே யுள்ள ஈகைத் தன்மையைப் பாராட்டுகிறோம்; காரணம், தமிழன் ஈந்து சிறந்தவன் என்று நம்முடைய பண்டைய வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன. ஆகவே நாம் வேண்டுவதெல்லாம், ஆண்டவனுக்கும் காணிக்கை செலுத்துங்கள், அதே நேரத்தில் பிற்காலத்தில் இந்நாட்டை ஆளப் பிறந்திருக்கும் செல்வங்களுக்குத் தேவையான அறிவாலயங்களைத் தோற்றுவிக்கவும், உங்களால் முடிந்த அளவு உதவி செய்யுங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறோம்.''

''நம் வீட்டில் திருமணம் என்றால், பிறர் புகழவேண்டுமென்ற நோக்கத்தோடு நம் சக்திக்கு மீறிய அளவுக்குச் செலவு செய்து விழா எடுக்கிறோம். வரீகாப்புக்குத் தனிச் சிறப்புத் தருகிறோம்; குழந்தை பிறந்தால், குழந்தைக்குப் பெயர் சூட்டு விழா, தொட்டிலிடுதல் போன்ற பற்பல வகையான விழாக்கள் எடுத்து, எவ்வளவோ செலவு செய்கிறோம். அப்படிச் செலவு செய்கின்ற நாம், நாளைய தினம், 5 ஆண்டுகள் நிரப்பப் பெற்றவுடன், நம் செல்வத்தை அனுப்பப்போகும் பள்ளிக்கு, ஒவ்வொரு விழாவின்போதும் ஒரு தொகையை நன்கொடையாக, அப் பள்ளியின் வளர்ச்சிக்காகக் கொடுத்தால் என்ன? நல்ல காரியத்திற்குத் தானே கொடுக்கப் போகிறோம்.''

''இந்தப் பள்ளியில் படித்து விட்டுத் திருமண வயதை அடைந்து, திருமணம் செய்துகொள்ளவிருக்கும் மாணவர்களாயினும் சரி, மாணவிகளாயினும் சரி, திருமணத்திற்குத் தங்கள் சம்மதத்தைத் தெரிவிக்கு முன்னர், கேட்கவேண்டிய முதல் கேள்வி, 'நான் படித்த பள்ளிக்கு என் வருங்கால மாமனார் எவ்வளவு ரூபாய் நன்கொடையாகக் கொடுப்பார்' என்பதாக இருக்கவேண்டும். அத்தோடு மட்டுமல்ல, அந்தத் தொகையைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டைக் காட்டியபிறகுதான்

மணமேற்க விருக்கும் ஒவ்வொரு மணமகனும், மணமகளும் திருமணத்திற்கு ஒப்புதல் தரு முன் கேட்க வேண்டிய முதல் கேள்வி: ''நான் பயந்த பள்ளிக்கு என் வருங்கால மாமனார் எவ்வளவு ரூபாய் நன்கொடை கொடுப்பார்?''

கழுத்தை நீட்டுவேன் என்று மாணவி களும், கழுத்திலே தாலியை ஏற்று வேன் என்று மாணவர்களும் சூளுரை எடுத்துக்கொள்ள வேண்டும்.''

''நான், ஏதோ வந்தேன், விஞ் ஞானக் கூடத்தைத் திறந்துவைத்து நாலு வார்த்தைகளைப் பேசினேன், நீங்களும் கேட்டீர்கள் என்று இல் லாமல், இந்தத் திட்டத்தை இந்த நகரிலே இன்றே தொடங்கிவைக்க வேண்டுமென்ற ஆவல் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. வேலூர் முன் னேடியாக நின்று, இத்திட்டத்தைத் தொடங்கிவைத்து மற்ற மாவட்டங் களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். இது என் ஆசை மட்டு மல்ல, நம் அண்ணன், மறைந்த மாமேதை 'அண்ணா'வின் இலட்சிய மும் ஆகும். ஆகவே இந்நகர மக்கள் இந்தத் திட்டத்தை இங்கே,இன்றே, இப்பொழுதே தொடங்கி வைப்பார் கள் என்று நம்புகிறேன்'' என்று அமைச்சரவர்கள் சொல்லி வாய் மூடுமுன்னர், நகர மன்ற உறுப்பினர் திரு.இலக்குமணன்அவர்கள் ரூ.101ம் மற்றொரு நண்பர் திரு. பாபு ரூ. 25ம் நன்கொடையாக அளித்து வெற்றி வழியில் முதலடி எடுத்து வைத்துவிட் டார்கள்.

''இப்படிப்பட்ட நல்ல பணிகளைச் செய்வதில் வேலூர் முன்னேடியாக முந்திக்கொண்டு விட்டது. இதே போன்று மற்ற மாவட்டங்களும், முனைந்து நின்று, பள்ளிகளின் வளர்ச் சிக்குத் தேவையான பொருள் திரட் டும் இந்தப் பணியினை மேற்கொண்டு, வருங்காலச் சமுதாயத்தைத் தலை சிறந்த சமுதாயமாக, உலகம் புகழும் சமுதாயமாக மாற்றவும், தமிழனின் உன்னத இலட்சியங்கள் நிறைவேறவும், இத்திட்டத்தை ஏற்று நடத்துவார்கள் என்ற நம்பிக் கையோடு அறப்பணித் திட்டத்தைத் தொடங்கி வைக்கிறேன்'' எனக்கூறி அமைச்சரவர்கள் தம் உரையினை முடித்தார்கள்.

அமைச்சரவர்கள் தொடங்கிவைத் துள்ள இத்திட்டம் புதுமையானது; எளிதானது; எவ்வித மனக்கசப் பிற்கும் இடமில்லாதது; உவகை யோடும் உள்ளன்போடும் ஏற்று நடத்தக்கூடியது. வேலூர் நடந்து காட்டிய வெற்றி வழியில் மற்ற மாவட்டங்களும் தொடர்ந்து நடந்து காட்டும் என்பதில் ஏது ஐயப்பாடு?

பின் தங்கிய வகுப்பினர் நலப் பொறுப்பாண்மைக் குழு (கமிஷன்) நியமனம்

பின்தங்கிய வகுப்பினர் மேம்பாட்டுக்கான வழி வகைகளைக் கூறமூவர் குழு ஒன்றினைத் தமிழக அரசு நியமித் துள்ளது. குழுவின் தலைவராக, சுங்க இலாகா ஓய்வுபெற்ற கலெக்டர் திரு ஏ. என். சட்டநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஓய்வுபெற்ற மாவட்டநீதிபதிகள் திரு எஸ். சின்னப்பன், திரு எம். ஏ. ஜமால் உசேன் ஆகியோர் பொறுப்பாண்மைக் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டு உள்ளனர்.

பிற்பட்ட வகுப்பினர் நலத்துறை இயக்குநர், இக் குழு வின் செயலாளராக இருப்பார்.

பின்தங்கிய வகுப்பினரின் கல்வி, பொருளாதார மேம் பாட்டுக்கான வழிவகைகளை இக் குழு ஆராய்ந்து, அரசுக்குப் பரிந்துரை செய்யும்.

குழந்தைகளின் குற்றமல்ல

குழந்தைகளுக்கு இளம் பருவத்தில் ஏற்படும் எல்லாப் பழக்க வழக்கங்களுக்கும் பெற்றோர்கள்தாம் அடிப்படைக் காரணமாவார்கள்.

உளநூல் அறிஞர்கள் இந்தக் கருத்தையே வலியுறுத்துகின்றனர்.

தங்கள் பெற்றோரைப் பார்த்துத் தான் குழந்தைகள் எல்லாப் பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொள்கின்றனர். குழந்தைகளின் அறிவும் பழக்கமும் பெற்றோர்களின் செயல்கள், குண இயல்புகள், சூழ்நிலைகளின் தன்மைகள் முதலியவற்றை ஒட்டியே வளர்கின்றன.

பள்ளியிலே இருந்து வீடு திரும்பும் தன் குழந்தைகளுக்குத் தின்பண்டம் தருகிறாள் தாய். சிறுவனோ அதை எடுத்துக்கொண்டு சென்று தன்னுடன் விளையாட வரும் பக்கத்து வீட்டு நண்பனுக்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டுத் தானும் உண்கிறான்.

ஒருநாள் இதைப் பார்த்துவிட்ட தாய் ''நான் உனக்கு ஆசையோடு கொடுத்ததை அடுத்த வீட்டுப் பையனுக்குக் கொடுக்கிறாயே; இனிமேல் அவனுக்குக் கொடுக்கக்கூடாது'' என்று சொல்கிறாள்.

சிறுவன் அதைக் கேட்டால்தானே! தன் நண்பனுக்குக் கொடுக்காமல் உண்ண அவனுக்குப் பிடிக்கவில்லை. தாய் பலமுறை கண்டித்துச் சொல்லியும் அவன் கேட்கவில்லை.

மகனைத் தன் வழிக்குக் கொண்டு வரத் தாய் திட்டமிட்டாள். சிறுவன் பள்ளியிலிருந்து வந்தவுடன் வாயிற் கதவைத் தாழிட்டுவிட்டுத் தின்பண்டத்தைக் கொடுக்கிறாள். ''இதை நீ உண்ட பிறகுதான் வெளியே விளையாடச் செல்லலாம். அப்பொழுதுதான் வாசல் கதவைத் திறப்பேன்'' என்கிறாள் தாய்.

தன் தாய் கொடுத்த தின்பண்டத்தை உண்ணத் தொடங்கும் சிறுவன் ''அம்மா, குடிக்கத் தண்ணீர்...'' என்கிறான்.

தாய், தண்ணீர் கொண்டுவர உள்ளே செல்கிறாள்.

அதற்குள் அவசர அவசரமாகப் பாதித் தின்பண்டத்தை எடுத்து மறைத்துக்கொள்கிறான் அச்சிறுவன். தாய் வந்தவுடன் எல்லாவற்றையும் உண்டுவிட்டது போன்று நடிக்கிறான்.

''எல்லாவற்றையும் உண்டாயா?'' என்று தாய் கேட்டதும், ''எல்லாவற்றையும் உண்டேனே'' என்று பொய் சொல்லுகிறான். அதன் பிறகு தாய் கதவைத் திறந்துவிட்டதும் வெளியே விளையாடச் செல்பவன் தாய் பார்க்காதவாறு தன் நண்பனைத் தொலைவில் அழைத்துச் சென்று பையில் மறைத்துவைத் திருந்த தின்பண்டத்தை எடுத்து அவனுக்குக் கொடுத்து மகிழ்கிறான்.

இப்படிப் பிஞ்சுப் பருவத்திலேயே தாயிடம் பொய் சொல்லி, நண்பனிடம் திருட்டுத்தனமாகத் தின்பண்டத்தை அந்தச் சிறுவன் கொடுக்க யார் காரணம்?

அந்தத் தாய்தானே!

தன் சுயநலமான எண்ணத்தினால் குழந்தையே தன்னிடம் 'பொய்' சொல்லுமாறு செய்த அந்தத் தாய் தான் குற்றவாளி!

* * *

குழந்தைகளின் முன்னிலையில் பெற்றோர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளும் உண்டு.

கணவன், ''என் 'பீரோ'வைத் திறந்து என்ன எடுத்தாய்?'' என்று குழந்தைகளுக்கு முன்பு மனைவியைக் கண்டிக்கிறான்.

இதைக் கேட்டுக்கொண்டிருக்கும் குழந்தைகளுக்கு 'அப்பாவின் பொருளை அம்மா தொடக்கூடாது' என்கிற எண்ணம் உண்டாகிறது.

தன் பொம்மையை எடுக்கும் தங்கையை அண்ணன் கண்டிக்கிறான். ''என்னுடைய பொம்மையை நீ ஏன் தொடுகிறாய்?'' என்கிறான்.

தன்னுடையதைப் பிறர் தொடக்கூடாது என்று நினைக்கிறான். இதை அவனுக்குக் கற்றுக்கொடுப்பது யார்? அவனுடைய பெற்றோர்கள்தானே!

குழந்தைகளை உருவாக்குவது அவர்களுடைய பெற்றோர்களிடம் தான் உள்ளது.

சுற்றுச் சார்பும் சூழ்நிலைகளும் குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்க உதவும் வகையில் பார்த்துக் கொள்ள வேண்டியது பெற்றோர் கடமையாகும்.

குழந்தைகள் தவறு செய்கிறார்கள் என்றால் அது அவர்களுடைய குற்ற மல்ல.

[இவை மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் இரண்டு ஆண்டுகளுக்குமுன்பு புரசைவாக்கம் தொடக்கப் பள்ளி ஒன்றில் பெற்றோர் நாள் விழாவில் பேசும்போது கூறிய கருத்துக்களாகும்.]

கேட்டு எழுதியவர் கடச்சனேந்தல் 'ஜெயா'

A. Manikkam & Sons
MANAMADURAI
Cement Workers
By
''CENTRIFUGAL PROCESS''

Manufacturers of :
R.C.C. Pipes and Pressure Pipes
AND
Other Cement Products
by
'Centrifugal Process'

எவரெஸ்ட்டப்பா—பாரு கிராமத்தின் படுசுட்டியான விவசாயி சொல்கிறார்:

"எவரெஸ்ட் அஸ்பெஸ்டாஸ்-சிமெண்ட் தானியக்குதிர்களில் தானியங்களைச் சேமித்து வையுங்கள்—அங்குதான் தானியங்கள் முற்றிலும் பத்திரமாக இருக்கும்"

எவரெஸ்ட் அஸ்பெஸ்டாஸ்-சிமெண்ட் பகுதிகளான, நாகுகளே தானியங்களை வெளியேற்றும் குற்றச் சீவுணர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. எலிகளும், பறவுச்சிகளும், ராகசிவும் அறுகமுடியாது. எனவே தானியங்கள் மாதக்கணக்கில் பத்திரமாக இருக்கும்.

தானியங்களைச் சுலபமாக வெளியேற்றும் வசதியான எற்பாடுகளைக்— எனவே தானியங்கள் வீணாக வழியில்லை.



இடைக்கக் கூடிய பல பகுதிகளாக கிடைப்பதால் இதற்கு குறிப்பாக தேவைப்படும் அளவுகளில் அமைத்துக் கொள்ளலாம்.



அஸ்பெஸ்டாஸ்-சிமெண்ட் சீர்கெடுவதில்லை. எனவே குறிப்பாக பலவானவைகளை கெடாமல் கட்டாது கட்டப்படியே இருக்கும்.



நிரந்தரமான வகைக்கு எவரெஸ்ட் அஸ்பெஸ்டாஸ்-சிமெண்ட் தயாரிப்புகள்.

இந்தக் குறிப்பு, சிமெண்ட், கொலை அல்லது மரஸ்டாண்டின் மேல் சுலபமாக சிறுபடக் கூடியது.

இதர தயாரிப்புகள்: கெரிவான கூரைத் தகடுகள், சுய ஆதாரமுடைய வனிவான கூரைத்தகடுகள், பாசனக் குழாய்கள், நனைந்த தொட்டிகள், செப்டிக் டாங்குகள் முதலியன.

எவரெஸ்ட்

அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் லிமிடெட்
(டாளர் அண்ட் நியுவால் கூப்பின் அங்கத்தினர்கள்)

பார்க் டி, சிதோசர் எஸ்டேட்ட டர். அன்னி பெஸண்ட் ரோடு, ஒர்லி, பம்பாய்-18 WB.

மார்வல் ஹவுஸ், ஹனுமான் ரோடு, புது டெல்லி.

202, மவுண்ட் ரோடு, மதராஸ்-2.

எவரெஸ்ட் ஹவுஸ், 946, சேபர்ட் டவுன், ஹுபிலூர்-1

போதனூர் (கோயம்புத்தூர் ஜில்லா)

எவரெஸ்ட் ஹவுஸ் காட்டன் சீர் தர்தோலை ரோடு, கல்கத்தா-24.

C. 24(A) Tamil

வருங்காலத்தை உருவாக்குவதற்காகச்
சேமிக்கக் கற்றுக்கொடுங்கள் அவர்களுக்கு!
அவர்களுக்குக் கவலையில்லாத வாழ்வு. நாளைக்கோ? வருங்கால
உணர்வை அவர்கள் உள்ளதில்
புகட்டுங்கள். சேமிக்கக் கறறுக்
கொடுங்கள்! ஆம், ஸ்டேட்
பாங்கிலே.
சேவை புரிவதற்கே ஸ்டேட் பாங்க்

குழந்தை ஒரு மலர்

பெ.தூரன்

குழந்தை, உலகத்திற்குப் புதிதாக வந்த ஒரு மலர். அதை மலர் என்று சொல்வதைவிட அரும்பு என்று சொல்வதே மிகவும் பொருத்தமாக இருக்கும். இந்த உலகத்திலே வந்த பிறகு குழந்தையின் உள்ளமும், அறிவும் நாளாக நாளாக மலர்கின்றன. பிறப்பால் கிடைத்த திறமைகளெல்லாம் சூழ்நிலையின் உதவியால் தான் நன்கு வெளிப்படவேண்டும்.

ஆதலால் பெற்றோர்கள் குழந்தைக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குவதில் மிகுந்த அக்கறை செலுத்துதல் இன்றியமையாதது. குழந்தைக்கு இயல்பாக அமைந்துள்ள திறமைகளைத் தெளிவாக அறிந்துகொண்டு, அத்திறமைகள் ஓங்கி வளருவதற்கு வேண்டிய உதவியைச் செய்வது பெற்றோரின் தலையாய கடமையாகும்.

இந்த உலகத்திற்கு வந்தவுடன் குழந்தைக்கு எல்லாம் புதுமையாகத் தோன்றுகின்றன. அதன் கண் பார்வை செவிப்புலன் முதலியவை களெல்லாம் கூர்மை அடைய அடைய குழந்தை வியப்போடு சுற்றிலும் பார்க்கிறது; ஒலிகளை யெல்லாம் கேட்கிறது; தொட்டுப் பார்க்கிறது; சுவைத்துப் பார்க்கிறது. விளக்கைக் கூடத் தொட முயல்கிறது. பல குழந்தைகள் விளக்கைத் தொட்டுப் பார்த்தே அது சுடும் என்று தெரிந்து கொள்கின்றன. எதை எடுத்தாலும் குழந்தை உடனே வாயில் வைக்கும். இந்த உணர்ச்சிகள் குழந்தைப் பருவத்தில் மேலோங்கி நிற்கின்றன.

பெரிய ஓசையென்றால் குழந்தைக்கு இயல்பாகவே அச்சம் ஏற்படும்; அதைபோல மேலிருந்து கீழே விழுவதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டாலும் அது பயப்படும் என்று உளவியலறிஞர்கள் கூறுகிறார்கள். பக்கத்து வீட்டிலே ஒரு பையன் இருந்தான். அவன் இருட்டிலே செல்வதென்றால் அலறுவான். தாயும் தந்தையும் அவனுக்குத் துணையாக வருவதோடு விளக்கு ஒன்றையும் எடுத்து வர வேண்டும். இருட்டைக் கண்டு மிரளுதல் போன்ற பலவகையான அச்சங்கள் பெற்றோர்களாலோ மற்றவர்



களாலோ உண்டாக்கப்பட்டவையே யாகும். தன் குழந்தைக்கு ஏதும் தீங்கு நேரச்கூடாதே என்ற கவலையால் தண்ணீர்த் தொட்டிக்கு அருகில் செல்வதையே தாய் தடுத்து விடுவாள். ''தண்ணீருக்குப் பக்கத்தில் போனுல் அதில் விழுந்து இறந்து விடுவாய்'' என்றுகூடச் சில தாய்மார்கள் எச்சரிக்கை செய்வார்கள்.

மேல்நாட்டார் குழந்தைகளை வளர்க்கும் முறைகளில் பலவற்றை நாம் பின்பற்றுவது நல்லது. கடலின் கரை ஓரத்திலே அலே அதிகமில்லாத இடத்திலே அவர்களில் பலர் தம் குழந்தைகளேத் தாமாகவே சென்று குளிக்கும்படி உற்சாகப்படுத்துவதை நான் கண்டிருக்கிறேன். குழந்தைகளுக்குத் தீங்கு நேராதவாறும் பார்த்துக் கொள்வார்கள். அதற்காகத் தாங்கள் கொள்ளும் எச்சரிக்கைகளேக் குழந்தைகள் தெரிந்து கொள்ளும்படி நடக்கமாட்டார்கள்.

ஒரு நாள் ஓர் ஆங்கிலேயச் சிறுவன் தன் மாளிகையின் மேல்மாடியில் உள்ள கைப்பிடிச்சுவரின்மீது நடந்து கொண்டிருந்தான். தந்தை,அருகிலே இருந்து, குழந்தை தவறிக் கீழே விழாதபடி பார்த்துக்கொண்டார். அவருக்குள்ள கவலே குழந்தைக்குத் தெரியாது. இப்படி வளர்ப்பதாலேயே குழந்தை துணிச்சலோடு வாழக் கற்றுக்கொள்ளும்.

குழந்தையின் முதல் ஐந்து ஆண்டுகள் மிக முக்கியமானதாகும். ''இந்த ஐந்து ஆண்டுகளுக்குள்ளாகவே முழு மனிதனின் இயல்பு, திறமை எல்லாம் அமைந்து விடுகின்றன; பிறகு இவையே வெளிப்படுகின்றன'' என்று சிக்மண்ட் ஃபிராய்டு என்ற உளவியல நிபுணர் கூறுகின்றார். உளவியலிலேயே ஃபிராய்டு ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கியவர். நம் உள்ளத்திலே பகுதி பகுதியாக அறைகள் எதுவும் இல்லா விட்டாலும் ஆராய்ச்சிக்காக அதை இரண்டு முக்கியமான பகுதிகள் உள்ளதாகப் பிரிக்கலாம். ஒன்று நனவு மனம்; மற்றொன்று அடிமனம். இதை நனவிலிமனம் என்றும் கூறுவார்கள். மனமே ஒரு சூக்குமமான பொருள். ஆகவே அதை இவ்வாறு பிரிப்பது அதைப் பற்றி நன்கு அறிந்துகொள்வதற்காகவே என்பதைத் தெளிவாக நினேவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

குளிர்ப்பிரதேசங்களிலே கடலில் குன்றைப்போலப்பனிக்கட்டி மிதந்து வருவதுண்டு. அதில் கால் பகுதியே மேலே தோன்றும்; மற்ற முக்கால் பகுதி கடல் நீருக்குள்ளே மறைந்திருக்கும். இந்த மறைந்துள்ள பகுதியால்தான் கப்பல்களுக்கு அதிகமான சேதம் உண்டாகிறது. இதைப் போலத்தான் அடிமனமும் பெரும் பகுதியாக மறைந்திருந்து மனிதனே ஆட்டிவைக்கின்றதாம். இதை நன்கு ஆராய்ந்து முதலில் சொன்னவர் சிக்மண்ட் ஃபிராய்டு. ஆதலால் அவருடைய கருத்துக்கு மிகுந்த மதிப்புண்டு. ''முதல் ஐந்தாண்டுகளுக்குள்ளாகவே ஒருவனுடைய பிற்கால வாழ்க்கையமைப்பு உருவாகிவிடுகிறது'' என்று அவர் கூறியுள்ளதை



மீண்டும் இங்குத் திருப்பிச் சொல்லுகிறேன்.

உளவியலறிஞர்களிலே பலவகையான கொள்கைகளை உடையவர்கள் உள்ளனர். இருந்தாலும் அவர்கள் அனைவரும் ஃபிராய்டு கூறிய இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டே இருக்கிறார்கள். ''ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?'' என்ற பழமொழிகூட ஒருவகையில் இதைக் குறிப்பாகக் காட்டுகின்றது என்று கூறலாம். வளைதல் என்பதற்கு வலிந்து வளைத்தல் என்று பொருள் கொள்ளக்கூடாது; இயல்பாக வளைவதையே இது சுட்டிக்காட்டுகிறது.

சில உளவியலறிஞர்கள் ஏழு வயது வரை இதை நீட்டிப்பார்கள். எப்படியானலும் குழந்தையின் முதல் ஐந்து அல்லது ஏழு ஆண்டுகள் மிக முக்கியமானவை என்பதை நாம் உணர்தல் வேண்டும். ஆகவே இந்தப் பருவத்திலே குழந்தையை வளர்ப்பது என்பது பெற்றோரின் பெரிய பொறுப்பு ஆகின்றது.

பெற்றோர்களிடமிருந்து பாரம்பரியமாகப் பெற்ற திறமைகளும், பண்புகளும் முக்கியமானவை என்று சிலர் கூறுவார்கள். பாரம்பரியத்தை விடச் சூழ்நிலையே ஒருவனுடைய பிற்கால வளர்ச்சிக்கு முக்கியமானது என்று வேறு சிலர் கூறுவார்கள். உடல் அமைப்பிலே பாரம்பரியத் தோற்றம் எளிதாகத் தெரிவது போல மனத்திறமைகளை எளிதாகக் கூறமுடியாது என்பதற்கும் பல சான்றுகளைக் காட்டலாம். ஆனால் பாரம்பரியம், சூழ்நிலை ஆகிய இரண்டுமே முக்கியம் என்பதை நாம் எளிதில் உணர்ந்துகொள்ள முடியும்.

ஒரு பையன் ஓவியம் வரைவதிலே மிகுந்த திறமையைப் பாரம்பரியமாகப் பெற்றிருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். பொருளாதார வசதியின்மையால் அவன் நீலகிரி மலையிலே மாடுமேய்த்துக் கொண்டு காலங் கழிக்கிறான். அவன் பச்சை யிலைகளைக்கொண்டு அழகான படங்களைப் பாறையின்மீது வரைவான். பார்ப்பவர்கள் எல்லாம் வியந்து பாராட்டுவார்கள். அத்துடன் அவன் கலைத்திறமை முடிந்துவிடுகிறது. அவன் ஓர் ஓவியக்கலைப் பள்ளியிலே சேர்ந்திருந்தால் அவன் பாரம்பரியமாகப் பெற்ற கலைத்திறமை நன்முக ஒளிவீசியிருக்கும். சூழ்நிலை அதற்குத் துணையாக இல்லாமற்போகவே அவனுடைய கலை மங்கிவிடுகிறது.

புரு ஒன்று வானிலே பறப்பதற்கு எந்தச் சிறகு முக்கியமானது என்று யாராவது கேட்டால் இரண்டு சிறகுகளும் முக்கியம் என்று தயக்கமின்றிக் கூறிவிடுவோம் அல்லவா? புருவின் இரண்டு சிறகுகளைப் போன்றவையே பாரம்பரியமும் சூழ்நிலையும் என்று உளவியலறிஞர்கள் கூறுகிறார்கள். ஒன்றில்லாமல் மற்றது செழிக்காது. பாரம்பரியமாக ஓவியக் கலைத்திறன் பெறுதவன் ஓவியக் கலைப்பள்ளியில் சேர்ந்து முயன்று படித்தாலும் அவனுக்கு, அவன் முயற்சிக்குப்

பலனுக ஒரளவு ஒவியம் நீட்ட இயலும். ஆனல் சிறந்த ஓவியன் ஆக முடியாது.

இந்த இடத்திலே ஒன்றை நாம் உள்ளத்தில் நன்கு பதியவைத்துக் கொள்ளவேண்டும். எந்தக் குழந்தைக்கு எந்த வகையான திறமை வாய்த்துள்ளது என்பதைத் திட்ட மாகக் கூற இயலாது. ஆகையால் நல்ல சூழ்நிலையை அமைத்துக் கொடுப்பதில் பெற்றோர்கள் பெரிதும் கவனம் செலுத்தவேண்டும். பெற் றோருக்கு ஏதாவது ஒரு கலையில் விருப்பமிருக்கலாம். அந்தக் கலையில் குழந்தை முன்னேறவேண்டும் என்று பெரிதும் வற்புறுத்துவது நல்லதல்ல. குழந்தையின் திறமை நாளடைவில் தானுகவே வெளிப்படும். அதை உணர்ந்து அதற்கு உதவி செய்வதே அறிவுடைய பெற்றோர்களின் செய லாக இருக்கவேண்டும். அதிலே அன்பு வேண்டும்; பரிவு வேண்டும்; உற்சாகப்படுத்தும் ஆர்வம் வேண் டும். அப்போதுதான் குழந்தையின் முழுத்திறமையும் வளர்வதற்கு உத வியாக இருக்கும்.

குழந்தை ஓர் அழகிய மலர். அம் மலர் தானுக இதழ் அவிழ்ந்து மலர வேண்டும். அதற்கு இடைஞ்சல் செய்யாமல் அன்புடன் உதவுவதே அறிவு வாய்ந்த பெற்றோரின் முதற் கடமையாகும்.

அவனை வாழ்த்துங்கள்

நீளப் பதிகின்ற நிலத்தை வளமாக்கி
நெற்றித் துளிகளையே நெடுகப் பதிவாக்கி
தோளைப் புடம்போட்டுத் துயரைப் புறமோட்டித்
தனியே நடக்கின்றன் ஏழைப் பேருழவன்.
கூழைக் குடித்தாலும் கும்பி நிறைத்தாலும்
கோடு கிழித்தாற்போல் கழனி நிறைவாக்கி
ஆழ உழுகின்றன், அவனை வாழ்த்துங்கள்!
ஆக்கம் தருகின்ற நோக்கம் நமக்கன்றே?

என்றே நிறைகின்ற இயற்கை தருகின்ற
இனிய மழைநீரும் இன்றே பொய்யாக
வென்றே தருகின்றன் வெறுமை உடலோடு
வேண்டாத் துயரெல்லாம் கூட்டும் சுமையோடு
பசுமைச் சுவைதேடும் பாரோர் உழவர்க்குப்
பஞ்சம் பசியென்றல் பழிகள் நமக்கன்றே?
பசுமை வாழ்த்துங்கள் பழமை போக்குங்கள்
பாரின் உயர்வெல்லாம் பயனும் உழவால்தான்...!

— இளசை அருணு



கம்பு

ஏற்றுக் கொள்ள என்ன தடை?

கேரளா மாநிலம் ஒன்றைத் தவிர மற்ற எல்லாத் தென் மாநிலங்களிலும் கிராமப்புறங்களில் அரிசி, கோதுமை ஆகியவையுடன் சேர்த்து முக்கிய உணவுபொருளாகக் கம்பும் உட் கொள்ளப்படுகிறது. கம்பை முக்கிய உணவுப்பொருளாகப் பயன்படுத்து வோர்க்குக் கண், தோல் சம்பந்த மான, உணவுச் சத்துப் பற்றுக்குறை நோய் காணப்படுவது இல்லை.

எனவே ஏழைக்கேற்ற உணவு என்ற நிலை நீங்கி எல்லோருக்கும் கம்பு நல்ல உணவு என்று ஏற்றுக் கொள்ள என்ன தடை?

இனிய கின்பண்டங்கள்

(அ) கம்பு ரவாலட்டு (முதல் வகை):

தயாரிப்பிற்குத் தேவையான பொருள் கள்:

கம்பு மாவு (ரவா போன்று அரைத்தது)	120 கிராம்
நெய்	40 கிராம்
வேர்க்கடலைப் பருப்பு	50 கிராம்
கரும்புச் சர்க்கரை	40 கிராம்

தயாரிப்பு முறை:

கம்பு மாவை வாணலியில் இட்டு, மணம் வரும்வரை வறுக்கவும். வேர்க் கடலையைப் பொடி செய்து கம்பு மாவுடன் கலக்கி, ஒரு தட்டில் எடுத்து வைத்துக்கொள்ளவும். பின்பு கரும்புச் சர்க்கரையைச் சேர்த்து நன்றாகக் கலக்கவும். நெய்யை உருக்கி, சூடான நெய்யைச் சிறுகச்சிறுக அவ்வப்போது கரண்டி யினால் எடுத்து ஊற்றிச் சாதாரண லட்டு அளவில் 2 முதல் 3 முறை பிடிக்கவும். தட்டில் இருக்கும் மாவு தீரும் வரையில் இதேபோல் செய்ய வும்.

சற்று ஆறின பிறகு உண்ணச் சுவை யான உண்டி!

கம்பு ரவாலட்டு (இரண்டாம் வகை):

இம்முறையில் கரும்புச் சர்க்கரைக் குப் பதில் அஸ்கா சர்க்கரை உப யோகிக்கப்படுகிறது. அஸ்கா சர்க் கரையைத் தண்ணீரில் போட்டுக் கொதிக்கவைத்துப் பாகு காய்ச்சவும். வறுத்த கம்பு மாவு, பொடி செய்த வேர்க்கடலை ஆகியவற்றைப் போட்டுக் கிளறிக் கெட்டிப் பாகுப் பதத்தில் அடுப்பிலிருந்து கீழே இறக்கி வைத்து உடனே லட்டு உருண்டைகளாகப் பிடிக்கவும். முதலில் சொன்ன வகையைவிட இதன் சுவை தனி!

(ஆ) கம்பு வடை:

கம்பு மாவு	125 கிராம்
கொண்டைக் கடலை	60 கிராம்
வெங்காயம்	3
மிளகாய்	7
உப்பு	தேவையான அளவு
தண்ணீர்	தேவையான அளவு
எண்ணெய்	வேண்டிய அளவு

தயாரிப்பு முறை:

கொண்டைக் கடலையை ஒரு மணி நேரம் ஊறவைத்து, குறைந்த அளவு தண்ணீர்விட்டுப் பெரும்படியாக அரைக்கவும். (அதிக நயமாக அரைக்கக்கூடாது) கம்பு மாவை இத் துடன் பிசைந்து மிளகாய், வெங்கா யம் இவைகளை நறுக்கிப் போட்டுத் தேவையான அளவு உப்புச் சேர்க்க வும்.

குறிப்பு: அதிக அளவு தண்ணீரோ அல்லது குறைந்த அளவு தண்

ணீரோ இருத்தல் கூடாது. குறைந்த அளவு தண்ணீர் இருப்பின் வடைகள் இறுகலாகிவிடும். ஆகவே நல்ல பதத்துடன் இருக்கும் அளவுக்கு மட்டும் தண்ணீர் சேர்க்கவேண்டும்.

மேற்சொன்னவாறு தயாரிக்கப் பட்ட மாவைச் சிறிது சிறிதாக எடுத்து வாழை இலைமேல் வைத்துத் தட்டி மற்ற வடைகள் சுடுவதுபோல் எண்ணெயில் சுடவும்.

சூடாக உண்டால் சுவையாக இருக்கும்!

— கோவையிலிருந்து வெளிவரும் 'விவசாயச் செய்திக் கதிர்' இதழிலிருந்து.

கம்பு * இரு புது ரகங்கள்

வீரிய ரகங்களான எச்.பி-3, எச்.பி-4 ஆகிய இரு புது வகைக் கம்பு கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிடப்பட்ட எச்.பி-1ஐ விடச் சிறந்தவையாக இருக்கின்றன வென்று தெரிய வருகிறது.

எச்.பி-3 குறைந்த அளவு மழை பெய்யும் இடங்களுக்கும், எச்.பி-4 போதுமான அளவு மழை பெய்யும் இடங்களுக்கும் பொருத்தமானது.

தேர்வு செய்ததில், எச்.பி-1ஐ விட 11 சதவிகிதமும் உள்ளூர் ரகங் களைவிட 50 சதவிகிதமும் அதிக மகசூல் கொடுத்த எச்.பி-3, ஹெக் டேர் ஒன்றுக்கு 2,539 கிலோ மகசூல் தந்தது. எச்.பி-4, எச்.பி-3ஐயும் விடச் சிறந்த மகசூல் தந்தது. இந்த ரகம் எச்.பி-1ஐவிட 26 சதவிகிதம் மிகுதியாகவும், ஹெக்டேர் ஒன்றுக்கு 3,296 கிலோ கிராம் மகசூலும் தந்தது.

கவர்ச்சிகரமான நிறம் கொண் டுள்ளதால், எச்.பி-3இன் விற்பனை விலையும் கூடுதலாக இருக்கிறது.

இந்த இரு புது ரகக் கம்புகளுமே எச்.பி-1, உள்ளூர் ரகங்களைவிட அதிகத் தீவனம் கொடுக்கிறது.

— மைய அரசு வெளியிடும் 'பண்ணைச் செய்தி' (Farm News) யிலிருந்து.

திரு. எஸ். எஸ். தென்னரசு அவர்கள் தமிழ்நாடு தொழில் அமைச்சர் மாண்புமிகு **செ. மாதவன்** அவர்களைப்பற்றி எழுதும் அரிய கட்டுரை அடுத்த இதழில் இடம்பெறும்.



நவீன முறையைப் பின்பற்றுங்கள்

உங்களுடைய அஞ்சல் நிலையம் தற்போது அல்லது உப நிலையமாக இருந்தால், சேமிப்புக் கணக்கில் இன்றைய நாகரீகமான செக் வசதியளிக்கிறது.

சேமிப்புக் கணக்கில் செக் முறையைக் கையாளுங்கள்

- செக் வசதி பெற கணக்கில் ரூ. 100 இருந்தால் போதுமானது.
- இவ்வசதி செக்குகள்தான் கொடுக்கலாம் என்ற கட்டுப்பாடு கிடையாது.
- உள்ளூர் செக்குகளிற்கு வதல் கட்டணம் கிடையாது.
- செக்குகள் மூலம் பொசிட்டும் செய்யலாம்.



தேசீய சேமிப்பு நிறுவனம்

Comp 69/236

5. கண்ணுேடு கண்ணினை நோக்கினு:

வேணுகோபாலரின் மனைவி சிவகாமியிடத்தில் மலர்க்கொடிக்கு மிகவும் பாசம். சிவகாமிக்கும் அவளைக் காணுவிட்டால் பைத்தியம் பிடித்தது போலாகிவிடும். கல்லூரி விடுமுறை நாட்களிலும், ஞாயிற்றுக் கிழமைகளிலும் மலர்க்கொடி அங்கு தான் செல்வாள். பின்கட்டில் சமையலறைக்குச் சென்று மணிக் கணக்கில் இருவரும் இனிக்க இனிக்கப் பேசுவார்கள்.

மணிக்கணக்கில் மேடையில் அழகு சொட்டச் சொட்டப் பேசுவது ஒரு கலை. ''தான் கருதியவற்றை நன்கு சொல்ல வல்லவனுய்ச், சொல்லும் போது சோர்வு இல்லாதவனும், அஞ்சாதவனுய் உள்ளவனை, மாறு பாட்டால் வெல்வது யார்க்கும் முடியாது. கருத்துக்களை ஒழுங்காகக் கோர்த்து இனிமையாகச் சொல்ல வல்லவரைப் பெற்றுல் உலகமே விரைந்து அவருடைய ஏவலைக் கேட்கும்; அதன்படியே நடக்கும். குற்ற மற்ற சொற்கள் மிகச் சிலவாக இருந்தாலும் அதைச் சொல்லும் திறம் அறிந்து வழங்கவேண்டும். இத்தகைய சொல்வன்மையைவிடச் சிறந்த அறமும், பொருளும் இல்லை. கேட்டவரைத் தன் வயப்படுத்தும் பண்புகளுடன், கேட்காதவரும் கேட்க விரும்புமாறு கூறப்படுவதுதான் சொல்வன்மையாகும். இத்தகைய நாவன்மையாகிய நலம் ஒருவகைச் செல்வமாகும். அந்த நாநலம் தனிச் சிறப்புடையது.'' மேடைப் பேச்சுக்கு மட்டுமோ அல்லது சொற்பொழிவுகள் வழங்கப்படுகின்ற மாமன்றங்களுக்கு மட்டுமோ இந்து இலக்கணம் அன்று. பேசத் தொடங்கு முன்பு, தம் முன்னிலையில், தாய் தந்தையாக இருந்தாலும், குழந்தையாக இருந்தாலும், உற்றுர் உறவினர், நண்பர்களாலுலும் அத் தகைய இலக்கணத்தை மனத்தில் கொண்டு பேச வேண்டும் என்பதை நன்கு அறிந்தவள் மலர்க்கொடி.

சிவகாமியிடம் தனிப்பட்ட முறையில் அப்படித்தான் மணிக்கணக்கில் பேசுவாள். சலிப்பு ஏற்படாதவாறு பேசுவாள். ''இன்னும் கொஞ்ச நேரம் இருந்து பேசமாட்டாளா?'' என்ற ஆவலைத் தூண்டிவிடுவாள். சிவகாமி விரும்புவனவற்றைப் பேசி, அவளுடைய பேச்சின் பயனை ஆராய்ந்து கொள்வாள். மற்ற இன் பங்களைவிட இப்பேச்சுத் துணையே சிவகாமியின் வாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. சத்தம் போட்டுக் கத்தி, தினமும் யாரையாவது வம்புக் கிழுக்காவிட்டால் சில பெண்களுக்கு நிம்மதி இருக்காது அப்படிப் பேசுவதன் பயனை அவர்கள் அப்போது அனுபவிக்கா விட்டாலும் பிறகு அனுபவித்துத்தான் ஆகவேண்டியிருக்கிறது. சமுதாயத்தின் தூற்று தலுக்கு ஆளாக்கப்பட்டு, பேய்போல் ஒதுக்கிவைக்கப்படுகிறுர்கள். அவர்

கள் ''கண்ணில்படாத தூரத்து நிற்பதே நல்ல நெறி'' என்று விலகுகிறார்கள்; விலக்கி வைக்கப்படுகிறார்கள். எண்ணத்தில் மட்டும் அவர்கள் பேய்களாக ஆகிவிடுவதில்லை. உருவத்திலும்கூட அப்படி ஆகிவிடுகிறார்கள். சினம் பொங்குகிறது. உடல் உறுப்புகளின் வளர்ச்சி தடைப்படுகிறது. மன அமைதி குறைகிறது. தோல் வற்றிச் சுருங்குகிறது. கண்கள் ஒளியிழந்து விடுகின்றன. நெற்றி சுருங்குகிறது. முகம் கறுத்துவிடுகிறது. முதுகு கூனுகிவிடுகிறது. நெஞ்சம் வலு இழக்கிறது. நிற்ப தறகுச் சத்தியில்லாமல் உடல் நடுங்குகிறது. இவ்வளவு கொடுமையையும் அனுபவிக்க வேண்டி வருகிறது.

சிவகாமி மலரைக் கண்டு பேச முடியாவிட்டால் மனம் உடைந்து விடுவாள். மலருக்கோ அவளிடம் உரையாடுவதில் மகிழ்ச்சி இருந்தது. ஆனல் அவளோடு பேசாத நேரத்திலும் மகிழ்ச்சி இருந்தது. மலருக்குச் சிவகாமியைப்போல அவளைக்கண்டு பேசினுல்தான் கவலே தீரும் என்பு தில்லே. ஆனல் சிவகாமி, தன் மீது கொண்டிருக்கும் அன்பையும் தன்னிடம் பேசுவதில் அவளுக்கு ஏற்படும் களிப்பையும் நன்முக உணர்ந்தவள். மலர்க்கொடிக்கோ, இன்பம் தரக் கூடியவைகள் எவ்வளவோ இருந்தன. இலக்கண நூல்களைக் கண்ணுறுவதிலும், தன்னே அலங்கரித்துக்கொள்வதிலும், வீளையாடுவதிலும், இப்படி ஒவ்வொன்றிலும் அவள் இன்பம் அடைந்து கொண்டிருந்தாள். ஆகையால் சிவகாமியிடம் உரையாடுவதில் மட்டுமே ஒரு தனியான இன்பத்தைப் பெறுவது போன்ற ஒரு குறுகிய கூட்டுக்குள் அவள் அடைபட்டிருக்கவில்லே என்முலும், சிவகாமி, தன்னுல் மகிழ்ச்சி அடைகிருள் என்று உணரும்போது அம்மகிழ்ச்சிக்குத் தடையாக அவள் நிற்க விரும்பியதில்லே. ஆகையால் அடிக்கடி அவளிடம் செல்வாள்.

அன்று என்னவோ சிவகாமியைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் மிகுந்தது. முதல்நாள் சோமுவின் மூலம் தனக்கு அனுப்பியிருந்த இலிப்புப் பண்டங்களே எவர்சில்வர் பாத்திரத்திலிருந்து எடுத்து டப்பியில் போட்டு அடைத்து வைத்துவிட்டுப் பாத்திரத்தைக் கொண்டுபோய் அவளிடம் கொடுத்துவிட்டு வரலாம் என எண்ணி விரைந்தாள். பட்டுப் புடவைகளே அவள் அணிவது கிடையாது. சென்ற ஆண்டு பொங்கலுக்குக் கொடுத்த பட்டுப்புடவையைப் புத்தம் புதிதாக அப்படியே வைத்திருந்தாள். அதை அப்போது உடுத்திக்கொண்டாள், ரோசா வண்ணச்சேலே அது. அதன் அடியில் தாமரைப்பூ 'பார்டர்' போட்டிருந்தது. பாதத் தாமரையுடன் அச்செயற்கைத் தாமரை மலர்களும் அன்றலர்ந்த மலர்கள் போல் புதுமைச் சிரிப்பைக் காட்டிக் கொண்டிருந்தன. அதே வண்ணத்தில் 'ஜாக்கெட்டும்' அணிந்திருந்தாள். அந்த ஜாக்கெட்டில் கைகளேச் சுற்றியும் தாமரை மலர்கள் சரிகை இழைகளால் பின்னப்பட்டிருந்தன. வலக் கையில் இரு முத்து வளையல்களேயும் வலக் கை மோதிர விரலில் சிவப்புக் கல் இழைத்த சிறு மோதிரத்தையும் இடக் கையில் சிறு கைக் கடிகாரத்தையும் அணிந்திருந்தாள். காதில் சிவப்புக் கல் தோடுகளே அணிந்திருந்தாள். தலே நிறையப் பூச்சூடியிருந்தாள். பெண் மானேப்போன்ற இளமைப் பார்வையும் நாணமும் உடைய அவளுக்கு, மற்ற அணிகள் எதற்கு?

திருவிழாத் தேரைப்போல, அழகை எல்லாம் கூட்டி அசைந்தாடி ''இட்ட அடி நோக, எடுத்த அடி கொப்பளிக்க'', சிவகாமியின் இல்லம் சென்முள்.

சிவகாமியோ, மலரை அவ்வளவு அழகாக அதற்கு முன்பு பார்த்தது கிடையாது. உடையழகா அல்லது உள்ளப் பூரிப்பா என்று அவளால் பகுத்து உணரமுடியவில்லே. முன் பெல்லாம் அவள் அதரங்களில் முகிழ்த்த புன்சிரிப்பைக் கண்டிருக்கிருள். ஆனல் இன்முே அவள் அங்கங்கள் எல்லாம் சிரித்து அழகு காட்டிக் கொண்டிருந்தன. பேரழகு காட்டும் பேரிளம் பெண்மையை மட்டும் சிவகாமியால் நன்கு பார்த்து உணர்ந்து கொள்ளமுடிந்தது. அவள் உள்ளத்திலிருந்து பெருமூச்சு புயலாக அடித்துக்கொண்டிருந்தது.

தேங்காய்ச் சோற்றை உண்டு விட்டுத்தான் செல்லவேண்டுமென்று

அவளே வற்புறுத்தினாள். பளபள வென்றிருந்த எவர்சில்வர் தட்டு நிறையச் சோற்றைப்போட்டு, அவளே உண்ணவைத்து எதிரில் உட்கார்ந்து வைத்த கண் வாங்காமல் அவளையே உற்றுப் பார்த்து அவள் அழகையே உண்டு கொண்டிருந்தாள். அவளைக் குழந்தையாக்கி இடுப்பில் தூக்கி வைத்து, கையில் அணைத்து முகத்தின் அழகைப் முகத்தையும் குளிர்தரும் முழுமதியாக்கிக்கொண்டாள்.

வழக்கத்துக்கு மாறுகச் சிவகாமி அன்று பேசவில்லை. அவள் பேச்சில் எதையோ எதிர்பார்த்துக்கொண்டு வந்த மலரும் அந்த எண்ணத்தையே அங்கு மறந்தாள். இருவரிடையேயும், என்றுமில்லாத இன்ப உணர்வுகள் பேசிச் சிரித்துக்கொண்டிருந்தன.

பார்த்துக்கொண்டு, முழு நிலவில், எழுமாடத்து நிலாமுற்றத்தில், தங்கக் கிண்ணியில் பால் சோற்றை இட்டு, இடக் கையில் வைத்துக் கொண்டு, வலக் கையை வான் அளவுக்கு உயர்த்தி, ஆட்காட்டி விரலால் நிலாவைக் காட்டி, களங்கமற்ற முழுமதியை அவள் முகத்தில் கண்டு களித்து, அவளுக்குப் பாலுணவு ஊட்டுவது போன்று எண்ணித் தன்

''அம்மா'' என்று ஓடிவந்த சோமுவும் அவளைப் பார்த்துத் திகைத்து நின்றுவிட்டான். அவளையும் ஓரக் கண்ணால் கண்டாள் மலர். ஓர் இளமைச் சிரிப்பைத் தவழவிட்டாள். அதில் ஏளனமும் கலந்திருந்தது. அதற்குப் பொருளும் வேறு. அதை சோமு எங்கே அறியப்போகிறான்! அவனிடம் உணர்வு மட்டும்தானே இருந்தது.

தனக்குத் தொடுத்து வைத்திருந்த முல்லை மலர்ச்சரத்தை அவள் தலை நிறையச் சூட்டி அவளுடைய கருங் குழலை மலர்க்காடு ஆக்கினாள். தன் கணவர் அப்போது இல்லையே; இருந்தால் அவரை அவளுடன்விடுதிவரைக்கும் அனுப்பி வைக்கலாமே என எண்ணினாள். பின் ''சோமு'' என்று அழைத்தாள். அதற்குள் அவள் விடைபெற்றுக்கொண்டு விடுதி திரும்பினாள். சிவகாமி வாயில்வரை வந்து வழிசூட்டி அனுப்பிவிட்டு மலரின் பின்னழகையும் கண்டு சிலைபோல் நின்றிருந்தாள்.

மலர்க்கொடி பாதித் தொலைவைத் தான் கடந்திருப்பாள். திருமால் எதிரே வருவது அவள் கண்களுக்குத் தெரிந்தது. கண்களைத் தாழ்த்திப் பார்த்துத் தன் புடவையைக் கொஞ்சம் சரிசெய்துகொண்டாள். நடையின் வேகம் குறைந்தது. அன்னம்போல நடையின்றுகொண்டிருந்தாள்.

வான்நோக்கி வளர்ந்த விளக்குக் கம்பம் நிழலில்லாத நீல விளக்கு ஒன்றை நிலத்தாய்க்குக் காட்டிக் கொண்டிருந்தது. நிலவுக்குப் போட்டியாக அது சிரித்துக்கொண்டிருந்தது. அக்கம்பத்தின் அடியிலே நின்றாள் அவள். மின்னும் சரிகைத் தலைப்பைக் கொண்ட அப்புடவைத் தலைப்பு மெல்லிய காற்றில் துவண்டு கொண்டிருந்தது. அதன் ஒரு நுனியை இழுத்து, தன் காந்தள் விரல்களால் தலைப்பில் இருந்த சரிகை இழைக் குஞ்சத்தைப் பிடித்துக் கொண்டு வலக் கை விரல்களால் குஞ்சத்தின் நுனியைத் திருகிக் கொண்டிருந்தாள்.

அவன் அவள் அருகில் வந்து நின்றான்.

அவன் நோக்காதபோது அவள் அவனை நோக்கினாள். அவன் தலை வணங்கினான். அவன் பார்த்தபோது அவள் நிலத்தைப் பார்த்தாள். அடுத்து அவன் பார்த்தபோது அவள் அவனைப் பார்த்து மெல்லச் சிரித்தாள். அசைந்தாடும் மயில் போன்ற சாயல் அவளுக்கு; அவளிடம் எத்தனையோ அழகுகள் உண்டு. அதில் ஒன்றுதான் அவன் பார்த்தபோது நேரே அவனை குறித்துப் பார்க்காமல் கடைக் கண்ணித்து நோக்கிச் சிரிக்கும் சிரிப்பு. அவள் பார்வை அவனுடைய அன்புப் பயிருக்கு அவள் வார்த்த தண்ணீராக இருந்தது.

பின்னர் ''உள் நிறையோடு, உணர்வும் ஒன்றிட'' அவர்கள் கண்கள் ஒன்றையொன்று கதுவிக் கொள்ள, அவனும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்.

''திருகுழந்தவேலர் தன் பாட்டனார் அம்பலவாணரின் அருமருந்தன்ன பேரன். நட்பைப் போல் 'செயற்கரிய யாவுள' என்று உணர்ந்தவர்! அறிவுடையாரின் நட்பு, பிறை நிறைந்து வருதல் போன்ற தன்மையுடையது. அறிவில்லாதவரின் நட்பு, முழுமதி தேய்ந்து பின் செல்லுதல் போல்வது என்பதை அறிந்தவர்; நூலின் நற் பொருள் கற்கக் கற்க மேன்மேலும் இன்பம் தருவதைப்போல் பழகப் பழக நற்பண்பு உடையவரின் நட்பு, இன்பம் தரும் என்பதை உணர்ந்து அனுபவித்தவர்; உணர்ச்சியினால் என் பாட்டனாரை இணைத்தவர். முகமும் அகமும் மலரும்படியாக உள்ளன்பு கொண்டு, நட்புச் செய்தவர்! அவருடைய அருமை மகளல்லவா இவள்'' என்று அவன் உள்ளம் பூரித்தது. முகம் ஞாயிற்றை ஒத்தது.

''திருகு. அம்பலவாணர் குணத்தில் சிறந்தவர்; குடியால் உயர்ந்தவர்; குற்றமில்லாத ஏற்றத்தைப் பெற்றவர்; குறள் அறிந்த மேதை; பண்பின் பெட்டகம்; அறிவின் சிகரம்; ஆராய்ந்து நட்புக் கொள்பவர்; பழகிண்டு அஞ்சுபவர்; நன்மையல்லாத செயலைக் கண்டபோது வருந்தும்படியாக இடித்துச் சொல்லி உலக நடையை அறிய வல்லவர்; ஊக்கம் குறைவதற்குக் காரணமான செயல்களை எண்ணுகிருப்பவர்; அதுபோல் துன்பம் வந்தபோதும் முயற்சியைக் கைவிடாதவர்; உணர்வும், அறிவும், ஆற்றலும் பெற்றவர்; அன்பு, அருள், ஈகை ஆகிய பண்பு நலன்களையெல்லாம் பெற்றவர். அப்பா, அவர்களைப்பற்றி அடிக்கடிக் கூறுவார். அவர் எழுதிய கடிதங்களையெல்லாம் காட்டுவாரே. அதில் எழுதியிருந்த குறட்பாக்களை அனைத்தையும் நான் கற்றுக்கொண்டேனே! எனக்கோ மற்றவர்களுக்கோ அறிவுரைகள் கூறும்போதெல்லாம், அப்பா அடிக்கடி உணர்த்துவார் ''ஆகாறு அளவிட்டிதாயினும்

கேடில்லீ, போகாறு அகலாக்கடை'' என்று! அப்போதெல்லாம் வள்ளுவர் கூறியிருக்கிறார் என்றே, இலக்கியங்கள் கூறுகின்றன என்றே சொல்வதில்லீ. 'அம்பலவானர் சொல்வார்' என்றுதான் சொல்வார். இலக்கியங்களீயும் இலக்கியம் படைத்தவர்களீயும் அவரோடு இணைத்துத்தான் பார்ப்பார். அப்படிப்பட்ட தியாக சீலரின் மகன் வயிற்றுப் பிள்ளீயா திருமால்'' என்பதை அவள் எண்ணும்போது அவள் உள்ளம் வியந்து பூரித்தது. அவள் முகம் அப்போது முழுமதியை ஒத்திருந்தது.

ஞாயிறும் திங்களும் ஒன்றையொன்று சந்தித்தன.

அவர்கள் உணர்வு ஒன்றியது. முகமும் அகமும் மலர்ந்தன.

பேசாமலே பிரிந்தனர் உடலால். நெஞ்சின் காதற்குறிப்புகள் கண்ணில் புலப்படுமாறு இரண்டு நோக்கும் தம்மில் ஒக்கக் குளிர்ந்திருக்கப் பெற்றன. அதனால் வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல. அவள் நோக்கம் உணர்ந்தன்றி எவரும் வேறில்லீ என் பதனீயும் அவன் நோக்கம் இதயத்தில் நீ ஒருத்தியே அமர்ந்தாய் என் பதனீயும், இமை கொட்டும் நேரத்திலே உணர்த்திக்கொண்டன.

(தொடரும்)

வையம் வாழக் குறள்தந்த
வள்ளுவன நமது முன்னவனும்
தெய்வப் புலமை வள்ளுவனீத்
தினமும் போற்றித் தொழுதிடுவோம்!

உளநோய் தீர்க்கும் மருந்தாகி
உணர்வை வளர்க்கும் விருந்தாகும்
தெளிதமிழ்க் குறனீ நாம்கற்றுச்
சிறுமை நீங்கி வாழ்ந்திடுவோம்!

ஓட்டைச் சாண்மனம் உடையவனீ
உலகின் மனிதன் எனமாற்றும்
ஏட்டைத் தந்த வள்ளுவனீ
இனிதே கற்றுத் தேர்ந்திடுவோம்!

சத்துப் பொருள்கள் பலகூட்டிச்
சமைத்த உணவாம் குறளமுதை
நித்தம் கற்றுத் தெரிந்திடுவோம்
நிறையுடை யோராய் வாழ்ந்திடுவோம்!

உலகின் ஒருமை பேணிடவும்
ஒற்றுமை யாக வாழ்ந்திடவும்
நலங்கள் பலவும் பெற்றிடவும்
நாளும் திருக்குறள் கற்போமே!

அறம்பொருள் இன்பம் கூறுகிற
அருங்குறள் நமக்கு வழிகாட்டும்
பிறழா தவ்வழி நின்றிட்டால்
பேதையும் மேதை யாகிடுவான்!

வாழ்வே குறளுக் குரையாஞல்
வையகந் தன்னில் துன்பமிலீ
தாழ்வும் இல்லீ; இறப்புமிலீ
தரணியில் இன்பம் பொங்கிடுமே!

[சென்ற இதழின் தொடர்ச்சி]

சத்தூட்டத் திட்டத்திற்கு சத்தூட்டுவோம்

[பவானிசாகரில் நடந்த சத்தூட்டத் திட்டக் கருத்தரங்கப் பேச்சு.]

வளம் குன்றிய பல நாடுகள் இன்று வெகுதூரம் முன்னேறியிருக்கின்றன. வளத்திலும் நலத்திலும் அன்று சிறந்து விளங்கிய நாம் பின் தங்கிய நிலையில் இன்று இருக்கின்றோம். எந்த அளவுக்குப் பின்தங்கியிருக்கிறோம் என்று கணக்கிட்டுப் பார்க்கும் மனப்பக்குவம் நமக்கில்லை.

நம்மிடையே நீர்த்தேக்கங்கள் இருக்கின்றன. மலைச்செல்வமிருக்கிறது. அங்கே மழைச் செல்வமிருக்கின்றது. அதனால் பயனடையும் வயல்கள் நிறைய இருக்கின்றன. வற்றாத நதிக்குச் சொந்தக்காரர்கள் நாம். மற்ற நாடுகளுக்கு உணவு கொடுத்த பெருமை நமக்குண்டு. உலகம் முழுவதற்கும் உணவு கொடுத்திருக்கிறோம் என்று சொல்லும் உரிமையுடையவர்கள். ஒரு காலத்தில் வீரம் நம்மிடையே விளையாடியது என்றால் உணவு கிடைத்தது, உடலிலே தெம்பு இருந்தது. தினவெடுத்த தோள்கள் எதையும் செய்யும் வலிமையும் ஆற்றலும் பெற்றிருந்த நாடு இது. அந்த நாட்களிலே மற்ற நாடுகள் பொன்னும் பொருளும் இங்கிருந்து எடுத்துச் சென்றன.

நம்மைப் பார்த்து அவர்கள் வேகமாக வளரும் முயற்சியில் ஈடுபட்டார்கள். அவர்கள் உடலை வளர்த்துக் கொண்டார்கள்; உள்ளத்தை வளர்த்துக் கொண்டார்கள்; சமுதாயத்தை வளர்த்துக் கொண்டார்கள்; பொருளாதாரத்தை வளர்த்துக் கொண்டார்கள். இப்போது அந்த நாடுகளிடமிருந்து உதவியை எதிர் பார்க்கும் நிலைக்குத் தாழ்ந்திருக்கின்றோம் நாம். அப்படி முன்னேறிய அமெரிக்கர்கள் சந்திரனே எட்டிப் பிடித்து விட்டார்கள். அவர்கள் ஒரே ஒரு கடவுளை நம்புகிறவர்கள். ஆயினும் 2 இலட்சத்து 40 ஆயிரம் மைல்கள் முன்னேறிச் சந்திரனில் அடியெடுத்து வைத்துவிட்டார்கள்.

நம்மிடம் ஆயிரம் கடவுள்கள் இருக்கின்றனர். ஆனால் ஓர் அடிகூட முன்னேறவில்லை. நாம் கடவுளை உண்டாக்குகின்ற அளவுக்குக் காரியங்களை உண்டாக்க முடியாமல் தவிக்கிறோம். இதற்கு நம்மிடையே முயற்சி இன்மைதான் காரணம் என்பது தெளிவாகிறது. முயற்சியை நம்மிடையே ஊட்ட வேண்டும்.



இன்று எல்லா நாடுகளும் உயர்ந்த எண்ணத்

துடன் ஒரு குடும்ப மாகவிருக்கின்றன. ஒன்று வளமடைந்த நாடாகவும் மற்றொன்று வளமின்றியும் இருந்தால் நாளடைவில் இது அவர்களையும் பாதிக்கும் என்பதால் எல்லா இடங்களிலும் சமமான வளர்ச்சி ஏற்படுத்த அவை பாடுபடுகின்றன. அண்டுலகக் குழந்தை நிறுவனம் இந்த உயர்ந்த எண்ணத்துடன் ஈடுபட்டிருக்கின்றது. அந்த அடிப்படையில்தான் குழந்தைகளுக்கான இந்தச் சத்துணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதன் முழுப் பயனையும் அடைய நாம் தயாராக இருக்க வேண்டும்.

இந்தச் சத்தூட்டத்திட்டம் வெற்றி அடையும் வகையில் அமையவில்லை என்பதனை அறிக்கைகளில் விளக்கமாகவும், சுருக்கமாகவும் சொன்னார்கள். திட்டம் வெற்றி பெறுவது திட்டம் போடுபவர்கள் கையில் மட்டுமில்லை. நிதி கொடுப்பவர்கள் கையில் மட்டுமில்லை. அத்திட்டத்தினைச் செயற்படுத்துபவர்களின் கையில் தான் அத்தனைப் பொறுப்பும் இருக்கின்றது. அறிக்கையில் குறிப்பிட்டபடி அரசு ஆணைகளைப் பிறப்பித்துவிடலாம். ஆணைகளைப் பிறப்பித்துவிடுவதனாலேயே திட்டம் வெற்றிகரமாக நிறைவேறிவிட்டதாகாது. தொகையைக் கொடுப்பதனாலேயே வெற்றி கிட்டிவிடாது. செயற்படுத்துபவர்கள்தான் முயற்சியுடன் ஈடுபடவேண்டும். ஒரு கணவன், மனைவிக்கு ஆணையிடலாம். காய்கள் வாங்கிக் கொடுக்கலாம். அதனால் மட்டும் சாப்பாடு தயாராகிவிடாது. மனைவியும் அவனுடைய ஆணையைக் கடுமையான கட்டளையாகக் கருதாது, அன்புக்கட்டளையாக ஏற்றுச் சுவையாகச் செய்தால்தான் உணவு சுவையுடன் அமையும். அரசு கணவனின் நிலையிலிருக்கின்றது; செயற்படுத்தும் ஊழியர்கள் எல்லாம் மனைவி என்கிற முறையிலே செயற்படவேண்டும். மனைவி சிறிது மாறுபட்டாலும் குடும்பமே சீரழிந்துவிடும்.

இதில் ஈடுபடுபவர்கள் ஒழுங்குறச் செயற்படாவிடின் வேலியே பயிரை மேய்கிறது என்ற நிலைதான் ஏற்படும். அதனால், இது மக்களுக்குச் சேவைச் செய்வதற்கென ஏற்பட்ட திட்டமென அதில் ஈடுபடுபவர்கள் நம்பிக்கை கொள்ளவேண்டும்.

திட்டம் துவங்கு முன்னர் அந்தந்தப் பகுதியின் தேவைகள் என்ன என்பதை ஆராயவேண்டும். இத்திட்டம் மக்களின் தேவையை ஒட்டியதாகவே இருக்கவேண்டும். எனவே மக்களின் தேவைகளைக் குறித்துக் கொள்ளவேண்டும். தேவைகளைக் குறித்துகொண்ட பிறகு அத்தேவைகளை விரும்புமளவுக்கு மக்களிடையே அறிவை ஏற்படுத்தவேண்டும். மனப்பக்குவத்தை உண்டாக்கவேண்டும். பின்னர்தான் நடைமுறைப்படுத்தும் காரியத்தைச் செய்யவேண்டும்.

இந்தக் காரியத்தில் நாங்கள் வெற்றிகரமாக ஈடுபட அண்டுலக நிறுவனங்கள் மேலும் அதிக முயற்சி மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். சென்னையில் பரந்து விரிந்த 375 வட்டாரங்களிருக்கின்றன. இவற்றில், மிகவும் முயற்சி எடுத்துப் பத்து ஆண்டுகளில் 12 வட்டாரங்களுக்குத்தான் பெற்றிருக்கிறோம். இன்னும் அதிக வட்டாரங்களுக்கு நாங்கள் விரிவுபடுத்த, அதிக விரைவாக இது நடைபெற உதவி செய்யவேண்டும். இந்தியாவில் மற்ற மாநிலங்களுக்கெல்லாம், தமிழகம் வழிகாட்டியாக இருக்கின்றது. பஞ்சாயத் ராஜ் போன்றவற்றில் எல்லாம், தமிழகம் முதன்மையாக விளங்குகின்றது. இந்தப் பெருமை தமிழகத்திற்குத் தானுண்டு. இவ்வாறு எடுத்த காரியத்தை எல்லாம் இனிதே நடத்தியிருக்கின்றோம். இத்திட்டத்திற்கும், நீங்கள் இன்னும் கொடுப்பீர்களேயானால், நாங்கள் உங்களுடைய நோக்கம் வெற்றி பெறச் செய்திடுவோம். ஊராட்சித் தலைவர்களும், ஒன்றியத் தலைவர்களும், ஒன்றியங்களில் பணிபுரியும் எல்லா அலுவலர்களும் நிச்சயம் முழு மனதுடன் ஈடுபடுவார்கள் என்று உறுதி தருகிறேன்.

இவ்வாறு உதவுவதில் எல்லா நாடுகளையும் அகில உலகக் கண்ணோட்டத்தில் நீங்கள் பார்க்கக் கூடாது. தமிழகத்தின் தேவை என்ன? மைசூர் மராட்டிய மாநிலங்களின் தேவைகள் எவை? பஞ்சாப் மாநிலத்தின்

தேவை என்ன? அமெரிக்காவின் சூழ் நிலைக்கேற்ற தேவை என்ன? ஐரோப் பாவின் தேவை என்ன? என்று உணர்ந்து அதற்கேற்ற கருவிகளை யும், நிதியையும் வழங்கவேண்டும். ஒரே மாதிரியான கருவிகளைக் கொடுப்பது எல்லா நாடுகளுக்கும் பயன் தராது.

எனவே நீங்கள் கொடுக்கும் நிதியை மேலும் அதிகமாகக் கொடுக்கவேண்டும். அந்தத்தொகை யைப் பணமாகவே கொடுத்தீர்களே யானால்நாங்கள் எங்கள் தேவைகளைப் பொறுத்து, எங்கள் சூழ்நிலைக்கு என்ன வேண்டுமோ அந்தக் கருவிகளை வாங்கிப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். கிணறுகளை ஆழப் படுத்தும் கருவிகளோ, கோழிப் பண்ணைகளுக்குத் தேவையான அமைப்புகளோ, வேறுபல கருவி களோ எங்கள் சூழ்நிலைக்கேற்றவாறு வாங்கிப் பயன்படுத்த, வழி வகை காண இந்த மாறுதல்களை ஏற்படுத் தித் தர வேண்டுகிறேன். அப்படி ஏற் படுத்திக் கொடுத்தால் மாநில அரசும் இதில் முழுமையாக ஈடுபட்டுக் கவ னம் செலுத்தும்.

இந்தச் சத்தூட்டத் திட்டம் ஒரு தனி அமைப்பாக இயங்கி வருகின் றது. இத்திட்டம் ஒரு தனி அமைப் பாக இல்லாமல் இதை வேறு துறை களுடன் தொடர்புடையதாக்கி ஆராய்ச்சிகள் நடத்தி வெற்றிகர மாக நிறைவேறச் செய்யவேண்டும். இத்திட்டத்தின் பகுதியான, பள்ளித்தோட்டம், சமுதாயத் தோட்டம், காய்கறித் தோட்டம் அமைப்பது எல்லாம் உற்பத்திப் பெருக்கிற்கே செயல்படுவதால் வேளாண்மைத் துறையுடன் நெருங் கிய தொடர்புகொண்டு செயற் படுத்தப்படவேண்டும்.

எனவேதான் அரசாங்கம் பயிற்சி பெற்ற ஒரு துணை இயக்குநரை (வேளாண்மை) இந்த ஊராட்சித் துறையில் நியமித்திருக்கின்றது. அவ ரிடம் இந்தப் பொறுப்பு ஒப்படைக் கப்பட்டிருக்கின்றது.

தற்போது இத்திட்டத்திற்குத் தேவையான விதைகளை டில்லிக்கோ அல்லது பம்பாய்க்கோ அனுப்பி அங் கிருந்து அகில இந்தியாவுக்கும் அவை அனுப்பப்படுகின்ற நிலை இருக்கின் றது. அவ்வாறு விதைகள் வந்து சேருவதற்குள் பருவகாலம் மாறிவிடு கின்றது. ''ஆடிப்பட்டம் தேடி விதை'' என்பது தமிழ்ப் பழமொழி. 'பருவத்தே பயிர்செய்' என்பது நாங் கள் கற்றுக்கொண்ட தமிழ்ப் பாடம். வானம் பார்த்த பூமி எங்கள் தமிழ கம். அந்தந்தப் பருவத்தில் பயிரிட் டால் தான் விதை முளைக்கும்; நல்ல பலனும் கிடைக்கும். எனவே Central Pool என்று ஓர் இடத்திலிருந்து அனுப்பும் நிலை மாறி decentralisation என்ற முறையில் அந்தந்த மாநிலங்களுக்கே வழங்கினால் இவ் வளவு தொகை செலவு செய்யத் தேவையில்லை. எங்களிடம் சிறந்த வேளாண்மைத் துறை இருக்கிறது. ஊராட்சித்துறை இருக்கின்றது. அவர்கள் வசம் கொடுத்தால் இதனை வழங்க அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்வார்கள்.

வளர்ந்து முன்னேறச் செய்யும் இது போன்ற திட்டங்கள் நிரந்தர மான திட்டங்கள் அல்ல. இத்திட் டத்தின் மூலம் எவ்வளவு நாளைக்குக் குழந்தைகளுக்கு முட்டைகளை வழங் கிக்கொண்டே இருக்கமுடியும்? பெற்றவர்கள் தான் கொடுக்கவேண் டும். எனவே இது ஓர் demonstration programme ஆக, ஒரு Education Scheme ஆக இருக்கவேண்டும். இன் னின்னது சாப்பிட்டால் குழந்தைகள் இப்படி இருக்குமென மக்களுக்குப் புரியவைக்கும் திட்டமாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட திட்டங் கள் 5 ஆண்டுகள் 10 ஆண்டுகள் இருக்கலாம். அதற்கு மேலும் தேவை என்றுல், திட்டத்தின் நோக் கங்கள் நிறைவேறவில்லை என்பது தான் பொருளாகிவிடும்.

ஒரு சராசரி அமெரிக்கருக்கும், ஒரு சராசரி இந்தியருக்குமுள்ள வித்தி யாசத்தை ஒரு பேராசிரியர் குறிப் பிட்டுள்ளார். ஒரு சராசரி அமெரிக் கன் எதையும் சுலபமாக ஏற்றுக் கொள்ளமாட்டான். ஒன்றைச் சொன்னால் ஏன்? எதற்காக? எப்படி? எங்கே? எப்பொழுது? என்று ஆயிரம் கேள்விகளைக் கேட்டு, அவன் மன திற்கு நிறைவு அளிக்கும் பதில் கிடைத்துவிட்டால், அதனைக் கடைப் பிடிப்பான். அப்படிக் கடைப்பிடிப்

பானேயானுல் கா ல மெல் லா ம் கடைப்பிடிப்பான். பின்பு வெற்றியும் காணுவான். ஆனுல் ஒரு சராசரி இந்தியன் எதையும் உடனே நம்பி விடுவான். ஏன்? எப்படி? என்ற கேள்விகளேக் கேட்கும் பழக்கமே அவனிடம் இல்லே. நீராத வயிற்றுவலிக் காரனிடம், மந்திரக்காரனிடம் திருநீறு வாங்கி இட்டுக்கொண்டால் குணமாகும் என்று கூறினுல் மருத்துவனிடம் போவதை விட்டு, மந்திரக்காரனே நம்பி அவனிடம்தான் போவான். மந்திரத்தால் எல்லாம் நடந்தால் மருத்துவ மனேயே தேவையில்லேயே. இதில் நாம் உடனே நம்பு கிறோம். அதே அளவு சீக்கிரத்தில் கடைப்பிடிக்கிறோம். அதே அளவு சீக்கிரம் விட்டும் விடுகிறோம். இது நம்மிடத்திலிருக்கும் ஒரு பழக்கம். இது மாற்றப்படவேண்டும். இந்தக் காரியம் அவ்வளவு சுலபமல்ல. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்று சொல்லுவார்கள். நாம் பல பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகி விட்டோம். நம்மோடு இந்தக் குறை நீங்கட்டும். எதிர்காலத் தம்பதி களாவது இவையெல்லாமில்லாமல், இன்பத்தில் தவழுகின்ற நாட்டிலே எல்லா வளமும் நலமும் பெற்று இருக்கட்டும். இதில் நாமனேவரும் முன்னின்று முயற்சி எடுக்கவேண்டும். அதற்குச் சத்துள்ள காய்கனிச் சாப்பிடவேண்டும் என்றும் அதனுல் ஏற் படக்கூடிய நல்ல பலன்கள் என்ன என்பதையும் எடுத்துச்சொல்லவேண்டும். அப்படி நன்கு பயிரிடும் தோட்டங்களுக்கு அழைத்துப் போய்க் காட்டவேண்டும். செயல் முறை, என்பதைக் காகிதத்தில் காட்டினுல், அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். சத்தூட்ட உணவைப் பெற்று நல்ல நிலேயிலுள்ள குழந்தைகளே அவர்களுக்குக் காட்டவேண்டும். சத்துக்களேப் பெற அதிகம் செலவழிக்க வேண்டியதில்லே. வீட்டின் பின்புறம் இருக்கும் கீரைகள் சத்துமிக்கவை.

சில நாட்களுக்கு முன்னர் ஓர் அமெரிக்கத் தாளில் படித்தேன். ஒரு நிலக்கடலேப் பருப்பில், ஒரு பாதாம் பருப்பிலுள்ள சத்தைக் காட்டிலும் சத்து அதிகமிருக்கிறதாம். எளிய நிலக்கடலேயை விருந்துகளில் நாம் பயன்படுத்தலாமல்லவா? சுலபமாக, எளிதாக, சத்துள்ளதாகக் கிடைப் பவைகளேத் தெரிந்து உண்ணப் பழக வேண்டும். க ட லே அறுவடைக் காலத்தில் அதனேயே ஒருவன் உண்டு கொண்டேயிருக்கின்றுன். அளவுக்கு மீறினுல் அமிழ்தமும் நஞ்சு. ஜீரணிக்கமுடியாத தன் குற்றத்தை மறைக்க, கடலே உடலுக்கு ஒத்து வராது எனக் கடலேயின் மீது பழியைப் போட்டுவிடுகிறுன். திடீரென்று சும்பு உண்டால் பழக்க மில்லாமையால் சங்கடம் ஏற்படுகின் றது. இதில் என்றே ஒருநாள் பல காரம் செய்தால், ஆசையின் காரண மாக அதிகம் உண்டுவிட்ட அதனுல் உடல் நலங்கெட, அதன்மீது வெறுப்பு ஏற்படுகின்றது. ஒரு பப் பாளியில் பல ஆப்பிள் பழங்களி லுள்ள சத்துக்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இப்படிப்பட்ட நிலேயில் ஏராளமான சத்துக்கள் தாராளமாகக் கிடைத்தாலும் நாம் உண்பதில்லே. உயர்தர உணவை உண்டால்தான் மதிப்பு என்று நினேக்கின்றுர்கள். இந்தப் பப்பாளி பயிரிடக் குளிர்ந்த நீர் போதும். சமையலறைச் சாம்பலில் வளரும். சிக்கிரம் பலனும் தரும். இவைகளே அறியாத மக்களே அறியும் படிச் செய்யவேண்டியது நம் பொறுப்பு.

மோரில் இருக்கும் சத்து காப்பியில் இல்லே என்பதை நாம் அறிவோம். ஆனுல் சத்தூட்டத் திட்டத்தில் அனேத்து நாட்டு அதிகாரிகளாலும் சரி, செயல்படுத்தும் கிராமசேவிகை, முக்கியசேவிகை ஆனுலும் சரி, காப்பி குடித்துவிட்டுத் தெம்போடு அவ் வேகம் குறைவதற்கு முன்னுலேயே பலவற்றை எடுத்துச் சொல்லும் நிலே யிலிருக்கின்றுர்கள். ஆகவே நம்மை மாற்றிக் கொள்ளவேண்டும். வருங் காலக் குழந்தைகளுக்காவது இந்நிலே ஏற்படக்கூடாது. சத்துணவினுல் உடல் வலுப்பெற இத்திட்டம் பயன் படுகின்றது. இதற்கு அரசு ஒல்லும் வகையில் எல்லாம் உதவி செய் யும்.

திட்டம் வெற்றிபெற எல்லாருமே முயற்சி மேற்கொள்ளவேண்டும். இக் கருத்தரங்கு இவ்வாய்ப்பினே நல்கி இருக்கின்றது. வீட்டுக்கு வீடு கோழி

வளர்த்தல், ஆடு வளர்த்தல் போன்றவைகளில் அலுவலர்கள் முழுக்கவனம் செலுத்தவேண்டும். ஊராட்சித் தலைவர்களும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும், இதில் முழுமையாக ஈடுபடவேண்டும்.

அனைத்து நாட்டு நிறுவனங்களும் எங்களுக்கு நிறைவு ஏற்படுமளவுக்கு வாரி வழங்கவேண்டும் என்ற எண்ணத்தைக் கொள்ள இக்கருத்தரங்கு பயனளித்திருக்கும் என நம்புகிறேன்.

இங்கு வந்துள்ள அனைத்து நாட்டுப் பிரதிநிதிகளிடம் கூறுகின்றேன். மண் வளமிக்கது எங்கள் தமிழ் நாடு; மன வளமிகுந்த மக்கள் தமிழர்கள்; கொடுத்துக் கொடுத்துப் பழக்கப்பட்டவர்கள் நாங்கள்; ஈந்து சிவந்த கைகளைப் பெற்றவர்கள் என்ற பெயருடையவர்கள் நாங்கள்; கொடை மனம் படைத்த பேதைகள் என்று சொல்வார்கள் எங்களை.

பிறரை வாழவைத்த நாங்களும், மற்ற நாடுகளுடன் தலை நிமிர்ந்து நிற்குமளவுக்கு எங்களை உயர்த்திக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். அதற்கு உங்கள் உதவி பெருந்துணை புரிகிறது என்பதை நன்றியுடன் அறிவித்துக் கொள்கிறேன்.

இக்கருத்தரங்கில் எல்லோருக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

அபரிமிதமான விளைச்சலைப் பெருக்க :

பயிர்நாசக் கிருமிகளினின்றும் பயிர்களைக் காப்பாற்ற :

பூச்சி மருந்து தெளிக்கவும் தூவவும்,

ஆஸ்பி தெளிப்பான்களும் (Sprayers)

தூவு கருவிகளும் (Dusters)

மிகச் சிறந்த சாதனங்கள்.



CODE MB-1/VL

தயாரிப்பவர்கள் :

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்லிங் ஒர்க்ஸ்
(பிரைவேட்) லிமிடெட்,
மலாட், பம்பாய் 64 N.B.

மைசூர், சென்னை மாநில விநியோகஸ்தர்கள் :

S. V. ரங்கசாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம் :
தொலைபேசி எண் 75071
75, கலாசிபாளையம்
தபால் பெட்டி எண் 539
நியூ எக்ஸ்டென்ஷன்ஸ் பெங்களூர்-2

கிளை அலுவலகம்:
தொலைபேசி எண் 81227
38, பீட்டர்ஸ் ரோட்
தபால் பெட்டி எண் 677
இராயப்பேட்டை, சென்னை-14

விவசாயிகளுக்கு, வேளாண்மை ஆண்டு முழுவதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல;
விவசாயத்தின்மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானது அல்ல.

கதரும் கிராமத் தொழில்களும்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன்கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.

* கதர் – கிராமத் தொழில்களை ஆதரிப்பது,
உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு
உதவுவதாகும்.

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் வாரியத்தின்
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பெற்ற

* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய்
* தோல் பொருள்கள் * பீனவெல்லம் * சர்க்கரை * மண்
பாண்டம் * வார்ப்படங்கள் * பித்தளை, வெண்கலப் பாத்
திரங்கள் * பீனப் பொருள்கள் — இன்னும்,

பற்பல கைநூற்புத் தொழில் பொருள்கள்
கதர் - கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்

சென்னை 'குறளகத்'தில் இயங்கும்
கதர் - கிராமத் தொழில் அங்காடியிலும்
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு:
கதர் - கிராமத் தொழில் துறை
2, சர் தேசிகாச்சாரி ரோடு
சென்னை-4

79.69ல்குமுளகத்தில் ஈடை வெற்ற கிராமக் கூட்டுறவுத் தொழில் நீறுவனங்களின் பேராளர்கள் கூட்டத்தில் அனைத்திந்திய கதர்-கிராமத் தைத் தொழில் ஆயத்தின் தலைவர் திரு. எள் தேபர் அவர்கள் ஆற்றிய உரை

"இந்தியவிலேயே, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தான் சீரிய முறையில் இயங்கி வரும் வாரியமாகும். தமிழகத்திற்கே உரித்தான கலை அறிவும், கலைஞர்களின் அற்புதக் கலைத்திறனும், வாரியத்தை நடத்தும் பொறுப்பேற்றுள்ளவர்களின் கடமை உணர்வும் செயல் திறனுமே, இந்தச் சாதனைக்கு அடிப்படைக் காரணங்களாகும்.

இத்துறையில் ஈடுபட்டுள்ளோர், குறிப்பாக, இத்தொழிலில் ஈடுபட்டுள்ள கை வினைஞர்கள் மிகுந்த கவனத்துடனும் எச்சரிக்கையாகவும் நடந்து கொள்ளவேண்டும். சின்னஞ் சிறு கைத்தொழில் புரியும் கதர்-கிராமத் தொழில் கைவினைஞர்களுக்கு எதிராக, அவர்கள் செய்யும் சிறு தொழில்களுக்கு எதிராக, பல த்த எதிர்ப்பும் - விரோதிகள் பலரும் உள்ளனர். இந்நிலையில் இக் கைவினைஞர்கள் தங்களுக்குள்ளேயே உட்பூசலை உண்டாக்கிக் கொள்வார்களேயானால், அவர்களைக் காப்பாற்ற ஆண்டவனால் கூடமுடியாது.

எத்தனையோ வெளிநாட்டினர், அயல் நாட்டுச் சக்திகள் இந்த நாட்டின் மீது படையெடுத்து, இந்த நாட்டை ஆக்கிரமித்துள்ளன. ஆனால், நாட்டின் இதயம் போன்ற கிராமங்கள் இந்த அழிவுச் சக்தியிலிருந்து தங்களைத் தாங்களே காத்துக் கொண்டு தூய்மை கெடாமல் இருந்து வந்துள்ளன. அந்நியச் சக்திகள் நம் கிராமங்களை அசைக்க முடியவில்லை. அடித்தளம் அலுங்காமல்தான் இருந்து வருகிறது. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வேர் விட்டுப்போன பழம் பெரும் பாரம் பரியத்தின் நிலைக்களன்களாக நம் கிராமங்கள் நின்று நிலவி வந்துள்ளன. ஆகவே, உட்பூசல் ஏற்பட்டு, காழ்ப்புணர்ச்சி கொண்டு கிராமங்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ள இடம் கொடுத்துவிடக் கூடாது.

இன்னும் ஓர் அவல நிலையை நான் சுறிப்பிடாமல் இருக்க முடியாது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்த நாட்டின் தேசிய வருமானத்தில் கிராமத் தொழில்களும் கைவினைப் பொருள்களும் 40 சதவீகித அளவுக்கு இருந்து வந்தன. ஆனால் நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, தேசிய வருமானத்தில் கிராமத் தொழில்களின் பங்கு 17சதவீதம் தான். இது மேலும் மேலும் வீவு குன்றி, இன்று 6 சதவீதத்தில் வந்துள்ள அவல நிலை உள்ளது. கடந்த 60 ஆண்டுகளில் 40 இலிருந்து 17, பின்பு 17 இலிருந்து ஆறு; இதுதான் இத்துறையில் நாம் அடைந்துள்ள முன்னேற்றம்! ஏன் இந்த நிலை? அதற்கான காரணங்கள் பல இருக்கலாம். நாட்டின் வளர்ச்சிக்காகத் திட்டங்கள் தீட்டுவோரின் குறையாக இருக்கலாம்; ஆனால் அதுகூடப் பெரிய காரணமல்ல; பொதுவாகவே மக்களிடையே நகர் வாழ்வில் உண்டான கவர்ச்சி; நகர்ப் புறப் பொருள்களுக்கு உண்டான தேவை; மக்களிடையே ஏற்பட்டுள்ள மோகம்; இந்த மனமாற்றம்தான் இந்த நிலைக்கு முக்கியக் காரணம் என நான் கருதுகிறேன். கிராமப் பொருளாதாரத்தையே இது சீர் குலையவைக்கிறது. அடிப்படையையே இது தகர்த்து வருகிறது என்பதை நாம் மறுக்க முடியாது.

ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகிறது. அடிப்படை பலமிழந்து விட்டால், அடித்தளம் ஆட்டங் கண்டுவிட்டால், கிராமப் பொருளாதாரம் கட்டுக்குலைந்து போய்விட்டால், நாட்டு மக்களின் நல்வாழ்வு என்ற கட்டடம் ஆட்டங்கண்டுவிடும் என்பது அசைக்க முடியாத உண்மையாகும். விவசாய வளர்ச்சி இன்றேல் நாட்டு வளர்ச்சி இல்லை.

இன்று நீங்கள் செய்கின்ற பணி

மகத்தானது; உங்களுக்காக மட்டுமா நீங்கள் பணி புரிகிறீர்கள்? இல்லை. நாட்டிலே நிலையான, அமைதியான முன்னேற்றம் காண நீங்கள் தொண்டாற்றுகிறீர்கள். நாட்டின் பொருளாதார வளர்ச்சியில், கிராமப் புறங்களின் பொருளாதார வளர்ச்சியில், தமிழ் நாட்டில் அனைவரும் பல்வேறு பட்ட அரசியல் கட்சிகளிலே சேர்ந்தவர்களும் சேர்ந்து, திட்டமிட்ட முறையில், ஆக்கமுறையிலான பணிபுரிவதைக் கண்டு நான் பெருமகிழ்வடைகிறேன். கதர் வளர்ச்சியில், கிராமத் தொழில் வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள உங்களுடைய தேவை பல்வேறுபட்டவையாகும். அன்றாடப் பிரச்னைகளிலேயே உங்கள் கவனத்தைச் செலுத்துகிறீர்கள். அது மட்டும்போதாது. எதிர்காலக் கண்ணோட்டத்துடன் நீங்கள் பிரச்னைகளை அணுகவேண்டும். கிராமத் தொழில் புரிவோர், ஓர் அமைப்பு முறையாக இயங்கவேண்டியது முதன்மையானதும் தலையாயதுமான ஒன்றாகும். நல்ல முறையில் கட்டுக்கோப்பான அமைப்பில் இயங்குகின்ற அமைப்பு முறைகள்தான் முன்னேற்றம் அடைந்துள்ளன. கிராமப் புறங்களில் கிராமத் தொழில்களில் ஈடுபட்டுள்ள இரண்டு கோடிக் குடும்பங்கள் நம் நாட்டில் உள்ளன. ஆனால் இவர்களுக்குள்ளே ஓர் அமைப்பு முறை இல்லை. கட்டுக்கோப்பான அமைப்பு இல்லாமல் சிதறிக் கிடக்கின்றன.

அமைப்பு முறையில் இயங்காவிட்டால், உங்களுக்கென்று அமைப்பு முறையில் குரல் எழுப்பப்படவில்லையென்றால், உங்களுக்குத் தேவையான பண வசதி—கடன் வசதிகூடக் கிட்டாது. பெருந் தொழில்களுக்கு மின் வசதி, தண்ணீர் வசதி, சாலை வசதி, கிடங்குகள், விற்பனைக் கூடங்கள், பண்டகசாலை வசதிகள் எவ்வளவு தேவையோ, அவை கிராமத் தொழில்களுக்கும் தேவை. ஆனால் உங்கள் கோரிக்கையை யார் எடுத்துச் சொல்வது? எந்த அமைப்பின் மூலமாகச் சொல்வது? உங்களுடைய கோரிக்கையை எடுத்து வாதிட எந்த அமைப்பு உள்ளது? இதைப்பற்றி, இந்த அடிப்படை உண்மையைப்பற்றி, நீங்கள் அனைவரும் தீர்க்கமாகச் சிந்தித்தாக வேண்டும். நம்மிடையே அரசியல் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், நாட்டின் இதய நாடிகளான கிராமக் கைத்தொழில்களுக்கென—ஓர் அமைப்பு முறைவேண்டும் என்பதிலே யாவரும்[1] இணைந்து செயலாற்ற வேண்டும்.

அடுத்து, எதிர்காலக் கண்ணோட்டத்துடன், இத்துறை பற்றிய பிரச்னைகளை விவாதித்து, அவைகளைத் தீர்க்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க அதற்கென்று ஓர் ஆய்வுப் பிரிவு ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியம். ஆராய்ச்சிகள், கருத்துப் பரிமாற்றம் போன்றவைகளை இப் பிரிவு கவனித்து, வளர்ச்சிக்கான திட்டங்களைத் தீட்டவேண்டும். எதிர்காலக் கண்ணோட்டத்துடன் இக் காரியம் செய்யப்படவேண்டும்.

இன்னொரு முக்கிய பிரச்னையையும் உங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். நீங்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களைப் பற்றி மறு ஆய்வு செய்ய வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். காலம் மாறி வருகிறது. மக்களின் உணர்வுகள், ஆசைகள், தேவைகள், பொருள்களின் தரம் மாறிகொண்டே வருகின்றன. நவீன காலத்தில் இளைஞரின் எண்ணம் மாறிக்கொண்டே வருகிறது. மாறுதல் இயற்கையின் நியதி. அதற்கொப்ப, இன்றைய மக்களின் தேவைக்கொப்ப அவர்களின் உணர்வுகளுக்கு நிறைவு அளிக்கும் வகையில் நாம் உற்பத்தி செய்கின்ற பொருள்களும் மாறவேண்டும். இன்றையத் தேவை என்ன என்பதைத் தெரிந்துகொண்டு அந்தத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் நாம் உற்பத்தி செய்யும் பொருள்கள் இருக்கவேண்டும். தேவைக்கேற்ற, மனதிற்குப் பிடிக்கின்ற பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும். அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கக்கூடாது. சுருக்கமாகச் சொன்னால், காலத்திற்கேற்பத் தேவைக்கேற்ப நாம் செயலாற்றவேண்டும்.

தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம் நல்ல முறையில் பணியாற்றி வருகிறது. நாம் அனைவரும் கலந்து பேசி நல்ல முடிவுகள் எடுப்போம். நாட்டை வளப்படுத்த, கிராமங்களில் நல்வாழ்வு மலரப் பாடுபடுவோம்.

ஏன்?

கவிஞர் மணிமொழி

தளிராய் மிளிர்ந்து சருகாய் உதிர்ந்து
தவியாய்த் தவிப்பவளின் - புழுவாம்
தணலில் துடிப்பவளின்

ஒளிவாய் மொழியை உரைப்பேன் கேட்பீர்
உணர்வீர் செயல்படுவீர் - பிறர்க்கும்
உரைப்பீர் துயர்களைவீர் !

மாலை மலர்ந்திட 'மாலை' கொணர்வார்
மதியே உனக்கென்பார் - சம்
மதியே எனக்கென்பார்!

வேலை முடித்துள் வருவதற் குள்ளே
வேதனையால் துடிப்பார் - வீழி
வேற்கணையாய்த் தொடுப்பார் !

காலை யிருந்தொரு கணம் அமையாமல்
காற்றுய்ச் சுழன்றிருப்பேன் - வீட்டுக்
கடமையில் உழன்றிருப்பேன்

ஆலைப் பொறிக்கும் ஓய்வினைத் தருவார்
அதுவும் எனக்கில்லை - கருணை
ஆடவர் தமக்கில்லை!

நிம்மதி யில்லை நீயில் லாமல்
நிலவேவா வென்பார் - உன்
நெஞ்சைத் தாவென்பார்!

சம்மத மளிக்கு முன்னே வருவார்
சங்கம மாகிடுவார் - பெரும்
சங்கட மாகிடுவார் !

சுற்றி வளைப்பார் கட்டி யணைப்பார்
சுவையோசுவை யென்பார் - இதுவே
சொர்க்க சுகம்என்பார்!

சற்ற உடற்கலை காட்டி மகிழ்ந்தெனைக்
கண்ணே மணியென்பார் - இரு
கன்னம் கனியென்பார் !

சூரியன் தோன்று நாளு மிருக்கும்
சுற்றிவராதது மில்லை - அவரெனைப்
பற்றியிரா ததுமில்லை!

காரியத் துள்ளே இமயம் இதுவெனக்
கருதியிருந்தார் போலும் • கட்டில்
கதைவளர்த்திடுவார் நாளும் !

நாளுக்கு நாளும் நடத்திய கூத்தில்
நாலிரு பிள்ளைவரவு - மாதம்
நானூறு ரூபாய் செலவு

நாளைக்கு நான்கரை ரூபாய் கூலி
நாயக்கர் அவர்க்களிப்பார் - மூன்றை
நாயகர் எனக்களிப்பார் !

யாரைப் பசிக்குச் சோளப் பொரிபோல்
எதைநான் செய்திவதிதில்? • கேட்பேன்
உதைதான் எனக்குபதில்!

பாரை வழியச் சோறு வடிப்பேன்
படைப்பேன் அவைவர்க்கும் - எனக்கோ
பார்ப்பேன் பிடியிருக்கும் !

தங்கச் சிலையாய் தந்தை தாயார்
தையலெனை மதித்தார் - அன்பால்
தழுவியெனை வளர்த்தார்!

அங்கம் பதைக்க அணைப்பார் உதைப்பார்
ஆளன் பெருந்தொல்லை - ஒவ்வோர்
ஆண்டும் ஒருபிள்ளை !

கட்டுட லெல்லாம் ஒட்டி உலர்ந்தது
கண்டால் மிகவெறுப்பார் - அவர்
கனலாய் எனைஎரிப்பார்!

மொட்டே ! மலரே ! முத்தே ! என்றவர்
மூதேவி ! என்றிடுவார் - வேறோர்
சீதேவி கண்டிடுவார் !

வெட்ட வெளிக்குள் பட்ட மரம்போல்
விதியுற்றிருக் கின்றேன் - நிம்
மதியற்றிருக் கின்றேன்!

திட்ட மிடப்பட வேண்டு மில்லையேல்
தொல்லை சூழ்ந்துவிடும் - குடும்பம்
துயரில் ஆழ்ந்துவிடும் !

உலகுக் குயிராய் உரமா யுள்ளது
உயரிய தாய்க்குலமே - அதை
ஒம்புதல் அருங்கடனே!

உலகை உய்வித்து உயர்த்தும் திட்டம்
குடும்பநலத் திட்டம் - இன்பம்
கொடுக்கும் வளத்திட்டம் !

தொல்லை துயரம் தீப்பசி வறுமை
தொடரா திருந்திடவும் - இன்பம்
முடியா துயர்ந்திடவும்

எல்லாரு மின்றே சூளுரை யெடுப்பீர்
ஏற்போம் நலத்திட்டம் - இது
ஏற்றம் நமக்களிக்கும் !''

———

நீர் உயர
நெல் உயரும்

எம்.எஸ்எஸ்.ஐ.ஸியின் பம்ப் செட்டுகள் விவசாயத்திற்கும் தொழிலுக்கும் இன்றியமையாதது தரமான வாரப்பு இரும்பும் எ:குங் கொண்டு தொழில் நுணுக்கக் கட்டுப்பாட்டோடு அமைக்கப்பட்டது. எம்.எஸ் எஸ்.ஐ.ஸியின் பம்ப் செட்டுகள், ஒரே சீரான நிலையில், தட்டுப்பாடனறி நீண்ட நேரம் நீரை இறைக்க வல்லது. நேர்முக இணைப்புக் கொண்ட பம்ப் செட்டுகள் மட்டுமின்றி, தனி இணைப்புக்கான சக்கரங்களைக் கொண்ட பம்ப் செட்டுகளும் கிடைக்கும். எம். எஸ். எஸ். ஐ. ஸி. யின் உற்பத்திகளைப் பெற்று பயன் பெறுங்கள்.

MSSIC

PUMPSET



பழுதடைந்த விவசாயக் கருவிகளை செப்பனிட, உங்களுக்கு அருகாமையிலுள்ள எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் பட்டறைகளை அணுகுங்கள். மிகுந்த உத்தரவாதத்துடன் புதுப்பித்துக் கொடுக்கப்படும்.



MSSIC

DUSTER

எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் டஸ்டர், மனித சக்தியைக் கொண்டு எளிய முறையில் இயக்கக்கூடியது. இது, இடைவிடாது பூச்சிக் கொல்லியை பனி படலம்போல் தூவி, விவசாயிகளுக்கு எதிரியான புழு பூச்சிகளை அழித்து வேளாண்மையை விருத்திச் செய்ய் உதவுகிறது. இது, ஒரே நேரத்தில் 25 சதுர அடிக்கு பூச்சிக் கொல்லியை தூவும் சக்தி வாய்ந்தது. இதன் கொள் அளவு 300 கன அங்குலம். எடை 5 கிலோ. பித்தளை மற்றும் அலுமினியம் ஆகிய உலோகங்களில் கிடைக்கும். இதர எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் விவசாயக் கருவிகள் கீழ்த்தர உழைப்பும் சிகரற்ற உறுதியும் கொண்டவை.

விவரங்களுக்கு அணுகவும்
கிருஷ்ணா இயக்குனர்

தமிழக அரசு சிறு தொழில் நிறுவனம்

35/2, உட்ஸ் ரோடு,
சென்னை-2.

கிராமப் பொருளாதாரத்திற்குப் புனைத் தொழில்

கே.சம்பந்தம்

செயலர், சென்னை மாநில பணி வெல்வக் கூட்டுறவுப் பேரவை

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்' என்பது வள்ளுவரின் வாக்கு. வேளாண்மை, கிராமங்களின் முதுகெலும்பு. கிராம மக்கள் வேளாண்மையை மேற்கொள்ளாவிடில் நகரங்கள் நரகங்களாகி விடும். விவசாயத் தொழிலில் கிராம வாசிகள் அல்லும், பகலும் அயராது உழைத்துவிட்டு ஆறுமாத காலம் அலுவலின்றி அயர்ந்து விடுகின்றனர். இதனால் கிராமப் பொருளாதாரம் சிதைந்து விடுகிறது.

தினமும் நூற்றுக்கணக்கானவர் கிராமங்களைவிட்டு, நகரங்களுக்கு ஓடி வருகின்றனர். ஏன்? இந்தக் கேள்விக்குச் சரியான விடை கிடைப்பதில்லை. இருக்க ஒரு சின்னஞ் சிறு வீடு, சுகாதாரமான இயற்கைச் சூழ்நிலை, இவைகளையெல்லாம் விட்டு விட்டுக் குடும்பத்தோடு நகரத்தை நோக்கி வருகின்றனர்.

'உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை
கண்டீர்
பழுதுண்டு வேறேர் பணிக்கு'

என்ற உயர்ந்த உயிர்காக்கின்ற தொழிலை விட்டுவிட்டு ஓடோடிவந்து நகரங்களில் சாலை ஓரங்களிலும், நாற்றமெடுக்கும் கழி நீர்த்தேக்கங்களின் அருகிலும் குழந்தை குட்டிகளுடன் குவிந்து வாழ்கிறார்களே ஏன்? கிராமப் பொருளாதாரத்திற்கும் நகரப் பொருளாதாரத்திற்கும் ஓர் ஏற்றத்தாழ்வு இருப்பதுதான் இதற்குக் காரணம்.

காந்தியப் பொருளாதார நிபுணர் டாக்டர் ஜே. ஸி. குமரப்பா அவர்கள் அடிக்கடி கூறுவார்: ''கிராமத்தில் விளையும் பொருள்களைக்கொண்டு கிராம மக்கள் வயிறுர உண்ண வேண்டும். எஞ்சியவற்றை நகரங்களில் விற்கவேண்டும். அதற்குரிய பணம் கிராமத்திற்குத் திரும்பி வர வேண்டும்'' என்றார். ஆனால் இன்றைய கிராமீயப் பொருளாதார நிலை சீரழிந்து கிடக்கிறது. கிராமத்தில் உழுது விவசாயம் செய்வதைக் காட்டிலும் நகரத்தில் வந்து நாள்முழுவதும் செங்கல் சுமக்கவும், கை வண்டி இழுக்கவும், சுமை தூக்கவும் தயாராகிறுன். நகரத்தில் அவனுக்கு கிடைக்கும் கூலி அதிகமாயிருக்கலாம். ஆனால், போலி நாகரிகத்தில் அமுந்திக்கிடக்கும் நகரத்தில் வாழ்க்கைச் செலவுகள் அதிகம். எனவே ஊதியத்தில் மிச்சமும் இல்லை. கிராமத்திலிருந்து ஓடிவந்ததற்குப் பெருமையுமில்லை. நகரங்களுக்கு ஓடிவரும் மக்களின் நலிவுற்ற நிலைமையையும் அவர்கள் பிச்சைக்காரர்கள்போல் அலையும் பரிதாபத்தையும் பார்க்கும்போது கிராமங்களின் அழிவிலேயேதான் நகரங்கள் உருவாகி விரிவடைகின்றன என்பதை நன்கு தெரிந்து கொள்ளலாம்.

கிராமப் பொருளாதாரத்தை உயர்த்த வழிவகை காணுவிட்டால் கிராமம் நசியும்; வேளாண்மை

குறையும்; உணவுப் பஞ்சம் தலை விரித்தாடும்; பசிக்குப் பணத்தைத் தின்ன முடியுமா? எனவேதான் கிராம மங்களின் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டுமென்பதற்காகக் காந்தியடிகள் அகில இந்தியக் கிராமத் தொழில் கழகத்தை வார்தாவில் ஆரம்பித்தார்கள். மிகவும் சொற்பமான ஊதியத்தைத் தரக்கூடிய இராட்டையைப் புகுத்தினர். நசிந்துபோய்க் கொண்டிருந்த கிராமக் கைத்தொழில்களை உயிர்ப்பிக்க ஆரம்பிக்கப்பெற்ற அகில இந்தியக் கிராமக் கைத்தொழில் கழகத்திற்குத் தானே ஆலோசகராக இருந்து கொண்டு டாக்டர் ஜே.எம்.குமரப்பா அவர்களைச் செயலராக அமர்த்தினர்.

நம்முடைய மக்கள் தொகை பெரும்பாலும் கிராமத்தில்தான் அதிகம் இருக்கிறது. அங்குள்ள மனித சக்தியைப் (Man Power) பயன்படுத்தவேண்டும் என்பது குமரப்பா அவர்களின் முக்கிய - மேலான நோக்கம். கைத்தொழில்மூலம் கிடைக்கும் வருமானம் மிகக் குறைவே எனினும் குடிசைத் தொழிலால் கிடைக்கும் அந்த ஊதியமும் இல்லாவிட்டால் மிகவும் துன்பப்பட வேண்டியிருக்கும். விவசாயம் இல்லாத காலத்தில் ஏதாவது ஒரு குடிசைத் தொழில் செய்தால் கணிசமான ஊதியம்பெற வாய்ப்பு ஏற்படும்.

இந்திய பொருளாதாரத்தை ஆங்கிலேயர்கள் அன்று ஏளனம் செய்தனர். ஒருசமயம் கரஞ் சென்ற நீதிபதி திருவாளர் ஏ. எஸ். பி. ஐயர் அவர்கள் ஐ. சி. எஸ். தேர்வில் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல நேர்ந்தது. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் மூன்று நீதிபதிகள் இந்தப் பிரச்னையை விவாதித்தனர். 'ஒரு நாளைக்கு ஒரு சிட்டம் நூல் நூற்றால்கூட 2½ அணு (16 காசு) தான் கிடைக்கிறது. இந்த தூல் நூற்றலே உங்கள் தலைவர் காந்திஜி இந்தியாவில் புகுத்திக்கொண்டு வருகிறாரே இதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?'' என்று கேட்டார்கள். அதற்கு ஏ. எஸ். பி. ஐயர் அவர்கள் (Something is better than nothing) ''ஒன்றுமில்லாதிருப்பதைக் காட்டிலும் சிறிதாவது சம்பாதிப்பது சிறந்ததல்லீயா?'' என்றார். நீதிபதிகள் அந்தப் பதிலைக்கேட்டு மகிழ்வுற்றனர்.

இந்த நிலையில்தான் கிராமப் பொருளாதாரத்தில் குடிசைத் தொழில் ஒரு சிறிய பங்கை வகித்து வந்தது. நாடு விடுதலை அடைந்தவுடன் கிராமத் தொழில்கள் கிராமவாசிகளுக்கு ஒரு நல்ல ஊதியம் தரும் வகையில் மாற்றப்பட்டு வருகின்றன. அந்த முயற்சியில் அரசாங்கம் பலவழிகளிலும் ஊக்கமும் உற்சாகமும் கொடுக்கிறது. அவ்வித மான குடிசைத் தொழில்களில் 'பனைத் தொழில்' ஒரு முக்கியத் தொழிலாகத் தமிழகத்தில் இருந்து வருகிறது. இதனால் கிராமப் பொருளாதாரம் எப்படி உயர்ந்து நிலைபெற்று வருகிறது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

மூலப் பொருள்

நம் கிராமங்களில் பொதுவாகக் குடிசைத் தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. ஒரு குடும்பத்தின் அன்றாடத் தேவைப் பொருள்களைக் கையால் செய்யப்படும் பொருள்களை கொண்டே செய்துகொள்ளலாம். சமைப்பதற்கு வேண்டிய பாத்திரங்களைக் களிமண்ணால் செய்துகொள்ளுகிறோம். வீடுகள் கட்டி வாழ்வதற்கு மூங்கில், பனைமரச் சட்டங்கள், பனை ஓலைகள் முதலியவற்றைச் சேகரித்துக் கட்டிக்கொள்கிறோம். தோல் தொழிளாளர்களுக்கு வேலை கிடைக்கக் கிராமத்தில் தோல் கிடைக்கிறது. அதைக்கொண்டு செருப்பும் கமலையும் பிறவும் செய்துகொள்கிறார்கள். கலப்பை, நாற்காலி, கட்டில் முதலியன செய்து தந்து தச்சுத் தொழிலாளர்கள் வேலை பெறுகின்றனர். அரிவாள், மண்வெட்டி, கொழு முதலியவை செய்து கருமார்கள் வேலை பெறுகிறார்கள். படுக்கப் பாய் முடைவதிலும் பெட்டி கூடைகள் முடைந்து வீட்டுக்குத் தேவையான சாமான்களைக் கொடுப்பதிலும் ஒரு பகுதியினர் பணியாற்றுகின்றனர். வீட்டிற்கு வெள்ளையடிக்கவும், மற்ற தேவைகளுக்குமான சுண்ணாம்பைக் கொடுக்கச் சுண்ணாம்புத் தொழிலாளர் வேலை செய்கின்றனர். நமக்கு வேண்டிய வெல்லம், பதநீர் தருவ

தற்குப் பனைத்தொழிலாளர்கள் ஏராளமாக இருக்கிறார்கள்; பனை மரங்களும் ஏராளமாக இருக்கின்றன. இவ்வாறுகப் பல்வேறு தொழிலாளர்கள் நிரம்பியதே கிராமம் ஆகும். அவர்கள் செய்யும் தொழிலுக்குத் தேவையான எல்லா மூலப் பொருள்களும் கிராமங்களிலேயே கிடைக்கின்றன. முக்கியத் தேவையான ஆடை நெய்வதற்கு வேண்டிய பருத்தி கிராமத்தில்தான் விளைகிறது. இவ்வாறுக இயங்கிவரும் கிராமத் தொழில்களின் பொருளாதாரம் ஒரு நிலை பெற்ற பொருளாதாரமாகும்.

பனைத்தொழில் பல பனைத் தொழிலாளர்களுக்கு உதவுவதோடு பல்வேறு கிராமத் தொழிலாளர்களுக்கும் உதவி புரிந்து வருகிறது. உதாரணமாக, பனைத் தொழிலாளி கையாளும் நெஞ்சுத் தோல், கால் தோல், இடைக் கயிற்றிலுள்ள தோல் முதலியவற்றைத் தோல் பதனிடும் தொழிலாளர் செய்து தருகிறார். பதநீர் இறக்க உபயோகப்படுத்தும் கலயங்களையும் வெல்லம் காய்ச்சும் பானைகளையும் மண்பாண்டத் தொழிலாளர் செய்துதருகிறார். முறுக்குத்தடி, ஏணி, பாளையைப் பதப்படுத்தும் இடுக்கிகள் முதலியவற்றைத் தச்சுத் தொழிலாளர் செய்து தருகிறார். பாளை சீவும் அரிவாள், மட்டை அறுக்கும் அரிவாள், குடுவை முதலியவற்றைக் கருமார் செய்து தருகிறார். பதநீருக்கு உயிர்நாடியான சுண்ணாம்பைச் சுண்ணாம்புத் தொழிலாளர் உற்பத்தி செய்து கொடுக்கிறார். அவர் பதநீர் காய்ச்சக் கூட்டுகிற அடுப்பிற்குத் தேவையான செங்கற்களைச் செங்கல் தொழிலாளர் செய்து தருகிறார். பதநீர் காய்ச்சத் தேவையான விறகை விறகு வெட்டும் தொழிலாளி தயாரித்துத் தருகிறார். இவ்விதமாகப் பனைத் தொழில் கிராமத் தொழிலாளர்களுக்கு தொழில் கொடுப்பதில் ஒரு நடுநாயகமாக விளங்குகிறது என்பது மிகையாகாது.

பனையினம்

பாரதத்தில் உள்ள ஐந்து கோடிப் பனைமரங்களில் தமிழகத்தில் மட்டும் நாலுகோடிப் பனைமரங்கள் உள்ளன. இவற்றில் 40 இலட்சம் மரங்களே மட்டுமே சீவிப் பதநீர் இறக்கி வெல்லம், கற்கண்டு செய்கிறோம். இவற்றின் மதிப்பு ரூ. 8 கோடி. ஓர் ஆண்டில் ரூ. 2 கோடி மதிப்புள்ள பனந்தும்பு இந்தப் பனைகளிலிருந்து கிடைக்கிறது. இதை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம். தமிழகத்தில் ஆண்டிற்கு 10 கோடி ரூபாய் மதிப்புள்ள பனைப் பொருள்களைப் பனைகள் தருகின்றன என்பது பலருக்கு வியப்பாக இருக்கலாம்.

தமிழகத்தில் 1 இலட்சம் வல்லுநர்கள் நேரடியாகப் பனை ஏற்றத்தில் ஈடுபட்டுள்ளனர். மற்றும் 1 இலட்சம் பேர் வெல்லம் செய்வதிலும் ½ இலட்சம் பேர் தும்பு, ஓலை, ஈர்க்கு வேலைகளிலும் ஈடுபட்டுள்ளனர். இவை யெல்லாம் கிராமங்களிலேயே நடைபெறுகின்றன.

ஒரு பனைத் தொழிலாளர் குடும்பத்தின் பொருளாதாரம்: (1966இல் தமிழகத்தில் 22 இடங்களிலிருந்து தயாரிக்கப்பெற்ற புள்ளி விவரம்:)

மூலப்பொருளும் உற்பத்திச் செலவும்		செலவினம் ரூ.
1. வாடகை, சுண்ணும்பு, விறகு, எண்ணெய்	...	417·33
2. வெல்லம் தயாரிக்கும் பெண்ணின் ஊதியம்	...	200·77
3. பதநீர்ப் பாத்திரம், கொப்பரை, பதநீர் காய்ச்சும் விடுதி முதலியவற்றின் தேய்மானம்	...	66·08
4. முதலீட்டு செய்யும் தொகைக்கு வட்டி	...	14·11
மொத்தச் செலவு		698·29

		வரவினம் ரூ.
1.	கிடைக்கும் 1655 கிலோ வெல்லத்தின் மதிப்பு கிலோ ஒன்றுக்கு 0·83 வீதம் ...	1,357·70
2.	குலை நுங்கு ...	92·61
3.	மட்டை, பண்ணடை போன்ற விறகு ...	12·91
	மொத்த வரவு	1,463·22
	பனைத் தொழில் வல்லுநரின் நிகர ஊதியம் ...	1,463·22
		698·29
	160 நாட்களில் சம்பாதிப்பது	764·93
	வெல்லம் காய்ச்சும் குடும்பம் பெற்ற ஊதியம்	200·77
	குடும்பத்தின் மொத்த ஊதியம்	965·70

குடும்பத்தின் ஒரு நாள் வருமானம் சுமார் ரூ. 6·00 ஆகும்.

50 பனைமரங்களிலிருந்து 1,357·70 ரூபாய் மதிப்புள்ள பனைவெல்லம் கிடைக்குமானால் தமிழகத்தில் உள்ள 4 கோடி மரங்களும் பயன்பட்டால் எவ்வளவு மதிப்புள்ள 'தேசியச் செல்வம்' கிடைக்கும் என்பதை நாம் சிந்திக்கவேண்டும்.

ஒவ்வொரு பனைத் தொழில் வல்லுநரும் கிராமத்தில் உள்ள மற்ற குடிசைத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர்களுக்குக் கீழே காட்டியபடி வேலை வாய்ப்பு அளிக்கின்றனர்.

தொழிலாளர்	வேலை வாய்ப்பு ரூ.
சுண்ணும்புத் தொழிலாளர்	12·43
எண்ணெய்த் ,,	10·88
மண்பாண்டத் ,,	16·66
கருமாரத் ,,	18·48
	2·98
தச்சுத் ,,	2·34
கொத்தனர்த் ,,	15·00
	78·77

இவற்றை வைத்துப் பார்க்கும் பொழுது, பனைத் தொழில் கிராமத்தில் உள்ள பல்வேறு தொழில்களுக்கும் நடுநாயகமாக விளங்குகிறது என்பதை நன்கு உணரலாம்.

பனைத் தொழில் பெருக்கத்திற்கு தமிழகக் கதர்-கிராமத் தொழில் வாரியம் செய்துவரும் சலுகைகள் :

மதுவிலக்கினுல் வேலை இழந்த முன்னுள் கள்ளிறக்கும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கவும் பதநீர் இறக்கி வெல்லம் தயாரிக்கவும் இதுவரை 1,526 கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துத் தந்துள்ளது. இவை அனைத்தும் கிராமங்களிலேயே இயங்கி வருகின்றன. மாவட்ட முறையில் இதுவரை 8 மாவட்டப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனங்களை அமைத்துத்தந்துள்ளது. இவற்றிற்கெல்லாம் தலைமை நிலையமாகச் சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் என்ற மாநிலப் பேரமைப்பை அமைத்துக் கொடுத்து இருக்கிறது. இந்தத் தொழிலில் 2·15 இலட்சம் கிராமவாசிகள் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் ½ கோடி ரூபாய் பங்கு மூலதனமாகச் செலுத்தியுள்ளார்கள். பனைவெல்லம் 1967-68ஆம் ஆண்டில் 530·45 இலட்ச ரூபாய்க்கு உற்பத்தி செய்யப்பட்டு ரூபாய் 575·40 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இவை கூட்டுறவு அடிப்படையின்கீழ் வந்த பொருள்களின் மதிப்பாகும். தனியார் துறையில் 4 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பனைப்பொருள்கள்

விற்பனையாகி இருக்கின்றன. தமிழகத்தில் ஆண்டுதோறும் சுமார் 10 கோடி ரூபாய் மதிப்புள்ள பனைப் பொருள்கள் அதாவது பதநீர், பனை வெல்லம், சீனி, கற்கண்டு, தும்பு, ஓலை, ஈர்க்கு, நார்ப் பொருள்கள் முதலியன உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதை அறியும்பொழுது தமிழகக் கிராமப் பொருளாதாரத்தில் பனைத் தொழில் முக்கியப் பங்கு வகிக்கிறது என்பது தெளிவாக விளங்கும்.

பதநீர் விற்பனைக்கு உதவி

பதநீர் ஒரு சத்து நிறைந்த இனிய இயற்கைச் சுவைநீர். ஆகையால் அதை இன்றைய நாகரிகப் பாணியில் குடிப்பதற்குப் பதநீர்க் கடைகள் நடத்தக் கடனும் மானியமும் வழங்குகிறது. பதநீர் குளிர்விக்கும் இயந்திரங்கள், பதநீர் விற்கும் அல்கத்தீன் புட்டிகள், பதநீர் விற்பனை செய்யும் வாகனங்கள் முதலியன வாங்கக் கடனும் மானியமும் வழங்கியுள்ளது.

வெல்லம் காய்ச்சுவோருக்கு கீழ்க் கண்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

1. நவீன முறையில் வெல்லம் காய்ச்சும் அடுப்புகளை அமைத்துத் தந்து 30 சதமானம் விறகுச் சிக்கனத்தைச் செய்து தந்திருக்கிறது.

2. பதநீர் காய்ச்சும் கொப்பரைகளை ஆரம்பத்தில் இனாமாகவும் பிறகு பாதி விலையிலும் வழங்கித் தற்போது முழு விலையிலும் வழங்கப்படுகிறது. தமிழகத்திலுள்ள சுமார் 1 இலட்சம் பனைவெல்லம் காய்ச்சும் அடுப்புக்களில் 60 சதவீதத்திற்கு மேல் கடந்த 10 ஆண்டுகளில் நவீன முறைக்கு மாற்றப்பட்டன. பழைய முறை அடுப்பினால் சேதாரமாகிய 30 சதமான விறகின் கிரையமும் அடிக்கடி உடைந்துபோகும் மண் பானையின் கிரையமும் கிராமவாசிகளுக்கு மிச்சமாகிறது. இதனால் பனைத் தொழிலாளர்கள் நல்ல இலாபம் பெறுகின்றனர். இந்த இரும்புக் கொப்பரைகளைப் பரப்பியதால் கொப்பரை செய்யும் கருமார்த் தொழிலாளர்களுக்கு நல்ல வேலை வாய்ப்புக் கிடைக்கிறது என்பது சொல்லாமலே விளங்கும்.

3. இதுவரை வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டவுடன் அதைக் குறைந்த விலைக்கே வியாபாரிகளுக்கு வல்லுநர்கள் விற்று வந்தனர். இதை யறிந்து 147 இடங்களில் ரூ. 31·70 இலட்சத்தில் பனைவெல்லத்தையும், தும்பையும் சேகரித்து வைக்கக் கிட்டங்கி கட்டிக் கொடுத்துள்ளது. இக் கிட்டங்கிகளில் ஆரம்பச் சங்கங்கள் வெல்லத்தை 3, 4 மாதங்கள் தேக்கி வைக்கின்றன. அதனால் வெல்லத்தின் விலை உற்பத்திக் காலத்திற்குப் பிறகு உயர்கிறது. உற்பத்திக் காலத்தில் 10 கிலோ கொண்டசிப்பம் 9 ரூபாயிலிருந்து 10 ரூபாய் வரை விற்றது. கூட்டுறவுச்சங்கங்கள் கிட்டங்கிகளைப் பயன்படுத்தியவுடன் பனைவெல்லத்தின் விலை 13 ரூபாய்க்குக் குறையாமல் விற்று வருகிறது. இந்த விலையேற்றம் கிராமத்திலுள்ள உற்பத்தியாளர்களைப் போய்ச் சேருகிறது.

4. கருப்புக்கட்டி வியாபாரிகளிடம் உற்பத்தியாளர்கள் குறைந்த விலைக்குக் கருப்புக்கட்டி கொடுப்பதாகக் கூறிப் பருவமில்லாத காலங்களில் அதிக வட்டிக்குக் கடன் வாங்கி விடுகிறார்கள். இதனால் பொருளாதார வளர்ச்சி தேக்கமுற்றிருந்தது. இதற்காக உற்பத்தியாளர்களுக்கு மூலதனக் கடனைச் சுமார் 2 கோடி ரூபாய்வரை கொடுக்கப்பட்டுள்ளது. இதைக் கொண்டு பெரும்பகுதியான உற்பத்தியாளர்கள் வியாபாரிகளிடம் கடன் வாங்காமல் சங்கத்திலேயே குறைந்த வட்டிக்கோ அல்லது வட்டியில்லாக் கடன் பெற்றோ தொழிலை நடத்துகின்றனர். இதனால் 6 மாதத்தில் பனைவெல்லம் காய்ச்சுவதால் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு சுமார் 9 மாதங்கள் வாழ்க்கை நடத்த வசதிபெறும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டினால் அவர்களுடைய வருமானம் நாளுக்குநாள் உயர்ந்துகொண்டே வருகிறது.

நமது கற்பனைக்கு ஏற்றவாறெல்லாம் தொழில்கள் செய்யப் பனைமரம் மூலப் பொருள்களாகிய ஓலை, மட்டை, நார், ஈர்க்கு, தும்பு முதலியவற்றை தந்து உதவுகிறது. எனவே தான் இந்தத் தொழில் ஆயிர மாயிரம் ஆண்டுகளாய்த் தொடர்ந்து நடந்து வருகிறது.

[வளரும்]

உங்கள் பார்வைக்கு

சீரணி

[கிராம நலம்]

நாடு, நகர், பட்டிதொட்டியெல்லாம் பரவி வாழும் செந்தமிழ்நாட்டு மக்களிடையே தமிழ்நாடு அரசின் நற்சாதனைகளைப் பரவச் செய்தும், தமிழ் மக்களிடையே புதியதொரு விழிப்புணர்ச்சியை உருவாக்கியும், அரும் பணியாற்றிவரும் 'சீரணி' தற்போது உங்கள் கரங்களிலே தவழ்கிறது.

*

'சீரணி' இதழ்களைத் தொடர்ந்து தவறாது படித்துப் பயன்பெற வேண்டுமென உங்கள் உள்ளத்தில் எழுந்துள்ள பேரவாவினை, இன்றே இப்போதே செயற்படுத்த ஓர் அரிய வாய்ப்பு — 'சீரணி' சந்தாதாரராவதே !

கீழ்க்கண்ட படிவத்தை நிறைவு செய்து அனுப்புங்கள். தவிர, ரூ. 3-50ஐப் பணவிடைத் தாள் (மணியார்டர்) வாயிலாக அனுப்பத் தவறுதீர்கள். 'சீரணி' தவறாது அஞ்சல் வாயிலாக உங்கள் இல்லத்தை வந்தடையும்.

* * * * * * * * * * * * * * * * * * * *

சந்தா அனுப்பவேண்டிய முகவரி :
மக்கள் தொடர்பு அதிகாரி
கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம்
கோட்டை
சென்னை-9

நான் பணவிடைத்தாள் வாயிலாக, 'சீரணி'க்கு ஓராண்டுச் சந்தாவான ரூ. 3-50ஐ இன்று அனுப்பி யுள்ளேன். எனக்குச் 'சீரணி' இதழ்கள் ஓராண்டுக் காலத்திற்கு அனுப்பவும்.

பெயர் .....

தெரு .....

ஊர் .....

அஞ்சல் நிலையம் .....

மாவட்டம் .....

With the best compliments of :

Dalmia Cement (Bharat) Ltd.,

DALMIAPURAM P.O., TIRUCHIRAPPALLI Dist.,
Tamil Nadu.

Manufacturers of :
'ROCKFORT' Brand
DALMIA Portland & Pozzolana Cements
and
DALMIA Refractories.
Also
Mine-Owners & Suppliers of
High Grade Iron Ore for Export.

A DALMIA ENTERPRISE

Head Office : 4. Scindia House,
NEW DELHI-1.

ஊராட்சி ஆட்சி முறையால் .....

மிக உயரிய பீடத்திலுள்ள நாடாளுமன்றம் அல்லது மாநிலச் சட்ட மன்றப் பேரவைகளை மட்டுமே ஜனநாயகம் ஆகிவிடா. அஃது ஒவ்வொரு குடிமகனுக்கும் ஆர்வம் தருவதாக இருக்கவேண்டும்; அவரவருக்குரிய இடத்துக்கு ஏற்பப் பயிற்சி தருவதுதான் ஜனநாயகம்; தேவை ஏற்பட்டால் நாட்டில் உள்ள எந்தப் பதவிக்கும் ஏற்றவர்களாக எல்லார்க்கும் பயிற்சி தருவதுதான் ஜனநாயகம். ஒவ்வொரு மனிதனும் சக்தி மிகுந்த தலைமை அமைச்சராவதற்குப் பயிற்சி தருவதற்குத்தான் ஊராட்சி ஆட்சி முறை வேண்டும் என்பேன். எல்லாருமே தலைமை அமைச்சராகிவிட முடியாது என்பதை அறிவேன். ஆனால் நாட்டுப் பணிகளைச் செய்வதற்கு ஏராளமான மக்களுக்குப் பயிற்சி தர வேண்டாமா?

—ஜவகர்லால் நேரு

6-10-1969 அன்று சென்னை இராசாசி மண்டபத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படங்களை இந்தியத் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் திறந்து வைத்தார்கள். விழாவுக்குத் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள் தலைமை வகித்தார்கள்.

மேலே :
14 வங்கிகளைத் தேசிய மயமாக்கியதைப் பாராட்டும் வகையில் 14 பரிசுப் பொருள்களை முதல்வர், தலைமையமைச்சர் அவர்களுக்கு வழங்கும் காட்சி.

கீழே :
பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படங்களைத் திறந்து வைத்து தலைமையமைச்சர் உரையாற்றும் காட்சி.



மேலே: பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் மாண்புமிகு என். வி. நடராசன் அவர்கள் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஏராணிவயல் ஊராட்சி அலுவலகக் கட்டடத்தை 24-9-1969 அன்று திறந்து வைத்தார்கள். ஒன்றியத் தலைவர் திரு. இரா. இராசண்ணயும் படத்தில் காணலாம்.

கீழே: தேசிய ஈரானியன் எண்ணெய் நிறுவனத் தலைவர் மேதகு டாக்டர் இக்பாலை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் தொழிலமைச்சர் மாண்புமிகு செ. மாதவன் அவர்கள் 26-9-1969 அன்று வரவேற்றார்.

நெஞ்சிற்கினிய நண்ப!

நெடிய இடைவெளிக்குப் பிறகு கடிதம் எழுதியிருந்தாய்; வான் பொய்த்ததன் விளைவாக உருவாகிய வறட்சியின் கொடுமையையும் அதை எதிர்த்து அரசு கண்ட வெற்றியையும் விளக்கி, நாட்டுமக்களின் பொறுப்புகளையும் எழுதியிருந்தாய். அரசு மேற்கொண்டுள்ள வறட்சித் துயர் துடைப்புப் பணிகள் பற்றிய விவரங்கள் அனைத்தையும் நாட்டு மக்களுக்கு நல்லமுறையில் தெரிவிக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் தங்களுடைய எதிர்கால பொறுப்புகளை நன்கு உணருவார்கள் என்றும் கருத்தறிவித்துள்ளாய்.

உன்னுடைய கருத்து எனக்கு உடன்பாடானது! அதுமட்டுமல்ல, இதைப்பற்றி நானே உனக்கு எழுத வேண்டும் என்று எண்ணியிருந்தேன். ஆகவே, இக் கடிதத்தில் எனக்குத் தெரிந்த சில விவரங்களை உனக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நண்ப, கடந்த பதினேழு ஆண்டுகளில் கண்டிராத மோசமான வறட்சியின் கொடுமையைத் தமிழ் நாடு இப்போதுதான் கண்டிருக்கிறது என்பதை நீயே எழுதியுள்ளாய். 1952ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடும் வறட்சிக்குப்பின் 1968ஆம் ஆண்டில்தான் தமிழ்நாட்டில் பெருமளவில் வான் பொய்த்தது. 1967ஆம் ஆண்டைவிட 68ஆம் ஆண்டில் பெய்த மழை 36·7 சதவீதம் குறைந்தது. சராசரியாக ஆண்டொன்றுக்கு 913 மில்லி மீட்டர் அளவு மழை பெய்யவேண்டியிருக்க, பெய்த மழை 742·6 மில்லி மீட்டர்தான்.

இதன் விளைவால் —

புன்செய்ப் பயிர்கள் தீய்ந்து போயின என்பதும்; கோவை, தர்மபுரி, வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் நன்செய்ப் பயிரோ புன்செய்ப் பயிரோ விளைவிக்க முடியவில்லை என்பதும், 1968 ஜூன் முதல் 1969 மே திங்கள் வரையிலான முழு ஆண்டுக்கு விவசாய வேலைகளை மேற்கொள்ள இயலாநிலை உருவாகின என்பதும் நீ அறிந்ததுதான்.

இந்நிலையை உடனடியாக உணர்ந்த நம் அரசு, விரிவான திட்டங்களை இறுதியாக உருவாக்கும் வரையில் காலந் தாழ்த்தாமல் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் வறட்சித் துயர்த்தணிப்புப் பணிகளைச் சனவரித் திங்களிலேயே மேற்கொள்ள ஆணையிட்டது.

பிப்ரவரித் திங்கள் 17ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில், அமைச்சர்கள், தொடர்புள்ள துறைகளின் செயலர்கள், நிலவருவாய்த் துறை ஆணையாளர் முதலியோர் கலந்துகொண்ட கருத்தரைக் கூட்டத்தில் வறட்சியால் உருவாகிய நெருக்கடிநிலை ஆராயப்பட்டது. இக் கூட்டத்தில்தான் வறட்சித் துயர்த் தணிப்புப் பணிகளை மேற்கொள்ள இந்திய அரசின் நிதி உதவி நாடப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அடுத்து ஏப்ரல் திங்கள் 9ஆம் நாள் கூட்டப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் வறட்சித் தணிப்பிற்கான விரிவான செயற்திட்டம் முடிவு செய்யப் பட்டது.

நண்ப, வறட்சி நிலையால் உருவாகிய இடர்ப்பாடுகளை நீக்க அரசு எடுத்த தடவடிக்கைகளைச் சுருக்கமாக இப்படி விவரிக்கலாம் என்று எண்ணுகிறேன்.

* குடிப்பதற்கே நீரில்லா நிலையை மாற்றி அமைத்தல்

* விவசாயம் பாதிக்கப்பட்டதால் உணவுப் பொருள்களின் விலை உயரும் சூழ்நிலையைத் தடுத்தல்
* விவசாயிகள் மழையை எதிர்பார்த்து விதைத்திருந்த பயிர்களைப் பாதுகாக்கக் கிணறு களை ஆழப்படுத்தக் கடனுதவி வழங்கல்
* நிலவரி, அரசுக்குத் திரும்பத் தரவேண்டிய கடன் முதலியவைகளில் சலுகைகளை அளித்தல்
* விவசாய வேலையில் நாட்கூலியை நம்பி வாழும் இலட்சக்கணக்கான குடும்பங்களுக்கு ஊதியம் தரும் வகையில் வேலை வாய்ப்புகளை உருவாக்கல்

இந்தப் பணிகளை நிறைவேற்ற அரசு மேற்கொண்ட முறைகளையும் செயற்திட்டங்களையும் நாள்தோறும் செய்தித்தாள்கள் மூலம் தெளிவாக அறிந்திருப்பாய். அவைகளைப்பற்றி நான் விவரிக்கவில்லை. ஆனால் சில விவரங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

குடிநீருக்காகப் பல கிணறுகளை ஆழப்படுத்துவதற்கான செலவு அண்டையிலுள்ள நிலையான நீரூற்று ஒன்றிலிருந்து குழாய்கள்மூலம் நீரினைக் கொண்டு வருவதற்கான செலவை விட அதிகமாக இருக்கும் என்ற நிலை ஏற்பட்ட சில பகுதிகளில் குழாய்கள் மூலம் தண்ணீர் வசதி செய்யும்முறை ஏற்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. குறிப்பாக, கடினமான பாறைகள் நிறைந்திருப்பதால் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு மிக அதிகமான செலவாகும் என்ற நிலையுள்ள சேலம் மாவட்டத்திலும், ஓரளவு ஆறுதிற்கு மேல் உப்புநீரையே அளிக்கும் கிணறுகள் கொண்ட குமரி மாவட்டத்திலும், மலை ஓடைகள் நிறைந்த நீலகிரி மாவட்டத்திலும் இந்தமுறை மேற்கொள்ளப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்தின் கிழக்குப் பகுதிகளில் கிணற்றுநீர் பொதுவாக உப்புநீராக இருப்பதால், குடிநீர் பெறப்படுகின்ற ஊருணிகள் பலவும் தூரெடுக்கப்பட்டு ஆழப்படுத்தப் பட்டன.

நண்ப, கிராமப் பகுதிகளுக்கு மட்டும் அரசு உதவி அளித்ததாக எண்ணுதே! தண்ணீர்த் தட்டுப்பாட்டினால் அவதியுற்ற நகராட்சிகள் பலவற்றிற்கும் கடனுவும் மானியமாகவும் அரசு உதவி அளித்துள்ளது.

உணவுப் பொருள் உற்பத்திக் குறைவை நிறைவு செய்ய மத்திய அரசிடம் மூன்று லட்சம் டன் அளவிற்கு அரிசி வழங்கக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய அரசு இதுவரையில் 60,000 டன் அரிசியையும், 70,000 டன் கோதுமையையும், 24,500 டன் சோளத்தையும் வழங்கியுள்ளது. அரசாங்கத்திற்கு அடக்க விலை கிலோ 91 காசு ஆனபோதிலும் அதைவிடக் குறைவாக கிலோ 75 காசு என்ற விலைக்குக் கோதுமை பொதுமக்களுக்கு விற்கப்பட்டது.

வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதே இந்தத் துயர் துடைப்புத் திட்டத்தை மேற்கொண்டதன் அடிப்படைக் காரணமாக இருந்தபோதிலும், இந்த வறட்சி நிலைமையை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற நோக்கத்துடன் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவக்கூடிய வேலைகளே முக்கியமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

'பல ஆண்டுகளாக மேடிட்டிருந்த பெரிய, சிறிய பாசன ஏரிகள் பலவும் அவற்றைச் சார்ந்த நீர்பிடிப்புக் கால்வாய்களும் தூர் எடுக்கப்பட்டு ஆழப்படுத்தப்பட்டன' என்பதை உன் கடிதத்திலேயே குறிப்பிட்டிருந்தாய்.

நண்ப, இந்தப் பணிகளின் உச்சக் கட்டத்தில் ஒரு சமயத்தில் 40,604 வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. 8·1 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது.

ஏனைய புள்ளி விவரங்களையும் தகவல்களையும் சிறு சிறு செய்திகளாகச் 'சிரணி' இதழில் பல இடங்களில் தரப்பட்டிருப்பதை நீயும் உன் நண்பர்களும் கண்டிருப்பீர்கள். நண்ப, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்புவரை வறட்சித் துயர் துடைப்புக்காக 17·59 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து இதுவரையில் கிடைத்திருக்கும் தொகை 11·25 கோடி ரூபாயாகும். அண்மையில்

மேலும் 2 கோடி ரூபாய் மத்திய அரசு அளித்துள்ளது.

முடிவாக இம்மடலில் உனக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புவது நீ எழுதியதையே தான். கடந்த பதினேழு ஆண்டுகளில் கண்டிராத வறட்சிக் கொடுமைக்குத் தமிழ்நாடு ஆளானலும் அதை எதிர்த்துத் தமிழ் நாடு அரசு வெற்றி கண்டது. உன் நண்பரான ஊர்ப்பணியாளர் மக்களிடம் இத் தகவல்களை எல்லாம் எடுத்துரைத்துப்பார் என்று நம்புகிறேன்.

அரசு மேற்கொண்ட நிவாரணப் பணிகளின் மூலம் நிலையான பரிகாரங்கள் பல இடங்களில் கிடைத்திருக்கின்றன. இந்தத் தகவல்களை அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

பிற பின்,
உன் நண்பன்
மாமூலன்

வறட்சி நிவாரணத் திட்டம் — தோவாளை ஊராட்சி ஒன்றியம்

ஏறத்தாழ 62,000 மக்கள் தொகையைத் தன்னகத்தேகொண்ட தோவாளை ஊராட்சி ஒன்றியம் தன் தலைமையகத்தைப் பூதப்பாண்டியில் அமைத்துச் சிறப்பாக மக்கள் தேவையைப் பூர்த்திசெய்து வருகிறது. இவ் வட்டாரத்தில் பெரும்பாலான கிராமங்கள் குடிதண்ணீர் வசதியின்றி ஊர் தோறும் நீர் தேடியலையும் அவல நிலையால் மக்கள் அல்லற்பட்டனர். வசதி படைத்த சிலர் ஏழு கல் தொலைவிலுள்ள நாகர்கோவிலில் சென்று குடிதண்ணீர் கொண்டு வருகின்றனர். மழையின்மைக் காலங்களில் ஆழ் கிணறும் நீரின்றிப் பாழ்கிணருய் காட்சிதரும்.

இந்த இக்கட்டான நிலையில் தமிழ்நாடு அரசினர் தங்குதடையின்றி எங்கணும் நிறைவேற்றிவரும் 'வறட்சி நிவாரணத் திட்டத்தை' தோவாளை ஊராட்சி ஒன்றியத்திலும் நிறைவேற்று உத்தரவு நல்கி, தற்பொழுது ரூ. 2,99,000 மதிப்பீட்டில் 53 கிராமங்களுக்குக் குடிநீர் கிடைக்கும் வகையில் திட்டமிட்டுச் செயலாற்றிப் பெரும்பாலான திட்டங்கள் நிறைவு பெற்று விட்டன.

அன்றி ரூ. 3,25,000 மதிப்பீட்டில் 31 கிராமங்களுக்குப் பயன்படும் குடிநீர்த்திட்டமும் செயற்படுத்தும் நிலைக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நிறைவுபெறும் குடிநீர்த்திட்டங்களின் பட்டியல்

		ரூ.
1.	ஈசாந்திமங்கலம் ...	3000
2.	சகாயநகர் ...	3000
3.	வாழைக்கோணம் ...	3500
4.	செண்பகராமன் புதூர் மேல்நிலை குடிநீர்த் திட்டம்	40,000
5.	வெள்ளமடம் மேல்நிலை குடிநீர்த் திட்டம் ...	70,000
6.	பீமநகரி குழாய்த் திட்டம் ...	
7.	வடக்கு ஆரல்வாய்மொழி குழாய் குடிநீர்த் திட்டம்	21,500
8.	கேசவன்புதூர் குழாய்நீர்த் திட்டம் ...	30,000
9.	காட்டுப்புதூர் குடிநீர்த் திட்டம் ...	6,000
10.	தோவாளை மேல்நிலை குடிநீர்த் திட்டம் ...	40,000
11.	சுப்ரமணியபுரம் குழாய் குடிநீர்த் திட்டம் ...	40,000
12.	குமாரபுரம் கிணறு வேலைத் திட்டம் ...	8,000
13.	செண்பகராமன்புதூர் குழாய்நீர்த்திட்ட விரிவினை	20,000
14.	பொய்கை கால்வாய்ப் பராமரிப்பு ...	14,000
	ரூ.	2,99,000

செல்லம்மா மருதடிக் கிராமத்தில் செந்தூரான் என்ற விவசாயியின் மகள். அந்தக் கிராமத்துக் கல்யாண வயசுப் பெண்களில் செல்லம்மாவுக்குத்தான் அதிகமான ஊரிலிருந்து பெண் கேட்டு வந்தார்கள். ஒன்று பொருத்தமாக இருந்தால் இன்னொன்று மனசுக்குப் பிடிக்கவில்லை. எனவே, கல்யாணம் தடைப்பட்டு வந்தது.

செல்லம்மாவின் தாய் இறந்து போய்விட்டாள். செல்லம்மாவுக்குப் பின் பிறந்தவன் ஒரு தம்பி. அந்த ஒரே தம்பியைக் கண்ணின் மணியைப் போலக் காத்து வந்தாள் செல்லம்மா.

செல்லம்மாவின் தாய் இறந்த பின்பு செந்தூராணை மறுமணம் செய்துகொள்ளும்படி ஊரில் அநேகர் வற்புறுத்தினர்கள். அதற்கெல்லாம் செந்தூரான் ஒரேயடியாக மறுத்து விட்டான்.

அந்தச் சிறிய குடும்பத்தில் மனைக்கு அரசி இல்லையே என்ற கவலை இல்லாமல் எல்லாப் பொறுப்பையும் சரியாக நிர்வகித்து வந்தாள் செல்லம்மா. தம்பியைக் கிராமப் பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காக அனுப்பி வந்தாள்.

செல்லம்மா தன் கல்யாணத்தைப்பற்றி ஒன்றுமே அக்கறை கொள்ளவில்லை என்று சொல்லிவிட முடியாது. கிராமத்தில் சில இளைஞர்கள் தன்னை ஒரு மாதிரியாக நோக்குவதை அவள் அறிவாள். அதை எல்லாம் அவள் பொருட்படுத்துவது கிடையாது. ஆனால் ராமு அத்தையின் மகன் முத்துக்குமாரு என்றால் அவள் மனத்தில் மகிழ்ச்சி பொங்கிற்று.

ராமு அத்தை கொஞ்சம் சின்ன வயதிலேயே கைம்பெண் ஆனவள். முத்துக்குமாரு அவளுக்கு ஒரே மகன்; ஆள் அழகன்; சோம்பல் இல்லாமல் விவசாய வேலைகளில் எப்போதும் ஈடுபட்டிருப்பான்; ஊரில் பலர் சொல்வதைப்போல நாலு எழுத்துத் தெரிந்தவன். ராமு அத்தை வெகு சிக்கனமாக வாழ்ந்து கொஞ்சம் பணம் வேறு சேர்த்து வைத்திருந்தாள். காரைவீடு கட்டி, கூரைக்கு ஓடு போட்டிருந்தாள். சமீபத்தில் ஒரு நன்செய் நிலத்தையும் சொந்தமாக வாங்கியிருந்தாள்.

ராமு அத்தை செல்லம்மாவிடம் அன்போடு பழகுவாள். அவள் வேலைத் திறனைப் பல தடவை மெச்சி இருக்கிறாள். பெண் பிறந்தால் செல்லம்மாவைப் போலக் கட்டு செட்டாக இருக்க வேண்டும் என்று ஒரு தடவை அத்தை சொன்னது கூட அவள் மனத்தில் நன்றுகப்

பதிந்து போயிருந்தது. தன்னைப் பெண்கேட்டு அத்தை வரமாட்டாளா என்று அவள் மனத்தில் ஓர் ஏக்கம்.

ஊர்ச்சாவடியில் பொதுக்கூட்டம். ஊரிலுள்ள பழைய கணக்கு வழக்குகளைப் பார்த்துப் புதிய நாட்டாண்மைக்காரரை நியமிக்க ஊர் மக்கள் கூடியிருந்தார்கள். வழக்கத்துக்கு மாறாக இளவட்டப் பிள்ளைகளில் யாருக்காவது ஒருவனுக்கு அந்த வருடம் நாட்டாண்மைப் பதவியைக் கொடுக்கவேண்டும் என்று முதியவர்கள் எல்லாம் ஒரே அடியாக வற்புறுத்தினார்கள். மாலை முத்துக்குமாரு கழுத்தில் விழுந்தது. ஊரிலுப் பொறுப்பான புள்ளி அவன்தான் என்று எல்லாரும் ஒரே மனதாய்ச் சொன்னார்கள்.

செல்லம்மாவுக்கு இப்போதெல்லாம் முத்துக்குமாரு என்று சொன்னாலே நாணம் பிறந்தது. அவன் முகத்தை நேரில் பார்க்க அவளுக்குத் துணிவு இல்லை. அவன் எதிரில் வந்தாலே அவள் இதழ்க்கடையில் ஓர் இளநகை இசைசாக அரும்பும்.

ஆனால் அன்று நடந்ததைச் செல்லம்மா கொஞ்சங்கூட எதிர் பார்க்கவில்லை.

மழைக்காலத்து நடவு. ஊர் மக்கள் எல்லாரும் ஊரையடுத்திருந்த நன்செய்யில் மும்முரமான உழவுத் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள்.

கோழி கூவும் நேரத்திலேயே ஆண்கள் எழுந்து மாடுகளைத் தொழுவத்திலிருந்து அவிழ்த்து வயலுக்கு ஓட்டிக்கொண்டு போய் ஏரில் பூட்டுவார்கள். காலைக் குளிர் எல்லாம் இளவயசினருக்குச் சரி. ஆனால் செந்தூரான் போன்றவர்களுக்கு அவ்வளவு சரிப்பட்டு வராது. செல்லம்மாவுக்கு இதைப்பற்றி உள்ளூரக் கவலை. அவளுடைய தம்பி இன்னும் சிறுவனுகையால் மேழி பிடிக்கவில்லை. அவன் பெரியவனுய் விட்டால் தகப்பனின் துன்பம் ஒழியும். ஆனால் இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு அவன் ஏரின் பின்னல் செல்ல முடியாது.

செந்தூரான் ஒரே ஏர் உடையவன். அந்த ஒரே ஏரைக் கொண்டு தான் அவன் விவசாயம் செய்து வந்தான். அந்த ஒரே ஏரினுல்தான் அவர்கள் பிழைப்பு நடந்தது. அந்த ஓர் ஏர் மாடுகள்தாம் அவர்கள் சொத்து.

அன்று செந்தூரான் கோழி கூவியவுடன் எழுந்து மாடுகளை ஓட்டிக் கொண்டு வயலுக்குப் போய்விட்டான். காலை எட்டு மணி அளவில் செல்லம்மா தகப்பனுக்குக் கஞ்சி எடுத்துக் கொண்டு போனுள். தகப்பன் வயசானவன். ஏரின் பின்னலே சுற்றிச் சுற்றி வருகிறவன். அதிக நேரம் பசி தாளமாட்டான். கஞ்சிக்கலயத்தோடு வேகமாக நடந்து போனுள் செல்லம்.

''செல்லம்'' என்று அன்புடன் யாரோ கூப்பிடுவதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் அவள். அத்தை தான் கூப்பிட்டது.

''என்ன அத்தை?'' என்று கேட்டு நின்ருள் செல்லம்.

இதைக் கொண்டுபோய் முத்துக்குமாருவிடம் கொடுத்து விடுகிறுயா? நீ போகும் வழியில்தான் அவன் உழுது கொண்டிருக்கிருன்'' என்ருள்.

செல்லத்துக்கு ஒரு கணம் அயர்வு ஏற்பட்டது. அது உண்மையில் நடப்பதுதானு என்று மலைத்தாள். அவள் உடலம் புல்லரித்தது.

''சரி அத்தை, கொடுங்கள்'' என்ருள்.

அவள் கையில் கலயமும் தலையில் ஒரு பொட்டலமும் இருந்தன. பெரிய ஓடைக்கு அருகில் வரும் போதே மதகடி வயலில் முத்துக்குமாரு உழுது கொண்டிருந்தது செல்லம்மா கண்களில் பட்டது. அவளிடம் அந்தக் கட்டுச் சோற்றை எப்படிக் கொடுப்பது? அவனே முதலில் எப்படி அழைப்பது? இதுவரை ஒரு தடவை கூட அவனிடம் பேசி அறியாள். எண்ணமிட்டுக்கொண்டே நடந்தவள் வயல் அருகில் வந்துவிட்டாள். முத்துக்குமாரு அவளைக் கவனித்தானு, இல்லையா தெரியாது. ஆனால் அவள் அங்கே வந்த சமயம் எதிர்ப்பக்கம் வரப்பு அருகில் ஏர் மடங்கிக் கொண்டிருந்தது. ஆகவே அவன் அருகில் வரும்வரை

அவள் நின்று கொண்டிருந்தாள். இருவர் கண்களும் சந்தித்தன.

''அத்தான், அத்தை உங்களுக்குச் சோறு கொடுத்து விட்டிருக்கிறார் கள்.''

எப்படியோ சொல்லிவிட்டாள் செல்லம். முத்துக்குமாரு ஏரை அப்படியே விட்டுவிட்டு வரப்பில்

தாவிக் குதித்தான். அவள் நீட்டிய கட்டுச்சோற்றை வாங்கிக்கொண் டான்.

''அம்மாவுக்கு ராத்திரியே காய்ச்சல். எப்படி வரப்போகிறுள் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். நல்ல வேளை!''

அவன் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருப்பதா அல்லது போவதா என்று தெரியவில்லே. அவன் முகத் தைப் பார்த்து அவன் சொல்வதை அக்கறையோடு கேட்டாள்.

''சரி, வரும்போது இந்த வழியா கத்தானே வருவாய்? பாத்திரத்தை எடுத்துக் கொண்டு போகிறயா?'' என்றாள்.

சரி என்பதற்கு அடையாளமாகத் தலேயை மட்டும் அசைத்துவிட்டு, தகப்பன் உழுது கொண்டிருந்த வயலே நோக்கி நடந்தாள். அங்கே செந்தூரான் வயலில் உழாமல்

வரப்பில் உட்கார்ந்திருந்தான்.

''என்ன அப்பா, உனக்கு?'' என்று ஆவலோடு கேட்டாள் செல்லம்மா.

''மயக்கமாய் வருகிறது. சற்றே உடம்பு காய்ந்தது.''

''இன்றைக்கு உழுதது போதும். ஏரை அவிழ்த்துவிடு அப்பா'' என்றாள் செல்லம்.

''அதெல்லாம் வேண்டாம், பசி தாங்க முடியவில்லை. அதனால்தான் இப்படி நேர்ந்தது. இன்று முச்சால் முடிக்காமல் ஏரை அவிழ்க்கப்போகிறதில்லை. இனிமேல் கொஞ்சம் சீக்கிரமாகவே வா அம்மா'' என்றான்.

''சரி அப்பா.''

தான் கொஞ்சம் சீக்கிரமாக வந்திருக்கலாம்; முத்துக்குமாரு அத்தானுக்குச் சோறு வாங்கிக் கொண்டு வந்ததால்தான் கொஞ்சம் தாமதம் ஏற்பட்டு விட்டது என்று நினைத்துக் கொண்டாள்.

செந்தூரான் உண்டு முடிந்ததும் மீண்டும் உழத்தொடங்கினான். செல்லம்மா திரும்பினாள். முத்துக்குமாரு வயலை அடைந்ததும் அவன் பாத்திரத்தை அவளிடம் கொடுத்து விட்டு, ''ஏன் உங்கள் ஏர் அதிக நேரம் நின்று கொண்டிருந்தது?'' என்று கேட்டான்.

''அப்பாவுக்குக் கொஞ்சம் உடம்பு சரி இல்லை. அடிக்கடி மயக்கமாய் வருகிறது.''

''ஆமாம், அவருக்கும் வயசு ஆகிறதில்லையா? செல்லம்மா, பயப்படாதே. நாளைக்கு நானும் அவர் கூட ஏர் ஓட்டி நான்கு நாளைக்குள் உங்கள் வயலை நடவுக்குத் தயார் செய்துவிடுகிறேன்'' என்றான் முத்துக்குமாரு.

அவனை நன்றியுணர்வோடு மட்டும் பார்த்துவிட்டு வீட்டை நோக்கி நடந்தாள் செல்லம்மா.

அந்த வருடம் செந்தூரான் பயிர் செய்த இரண்டு வயல்களிலும் கூட மாட முத்துக்குமாரு ஒத்தாசை செய்தான். செல்லத்துக்கு அளவிட முடியாத மகிழ்ச்சி. இனி தன் கனவு நனவாகும் என்பதில் சந்தேகம் இல்லை.

மாசி, பங்குனி அறுவடை எல்லாம் முடிந்து ஒருவாறு ஓய்வு ஏற்பட்டது. செந்தூரான் வயலும் நன்றாக மேனி கண்டிருந்தது. முத்துக்குமாரு உழவு, நடவு காலத்தில் செய்த உதவியை மறக்க முடியாது.

விடாப்பிடியாக அறுவடைக் காலத்தில் ஓய்வு இல்லாமல் வேலையில் ஈடுபட்டிருந்ததால் முத்துக்குமாரு அசதியால் லேசாகக் காய்ச்சல் அடித்துப் படுத்துக்கொண்டிருந்தான். செல்லமாவுக்கு அது தெரிந்தது.

வீட்டு வேலைகளை எல்லாம் முடித்த பிறகு முத்துக்குமாருவைப் பார்த்து வர அவனுடைய வீட்டுக்குப் போனாள். அவள் போன சமயத்தில் ராமு அத்தை இல்லை.

''என்ன அத்தான், உங்களுக்குக் காய்ச்சலாமே?'' என்று பரிவுடன் விசாரித்தாள்.

படுத்துக் கிடந்தவன் அவளைக் கண்டதும் எழுந்து உட்கார்ந்தான்.

''ஆமாம்; லேசாகக் காய்ச்சல், வேறு ஒன்றும் இல்லை; எங்கே மேல் சுடுகிறதா, பார்.'' கொஞ்சமும் தயக்கம் இல்லாமல் புறங்கையை அவன் நெற்றியில் வைத்துப் பார்த்தாள் செல்லம்மா.

''இலேசாகத்தான் காய்கிறது'' என்றாள்.

''உன் கை எவ்வளவு குளிர்ச்சியாக இருக்கிறது, தெரியுமா?'' என்றான்.

உடனே ஒருவர்க்கு ஒருவர் சரியாகப் புரிந்து கொள்ளாத ஒரு சம்பவம் நடந்தது. முத்துக்குமாரு தன் தலைக்கடியில் வைத்திருந்த பணத்தில் இரண்டு நோட்டுக்களாக இருபது ரூபாயை எடுத்து அவள் கையில் வைத்தான்.

''ஏன் இந்தப் பணம் அத்தான்?''

''சும்மாதான், உனக்காகவே.''

''எனக்கா? எனக்கு ஏன் இந்தப் பணம்?''

முத்துக்குமாருவினால் அதற்குச் சரியான பதில் சொல்ல முடியவில்லை. அவள் மீது உண்டான தன் அன்பை அவனுக்கு வேறு ஒரு விதத்திலும் புரிய வைக்கத் தெரியவில்லை. அவ்

வளவுதான். அதற்குமேல் ஒரு காரணமும் இல்லை.

''சும்மா வைத்துக்கொள்'' என்றான். செல்லம்மா மிகவும் ரோசக்காரி. அவன் செயல் நேர்மை இல்லாததாக அவள் மனத்தில் பட்டது. சட்டென்று கோபம் வந்தது அவளுக்கு.

''அத்தான், என்ன நினைச்சிங்க?'' என்று சொல்லி இரண்டு நோட்டுக்களையும் கசக்கி அவன்மீது எறிந்துவிட்டு எழுந்து வேகமாக வந்துவிட்டாள்.

முத்துக்குமாரு திகைத்துப் போனான். இதை அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

செல்லம்மா அன்று முழுவதும் அழுதுகொண்டே இருந்தாள். முத்துக்குமாரு நேர்மை இல்லாதவன், தன்னைக் கல்யாணம் செய்துகொள்ள அவனுக்கு விருப்பம் இல்லை என்ற முடிவுக்கு வந்தாள். நாளடைவில் அவன் கண்ணில் தட்டுப்படுவதை நிறுத்திக்கொண்டாள்.

செல்லம்மா நினைத்ததைப்போல் விகற்பமான எண்ணம் எதுவும் முத்துக்குமாரு மனத்தில் இல்லை. செல்லம்மாவைத்தான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்பதே அவனுடைய முடிவு. ஆனால் அவன் அம்மாவுக்குப் பயந்த பிள்ளை. கல்யாணம் காட்சி என்று பேச்சு வரும்போது தன் எண்ணத்தை வெளியிடலாமே தவிரத் திடுதிப்பென்று, ''செல்லம்மாவை நான் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன்'' என்று சொல்லித் தப்பமுடியாது அம்மாவிடமிருந்து. ஆகவே தன் செயலைக் குறித்து செல்லம்மா தன்னைத் தப்பாக எண்ணிக்கொண்டாளே என்று அவன் உள்ளுக்குள் ஊனிந்து வருந்திக் கொண்டிருந்தான்.

நாட்கள் போய்க்கொண்டிருந்தன. நட்ட நடவு செழித்து வளர்ந்து, பூப்பிடித்து, சூல் கொண்டு, கதிர் ஈன்று, மணிகள் முற்றி வீனைந்து அறுவடைக்கும் தயாராகிவிட்டது. முத்துக்குமாரு மீது செல்லம்மா உள்ளத்தில் ஏற்பட்ட கோபமும் அப்படியே வளர்ந்து கொண்டிருந்தது. பல தடவைகளில் முத்துக்குமாரு அவனைத் தனிமையில் அணுகிப் பேச முற்பட்டான். அவள் அவனிடம் முகம் கொடுத்துப் பேச மறுத்துவிட்டாள்.

அன்று முழுநிலா. களத்தில் தனியாக நின்று கொண்டிருந்தாள் செல்லம்மா. முத்துக்குமாரும் தன்னுடைய களத்திலிருந்து தனியாக வீடு திரும்பிக் கொண்டிருந்தான். நடைவரப்பை ஒட்டியுள்ள களத்தில் தனியாக நிற்பது செல்லம்மாதான் என்பதை அறிந்தும் அவனை அணுகி, ''என்ன செல்லம்மா, ஒரேயடியாகக் கோபமாக இருந்தால் எப்படி? இன்னும் கோபம் ஆறவில்லையா?'' என்றான்.

செல்லம்மா சட்டென்று, ''உங்களுக்கும் எனக்கும் இனிப் பேச்சு இல்லை'' என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டாள். அது சுருக்கென்று பாய்ந்து விட்டது அவன் உள்ளத்தில்.

விறுவிறு என்று மேலே நடந்தான். அந்த முரட்டுப் பெண்ணுக்குச் சரியான புத்தி புகட்டவேண்டும் என்று தீர்மானித்தான். உள்ளத்தில் எழுந்த எரிச்சலை மிகவும் முயன்று மறைத்துக்கொண்டு சரியான வேளையை எதிர்நோக்கிக் கொண்டிருந்தான்.

அறுவடை முடிந்து கிராமத்தார் திருவிழா நடத்த நினைக்கும் காலம். அம்பலத்தில் ஊர்கூடி இருந்தது. திருவிழாவை ஒட்டி ஊருக்குப் பொதுவாக என்ன பணிகளைச் செய்து முடிக்கவேண்டும் என்பதையும் ஆலோசித்தார்கள். பெரிய குளத்தில் புதிதாக இரண்டு படித்துறைகள் அமைத்தல், அம்பலத்தின் தரைக்குச் சதுரச் செங்கல் பாவுதல் முதலிய செய்திகளைப்பற்றி யோசித்தார்கள்.

''இந்தப் புதுப் பணிகளுக்கு இந்த ஆண்டு வரி கொஞ்சம் அதிகமாகத்தான் போடவேண்டிவரும்'' என்றான் நாட்டாண்மை முத்துக்குமாரு.

வரி அதிகமாக இருப்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் மனிவி இல்லாதவர்கள் அரை வரி கொடுத்து வருவதற்குப் பதிலாக முழு வரி கொடுக்க வேண்டும் என்று அவன் சொன்னதைச் சிலர் மறுத்தார்கள். இறுதியில் அவர்களும் அவன் சொன்ன விவரத்தைக் கேட்டுப் புதுப்பணிகள் வரும்

போது கொடுப்பதனுல் தவறு இல்லே என்று ஒப்புக்கொண்டார்கள்.

ஆனுல் முத்துக்குமாரு நிணேத்தபடி செல்லம்மாவோ அவளுடைய தகப்பனே 'முழுவரி கொடுக்க இயலாது; அரைவரிதான் கொடுக்க முடியும். அதற்கு ஏற்ற வழி செய்ய வேண்டும்' என்று அவனிடம் கெஞ்சிக் கேட்க வரவில்லே. முத்துக்குமாரு எதிர்பார்த்ததற்கு நேர்மாருக, தன் தகப்பணேப்போல மணேவி இல்லாதவர்களுக்கும் முழுவரி போட்டது சரி அல்ல என்றும், வழக்கம்போல் அரை வரியைத் தவிர முழுவரி கொடுக்க முடியாது என்று செல்லம்மா மறுத்து விட்டதாகவும் தண்டல்காரன் முத்துக்குமாருவிடம் வந்து சொன்னுன்.

அவனேத் தண்டிக்க அதுதான் தக்க சமயம் என்று எண்ணினுன் முத்துக்குமாரு. ஊரில் உள்ள சில முக்கிய மானவர்களிடம் அதை எப்படிச் சொல்லவேண்டுமோ அந்த விதமாகச் சொல்லி, செந்தூரான் வீட்டை ஊரிலிருந்தே விலக்கி வைத்துவிட்டான். முத்துக்குமாரு பழி தீர்க்கவே அவ்வாறு செய்கிருன் என்று ஒருவாறு செல்லம்மா ஊகித்துக் கொண்டாள்.

முத்துக்குமாரு முன்னே நின்று ஊர்த்திருவிழா நடத்தினுன். படித்துறைகள் கட்டினுன். அம்பலத்துக்குச் சதுரச் செங்கற்கள் பாவிச் செம்மை செய்தான். இத்தனேக்கும் செந்தூரான் வீடு விலகியிருந்தது.

நாட்கள் கழிந்தன. இதுவரை காய்ந்த வயல்களில் கோடை மழை பெய்யவும் கோடை உழவுக்கு ஊரார் எத்தனித்தார்கள். ஒரு நல்ல நாளில் பொன்னேர் பூட்டி உழவு ஆரம்பித்து மடமடவென்று புழுதி எடுக்க ஆரம்பித்தார்கள்.

செந்தூரான் முதல்நாள் தன் பெரிய வயலில் தரிசு உழவு உழுது விட்டு வந்து படுத்தவன்தான். அப்புறம் எழுந்திருக்காமல் பாயும் படுக்கையுமானுன்.

முத்துக்குமாரு காதில் அந்தச் செய்தி விழுந்தவுடன் மகிழ்ச்சியடைந்தான். 'இனி இந்தச் செல்லம்மா எங்கே ஓடிவிடுவாள்? வரட்டும் வழிக்கு!' என்று இருந்தான்.

ஆனுல் அந்த உழவன் மகள் அசைந்து கொடுப்பதாய்த் தெரிய வில்லே. தனக்குத் தெரிந்த முறையில் தகப்பனுக்குக் கஷாயம் போட்டுக் கொடுத்துவிட்டுத் தங்கள் பயிர் செய்யும் வயல்களே எவ்வாறு புழுதி உழவு செய்வது என்று தீவிரமாகச் சிந்திக்கலாளுள். தான் ஊரோடு சேர்ந்துகொள்ள ஒரே ஒரு வழி தான் உண்டு. நாட்டாண்மைக் காரன் மூலமாக ஊராரிடம் மன்னிப்புக் கேட்டு, விதிக்கும் தண்டனேயை ஏற்று, கொடுக்காத வரியையும் தந்துவிடவேண்டும். அதை நிணேக்கும்போதே செல்லம்மாவுக்குப் பற்றி எரிந்தது. தீவிரமாகச் சிந்தனே செய்து ஒரு முடிவுக்கு வந்தாள்.

அன்று மாலே தன்னுடைய மாடுகளே ஓட்டிக்கொண்டு தன் வயலில் உழவுதற்குப் போய்க்கொண்டிருந்த முத்துக்குமாரு, தரிசு உழவுமட்டும் நடந்து கட்டியும் முட்டியுமாகக் கிடக்கும் செல்லம்மா வயலேப் பார்த்தான். பரிதாபகரமாய் இருந்தது அது! மற்ற வயல்களில் முச்சால் உழவு மடமடவென்று முடிந்த புழுதி பறந்து கொண்டிருந்தது. செல்லம்மா வயல் அப்படிக் கிடப்பதற்குத் தானே காரணம் என்று நிணேத்த போது, அவன் குன்றிப்போனுன். செல்லம்மாமீது இரக்கம் கொண்டான். மீண்டும் அவளேத் தலயாகச் சந்தித்துத் தன் உள்ளத்தை வெளியிட்டு விவசாய வேலேயில் அவளுக்கு ஒத்தாசை செய்ய விரும்பினுன்.

மறு நாள் பின் நிலவு. அதிகாலே நிலவு வெளிச்சத்தில் தன் மாடுகளே ஓட்டிக்கொண்டு உழவுக்கு வேகமாகப் போய்க் கொண்டிருந்த முத்துக்குமாரு, செல்லம்மா வயலில் யாரோ ஒரு வேற்று ஆள் உழவுதைக் கண்டான். 'யாராக இருக்கும் அவன்?'' என்று ஒரு கணம் யோசித்தான். ஊர்க் கட்டுப்பாட்டை மீறிச் செல்லம்மாவுக்கு உதவி செய்யத் துணிந்தவன் யார்?'' என்று அடங்காத கோபம் வந்தது அவனுக்கு.

அன்று மாலேயில் செல்லம்மா வயலில் கிடந்த பெரிய கட்டிகள் எல்லாம் மறைந்துபோய் அது முச்சால் அடித்துக் கிடந்தது.

அவளுக்கு உதவி செய்யும் அவனே மறைந்திருந்து கண்டுபிடிக்க வேண்

டும் எள்ரு முடிவு செய்தான். செல்லம்மாவின் தம்பி மேழி பிடிக்கக் கற்றுக் கொண்டான் என்றும், அவன்தான் வயலை உழுவது என்றும், சிலர் பேசிக்கொள்வது முத்துக் குமாரு காதில் விழுந்தது. நேற்று ஏர் பிடிக்கக் கற்றுக் கொண்டவனு அவ்வளவு சீராக ஏடு சேர்ந்ததைப் போல அடுக்கு அடுக்காகச் சால் அடித்து உழ முடியும்? முத்துக்குமாரு சால் போன பக்கமாக நின்று பார்த்தான். நரல் பிடித்ததைப்போலக் கிடந்தது அகன்ற ஆழமான சால். இடித்துத் தெள்ளிய மாவைப்போல் பொலபொலவென்று இருந்தது புழுதி.

அன்று காலை முத்துக்குமாரு தன் வயலுக்கு ஏர் கொண்டுபோகவில்லை. அதிகாலையில் நல்ல கருக்கல் நேரத்தில் ஒரு சாயத் துணியை எடுத்துப் போர்த்திக்கொண்டு விறுவிறு என்று செல்லம்மா வயலை நோக்கி நடந்து போனான். யார் உழுகிறது என்று துப்புக் கண்டுபிடிக்கத்தான்.

செல்லம்மாவின் வயலில் ஏர் ஒன்று உழுது கொண்டிருந்தது. இருட்டில் உழுபவர் யார் என்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. யாரானாலும் ஒன்று நிச்சயமாயிற்று. அது செல்லம்மாவின் தம்பி அல்ல. கொஞ்சம் விடிந்தும் முகம் தெரிந்துவிடும்; பிறகு யார் என்று கண்டுபிடித்து விடலாம் என்று எண்ணியவனுய் ஐந்து ஆறு வயல் கூலைக் கடந்து தள்ளிப்போய் ஒரு வரப்பில் உட்கார்ந்து கொண்டான்.

காலை நேரம் பலபலவென்று விடிந்துவந்தது. ஏர் வடம் 'கர்புர்' என்று செய்துகொண்டிருந்த சப்தமும் இப்போது சரியாகக் காதில் விழவில்லை. உழுது கொண்டிருந்தவர் யார் என்று தெரிந்தது முத்துக் குமாருவுக்கு. செல்லம்மாவின் தம்பி தான், ஏரின் பின்னல் மேழியைப் பிடித்துக்கொண்டு வலம் வந்து கொண்டிருந்தான். செல்லம்மா வரப்பில் தம்பிக்குத் துணையாக உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

ஆனல் இவ்வளவு செம்மையாகப் பண்பட்ட உழவு உழுதது செல்லம் மாவின் தம்பியா? அல்லவே அல்ல. அவன் காலை நேரத்தில் மேழியைப் பிடித்துக்கொண்டு சுற்றிச்சுற்றி வந்தது ஊர் ஒப்புக்குத்தான்!

செல்லம்மாவை இவ்வளவு கொடுமைக்கு, தான் உள்ளாக்கியதை நினைத்து மிகவும் வருந்தினன். தனக்குப் பல மாடு கன்றுகளும் பல ஏர்களும் இருந்தாலும் இந்த ஓர் ஏர் உழவன் மகளைப் பணியவைப்பது முடியாத காரியம் என்று அவன் மனத்தில் பட்டு விட்டது.

பருவ மழை பெய்ததும் நாற்றுக்கு விதை விட்டார்கள். செல்லம்மாவும் பின்வாங்கவில்லை. ஒற்றையாக நின்று, யாருக்கும் இளைத்தவள் அல்ல என்று பயிர்த்தொழிலைச் செய்துகொண்டிருந்தாள். அந்த வயலைப்போல அவளுடைய மற்றொரு வயலிலும் உழவு ஆயிற்று. முத்துக்குமாரு இதைப்பற்றி வெளிக்கு மூச்சுக் காட்டவில்லை. அவளிடம் எப்படித் தன் தோல்வியை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்பது என்றுதான் ஏங்கிக் கொண்டிருந்தான்.

வயல்கள் எல்லாம் புழுதியாகி, கோடை வெயிலில் காய்ந்து தெள்ளு புழுதியாக ஆகிவிட்டது. அணை திறந்து வாய்க்காலில் தண்ணீர் விட்டதும் காய்ச்சலோடு காய்ச்சலாய் மடமடவென்று தண்ணீரைப் பாய்ச்சி நட்டுவிடவேண்டும். காய்ந்த புழுதியில் ஈரம்படியும் முன்னர் நட்டுவிடவேண்டும் என்ற பரபரப்பில் தண்ணீர் பாய்ச்சுவது, நடவுக்கு ஆட்களைச் சேகரிப்பது முதலியன எல்லாம் சிக்கலான காரியம். செல்லம்மா இதற்கும் ஒரு யோசனை செய்து வைத்திருந்தாள்.

பெரிய வயலுக்கு நடவு நாள் குறிப்பிட்டு, தன் உறவினர்களுக்கு அதைத் தெரிவித்துவிட்டாள். அவர்கள் அன்று வந்து வயலை நட்டுக் கொடுத்துவிட்டுப் போய்விடுவார்கள். முதல் நாள் இரவிலேயே வயலுக்குப் போதிய அளவு தண்ணீர் பாய்ச்சிவிட வேண்டும். அதில் ஒரு சங்கடமும் இருக்காது; சுலபமாகத் தண்ணீர் பாய்ச்சி விடலாம் என்றுதான் நினைத்தாள்.

ஆனல் அவள் நினைத்ததுபோல் நடக்கவில்லை. பெரிய வயலுக்குப்

பாயும் ஓடை வாய்க்கால் மடை அருகில் இரு பிரிவாகப் போகிறது. பிரிந்துபோகும் ஓடை, பள்ளத்தில் ஓடுவதால் அங்கே போகும் தண்ணீரை அறவே தடுத்தால்தான் இந்த ஓடை வழியாகத் தண்ணீர் ஓடும்.

செல்லம்மா அடைகல்லைச் சிரமத்துடன் தூக்கிக் குறுக்கே வைத்துப் பார்த்தாள். அதனுல்மட்டும் முடியாது; சுற்றிலும் கரணைகளை வைத்து இடை வெளிகளை அடைத்துக் கல்லைத்தூக்கி வைத்தால்தான் தண்ணீரைத் திருப்பமுடியும்.

வெகு நேரம் என்ன எல்லாமோ முயற்சி செய்து பார்த்தாள் செல்லம்மா. ஒன்றும் பலிக்கவில்லை. நன்முக இருட்டி விட்டது. நாளைக் காலையில் நடவு விடப்போகும் வயலிலோ இன்று இரவு எப்படியும் தண்ணீர் பாய்ச்சித் தொளி ஆக்க வேண்டும். நடவு காலமாகையால் தண்ணீர்த்தட்டு ஏற்படாமல் இருக்க வாய்க்காலில் அதிகத் தண்ணீர் விட்டிருந்தார்கள். தண்ணீர் இரு கரையும் முட்டிப்போய்க் கொண்டிருந்தது. மடை வழியாக ஏராளமான தண்ணீர் 'குபுகுபு' என்று பொங்கி வந்து கொண்டிருந்தது. வாய்க்கால் கரைக்குச் சென்று மடைப் பலகையை இறக்கிச் சிக்கென்று மூடி விட்டு வந்தாள். அப்படியும் ஓடையில் தண்ணீர் குறைந்தபாடில்லை. அளவுக்கு மீறி இன்னும் அதிக வேகமாகப் பாய்ந்து வந்த தண்ணீர் அவள் அடைக்கும் மண்ணை நொடியில் கரைத்துக்கொண்டு போய்க் கொண்டிருந்தது. என்ன செய்வது என்று அவளுக்குத் தெரியவில்லை.

இன்னொருவர் துணையிருந்தால் தான் பிரிந்து போகும் ஓடையை அடைத்துத் தண்ணீரைத் திருப்ப முடியும் என்று ஆயிற்று. செல்லம்மா மலைத்து நின்ருள். அந்தச் சமயத்தில் ஓடைப்படுகையில் யாரோ கரணைகளைச் சதக் சதக் என்று வெட்டும் சப்தம் கேட்டது. அவள் முதலில் அதைப் பொருட்படுத்தவில்லை. பின்பு வெட்டிய கரணைகளைத் தூக்கிக் கொண்டு வந்து ஓடையை அடைக்க அந்த ஆள் முயன்றபோதுதான் முத்துக்குமாரு என்று கண்டு திகைத்தாள்.

''திகைக்காதே செல்லம். நான்தான் உன் அத்தான். இவ்வளவு நேரம் நான் அந்த மரத்தடியில் நின்று பார்த்துக் கொண்டிருந்தேன். என்னுல் பொறுக்க முடியவில்லை. ஓடிவந்தேன். வா, இருவரும் மடையை அடைக்கலாம்.''

''என்னுல் அடைக்க முடியாவிட்டால், எங்கள் வயலில் நடவு ஆகவே வேண்டாம்.''

''நீ ரோசக்காரி என்பது எனக்குத் தெரியும். இப்போது பிடிவாதம் பிடிக்காதே. நான் ஒரு தப்பும் செய்யவில்லை. செய்யாத தப்புக்கு மன்னிப்புத் தேவையில்லை. இருந்தாலும் நீ எனக்கு மன்னிப்புக் கொடு.''.

''மாப்பும் வேண்டாம், மன்னிப்பும் வேண்டாம். என்னைத் தனியாக விட்டுவிட்டுப் போனுலே போதும்.''

''அது மட்டும் முடியாது, செல்லம். நீ சோர்ந்துபோய் வீட்டுக்குப் போவாய். நான் யாரையாவது துணைக்கு அழைத்துவந்து அடைக்கலாம் என்று இருந்தேன். நீயோ போகவில்லை; எனக்கும் வேறு வழி இல்லை.''

''எனக்காக இவ்வளவு அக்கறை ஏன் தான் காட்டவேணுமோ?''

''நான் தப்புச் செய்யவில்லை என்பதைத் தெரிவிப்பதற்கும் உன் கோபம் ஆறவேண்டும் என்பதற்கும் தான் இதை வலியவந்து செய்கிறேன்.''

''நாட்டாண்மைக்காரரா இப்படிப் பேசுவது? இவ்வளவு நாளும் நான் ஒண்டியாக நின்று கொண்டிருந்தேன். இன்னும் அப்படியே தனித் திருப்பேன்.''

''நீ அப்படி நினைத்துக்கொண்டிருந்தால் போதுமா? நீ என்ன நினைத்தாலும் சரி, நீ என்னுடைய வள்தான். இன்னொருவன் உன் கையைப்பிடிக்கச் சம்மதிக்கமாட்டேன்; தெரிந்துகொள்'' என்ருன் முத்துக்குமாரு.

செல்லம்மா அதற்கு அப்புறம் ஒன்றும் பேசவில்லை. இருவரும் சேர்ந்து ஓடையை அடைத்து முடித்தார்கள்.

வயல் நடுகை முடிந்தது. ஊராருக்கும் ஒய்வு ஏற்பட்டது. நாட்டாண்மைக்காரன் தூண்டுதலினால் ஊரில் சிலர் செந்தூராணி அணுகி, ''இன்னும் ஊரைப் பகைத்துக்கொண்டிருக்க உத்தேசமா?'' என்ற முறையில் பேசினார்கள்.

''இல்லே'' என்றான் செந்தூரான்.

''கோயிலுக்கு ஒருபடி எண்ணெய் வாங்கி ஊற்றி விட்டு ஊருடன் சேர்ந்துகொள்'' என்று ஊர் தீர்ப்புக் கூறிற்று.

எல்லாம் காதும்காதும் வைத்தாற் போல் நடந்தன. செல்லம்மா வீரூப்புப் பேசவில்லே. இவை யாவும் நாட்டாண்மைக்காரன் ஏற்பாடுதான் என்பதை உள்ளூற உணர்ந்து மகிழ்ந்தாள்.

திடீரென்று ராமு அத்தை செந்தூராணி அணுகி, ''உன் மகள் செல்லத்தை எங்கள் முத்துக்குமாருக்குக் கொடு'' என்று பெண் பேசினாள்.

''சரி'' என்றான் பாயும் படுக்கையுமாய்க் கிடந்த செந்தூரான். அந்த மகிழ்ச்சியிலேயே நோயிலிருந்து தேறி எழுந்து நடக்கவும் தொடங்கி விட்டான்.

செல்லம்மாவுக்கும் நாட்டாண்மை முத்துக்குமாருக்கும் கல்யாணம். முகூர்த்தம் விரைவிலேயே குறிக்கப்பட்டுக் கல்யாணம் நிறைவேறியது.

கல்யாணம் முடிந்த உடனடியில் அவனுடைய நாட்டாண்மைக் காலமும் முடிந்து வேறொருவன்மீது நாட்டாண்மை ஏறியது.

புதிய நாட்டாண்மைக்காரன் திடீரென்று பழைய நாட்டாண்மை முத்துக்குமாருமீது ஒரு வழக்குக் கொண்டு வந்தான். அதைக் கண்டு ஊரே பிரமித்துப் போயிற்று!

செந்தூரான் வீட்டை ஊர் மறித்து வைத்திருந்தபோது ஊருக்குத் தெரியாமல் அவன் வயலே உழுது கொடுத்தவன், அப்போது நாட்டாண்மையாயிருந்த முத்துக்குமாருதான்! ஊர் நாட்டாண்மையாக இருந்து கொண்டு அவ்வாறு செய்தது பெரிய குற்றம்; ஊரை ஏமாற்றியதுமாகும் என்பதுதான் அந்த வழக்கு.

வேறு ஏதாவது குற்றம் அவன்மீது சுமத்தியிருந்தால் முத்துக்குமாரு இலேசில் விட்டிருக்கமாட்டான். ஆனால் இந்தக் குற்றச்சாட்டுக்குச் சரியான மறுமொழி கொடுக்க முடியாமல் திண்டாடினான். கடைசியில் ஊர் விதித்த தண்டனையை ஏற்றுக் கொண்டான். கோயிலுக்கு ஐந்துபடி எண்ணெய் வாங்கி ஊற்றவேண்டும் என்பதுதான் அதற்குத் தீர்ப்பு. இரண்டாம் பேருக்குத் தெரியாமல் தண்டனையை நிறைவேற்றினான் முத்துக்குமாரு.

''இதுவும் வேணும்! இன்னமும் வேணும்'' என்று இடித்துக் காட்டினாள் செல்லம்மா, அன்று இரவு முத்துக்குமாருவிடம்.

''என்ன செய்வது? ஏர் பிடித்து உழுதவள் செல்லம்மாதான் என்று என்னால் ஊர்க்கூட்டத்தில் எப்படிச் சொல்லமுடியும்?''

''செய்யாத குற்றத்துக்கு அபராதம் கொடுத்தது வெட்கமாக இல்லேயா?'' என்று செல்லமாகப் பரிகசித்தாள் செல்லம்மா.

இல்லே, மகிழ்ச்சியேதான்! ஆனால் இன்னொரு மன்னிக்கமுடியாத குற்றம் செய்திருக்கிறேன். அதற்குத் தண்டனை என்று நினைத்துக்கொள்வேன்'' என்றான் சாவதானமாய்.

''என்ன அது?'' என்று கேட்டாள் செல்லம்மா திடுக்கிட்டு.

''நீ ஓடையை அடைக்க மடைப் பலகையைக் கீழே இறக்கி இறுக்க மூடினாயே. அப்போது மறைந்திருந்த நான், மடைப் பலகையைத் தூக்கி மடமடவென்று தண்ணீரை ஓடையில் விட்ட குத்தத்தைச் சொல்லுகிறேன்'' என்றான் முத்துக்குமாரு.

அதைக்கேட்ட செல்லம்மாவின் கண்களில் மடை திறந்ததைப்போல ஆனந்தக் கண்ணீர் வழிந்தது!

———

ஒன்றுபட்டால் உண்டு
வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கின்
அனேவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல்
வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?

— பாரதியார்

வாழ்க்கை இருவகைப்படும். ஒன்று பிரிந்த வாழ்க்கை; மற்றொன்று இணேந்த வாழ்க்கை. இவ்விரண்டிலும் சிறந்த வாழ்க்கை இணேந்த வாழ்க்கையே. நம் நாடு மிகப் பரந்த நாடு. மக்கள் எண்ணிக்கை அடிப்படையில்உலகில் இரண்டாவது பெரியநாடு. இந்து, இசுலாம், கிறித்துவம், பௌத்தம், சமணம், சீக்கியம் ஆகிய சமயங்கள் இந்நாட்டில் இருக்கின்றன. இங்கு 15 பெரிய மொழிகளும் 47 கிளே மொழிகளும் வழங்குகின்றன. எத்தனேயோ அரசியல் கட்சிகள் இங்கு உண்டு. இவ்வளவு வேறுபாடுகளுக்கிடையில் நாம் ஒற்றுமையாக வாழ்கின்றேம். அந்த ஒற்றுமை மேலும் ஆழமாக வேர் ஊன்ற வேண்டும்! வலிமை பெறவேண்டும்! அவ்வொற்றுமையில் அசைக்க முடியாத நம்பிக்கையும் உறுதியும் வேண்டும்! ஒற்றுமை ஒரு துறையில் மட்டும் இருந்தால் போதாது. எல்லாத் துறைகளிலும் இருக்கவேண்டும்.

பேராசிரியர் வ.பெருமாள்
கோலார் தங்கவயல்

''சிந்து நதியின்
மிசை நிலவினிலே
சேரநன் ஞட்டிளம்
பெண்க ளுடனே
சுந்தரத் தெலுங்கினில்
பாட்டிசைத்துத்
தோணிகள் ஓட்டிவிளே
யாடிவருவோம்''

— பாரதியார்

என்ற பாட்டில் இந்தியாவின் இணேந்த வாழ்க்கையைக் குறிக்கின்றார் பாரதியார். இலக்கியம் படிக்கின்ற நாம் பாரதியார் கண்ட ஒற்றுமை வாழ்வைச் செயலில் காட்டி உறுதிப்படுத்த வேண்டும்.

கருத்து : பொதுவான கதையைப் பாடுகின்றபோது இலக்கியம் பொதுவான கருத்தையும் பாடுகின்றது. பொதியமலேயின் பொலிவைப்பொன்மொழியால் பாடியபுலவர்கள் இமயமலேயின் ஏற்றத்தையும் இன் மொழியால் இணேத்தே பாடினர்கள். காவிரியைப் பாடிய கம்பர் கங்கையும் சேர்த்தே பாடினர்.

''பூவிரி பொலன்கமழ்
பொருவில் தானேயான்
காவிரி நாடன்ன
கழனிநா டொரீஇ
தாவர சங்கம
மென்னும் தன்மைய
யாவையும் இரங்கிட
கங்கை எய்தினன்.''

— இராமாயணம்.

கங்கையின் கோதுமையைப் பாடிய பாரதியார் காவிரியின் வெற்றிலையையும் சேர்த்தே பாடினார்.

'கங்கை நதிப்புறத்துக்
கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு
மாறு கொள்ளுவோம்'

காசியைப் பாடிய கவிஞர் பக்கத்திலேயே காஞ்சியையும் பாடுகின்றார்; வடக்கேயுள்ள இராசபுதன வீரத்திற்குத் தெற்கேயுள்ள கன்னட மாநிலக் கோலார்த் தங்கத்தைப் பரிசாக அளிப்போம் என்று வடக்கையும் தெற்கையும் இணைக்கின்றார் பாரதியார்.

''காசி நகர்ப்புலவர்
பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர்
கருவி செய்வோம்;
ராசபுத் தானத்து
வீரர் தமக்கு
நல்லியற் கன்னடத்துத்
தங்கம் அளிப்போம்.''

வடஎல்லையாகிய இமயமலையின் எழிலையும் தென்னெல்லையாகிய குமரியின் மாண்பையும் ஒன்றுக இணைத்து நம் புலவர்கள் அன்று முதல் இன்று வரை பாடியிருக்கின்றார்கள்.

''வடக்கில் இமயமலை பாப்பா!
—தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா!
கிடக்கும் பெரியகடல் கண்டாய்
—இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா!
— பாரதியார்.

கல்வி : ஆங்கிலேயர் இந்நாட்டில் ஏற்படுத்திய கல்வித் திட்டம் இந்தியாவை ஒரே நாடாக ஆக்கி ஒற்றுமைக்கு வழிகோலியது. இங்குள்ள கல்வித் திட்டத்தில் ஒருமைப் பாட்டைக் காண்கிறோம். அதாவது இங்குள்ள தொடக்கப் பள்ளியிலிருந்து பல்கலைக்கழக உயர் வகுப்பு முடிய உள்ள பாடத்திட்டங்கள் அனைத்தும் ஒருமைப்பாட்டின் அடிப்படையிலே அமைந்துள்ளன. பாடத் திட்டங்களில் ஒருமைப்பாடு இருப்பதால் தென்னாட்டு மாணவர்கள் வடநாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் பயில வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் அம்மாநில மொழியைத் தவிர ஏனைய இந்திய மொழிகளும் பயிற்றுவிக்கப் படுகின்றன. தமிழகத்திலுள்ள சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழைத்தவிர தெலுங்கு, கன்னடம், மலையாளம், வட மொழி, இந்தி ஆகிய மொழிகள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. அதைப் போலவே கேரளம், மைசூர், உசுமனியா (ஐதராபாத்), காசி, டெல்லி, திருப்பதி (வெங்கடேசுவரா), அலகாபாத் முதலிய பல்கலைக் கழகங்களில் தமிழ் கற்பிக்கப் படுகின்றது. வடஇந்தியப் பேராசிரியர்கள் தென்னாட்டிலும், தென்னிந்தியப் பேராசிரியர்கள் வடநாட்டிலும் பணிபுரிவதை நாம் பார்க்கிறோம். மொழிகளுக்கிடையே உள்ள ஒருமைப் பாட்டையும் ஒற்றுமைகளையும் சில ஆய்வுக் கழகங்கள் ஆராய்ச்சி செய்து வருகின்றன. அறிவுப் போட்டிகள், இளைஞர் விழா, விளையாட்டு விழா, தேசியப் படை வீரர் பயிற்சி முகாம் ஆகிய வற்றின் வாயிலாக மாணவர் பலரும் இந்நாட்டின் பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்து ஒன்று கூடுகின்றார்கள்; அளவளாவுகின்றார்கள்; மனங்கலந்து குலாவுகின்றார்கள். தமிழ் மாணவர்கள், கன்னட மாணவர்கள், மராத்தி மாணவர்கள், வங்காளி மாணவர்கள், இந்தி மாணவர்கள் ஆகியோரிடம் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் ஒருங்கே விரைந்து ஏற்பட்டு விடுகின்றன.

அரசியல் : நம் ஆட்சி குடியாட்சி; நம்மை நாமே ஆளுகின்ற மக்களாட்சி. மக்களாட்சியில் பல்வேறு அரசியல் கட்சிகள் இருப்பது இயல்பு. பேச்சுரிமை, எழுத்துரிமை, வாக்குரிமை, ஆகிய உரிமைகள் பெற்றுள்ள நாட்டில் பல்வேறு அரசியல் கட்சிகள் ஆக்க நோக்குடன் இயங்குவது நல்லதே. அரசியல் கட்சிகளுக்குள் எவ்வளவு வேறுபாடுகள் இருந்தாலும் பொது நலத்திற்காகப் பல கட்சித் தலைவர்களும் வேற்றுமையை மறந்து ஒன்று கூடுவதை நாம் அடிக்கடி பார்த்திருக்கின்றோம் சர்வ கட்சி மாநாடுகள் நிகழ்வது சாதாரணமாகி விட்டது. தமிழ் விழா, இலக்கிய விழா, கலை விழா,

வள்ளுவர் விழா, கம்பர் விழா, பாரதி விழா, பொங்கல் விழா, கருத்தரங்கு, கவியரங்கு, பட்டி மன்றம் முதலிய பொது விழாக்களில் பல கட்சித் தலைவர்களும் ஒரே மேடையில் தோன்றி, சொற்பொழி வாற்றும் மகிழ்ச்சியான காட்சியை நாம் கண்டு களித்திருக்கின்றோம். இது தான் வேற்றுமையில் ஒற்றுமை! இந்திய அரசியல் கட்சிகளுக்குள் பிளவுகளுண்டு; அப்பிளவுகளை இணைக்கும் பாலங்களும் உண்டு.

கலை : மக்கள் மனத்தை மகிழ்வித்து உயர்த்துவது தான் கலை. கலைக்கு மொழி வேறுபாடு சிறிதும் இல்லை. ஓவியம், சிற்பம், அழகு, நடனம் ஆகியவை நுண்கலைகள் எனப்படும். கலை உலகத்தில் இந்தியர் அனைவரும் ஒன்று கூடுகின்றார்கள். இந்தியர் மட்டுமல்லர், உலக மக்கள் அனைவருமே ஒன்று சேருகின்றார்கள். ஆக்ராவிலுள்ள அழகான தாஜ் மகாலைக் காணும் தமிழர்கள் அதன் கலையழகில் ஈடுபட்டு வியப்படைகின்றார்கள்; பெரு மகிழ்ச்சி அடைகின்றார்கள். தஞ்சாவூர்ப் பெருங்கோயிலையும், மதுரை மீனாட்சியம்மன் கோயிலையும் வடஇந்தியர் பார்க்கும்போது அவற்றின் கலை அழகையும் சிற்ப நுணுக்கத்தையும் அறிந்து பேரின்பம் அடைகின்றார்கள். தென்னாட்டில் தோன்றிய கர்நாடக இசையை வட இந்தியர்களும் வடக்கே தோன்றிய இந்துஸ்தானி இசையைத் தென்னிந்தியர்களும் விருப்பத்தோடும் ஆர்வத்தோடும் கேட்பதை நாம் பார்த்திருக்கிறோம். மணிப்புரி, கதக்களி, பரத நாட்டியம் முதலிய நடனங்களைப் பார்க்கும்போது அனைத்து வேறு பாட்டையும் அடியோடு மறந்து கவைக்கின்றோம். இரவிவர்மாவின் ஓவிய அழகில் எல்லோரும் ஒருங்கே ஈடுபடுகின்றோம். இவையாவும் நாட்டிற்குரிய பொதுக் கலையாகும். கலையுலகில் இந்தியாவில் முழு ஒற்றுமை உண்டு.

சமயம் : நம்நாட்டின் மிகப்பழமையான சமயம் இந்து சமயம். வடக்கேயுள்ளவர்கள் தெற்கிலுள்ள இராமேசுவரத்திற்கும், தெற்கிலுள்ளவர்கள் வடக்கேயுள்ள காசிக்கும் சென்று இறைவனை வழிபடுவதை நாம் பார்க்கவில்லையா? யாத்திரையைப் பற்றியும் புண்ணியத்தைப் பற்றியும் பேசும்போது காசி-இராமேசுவரம் என்று சேர்த்தே கூறுகிறோம். காசி இருப்பது வடக்கே; இராமேசுவரம் இருப்பது தெற்கே. சமயத் துறையில் நமக்குள்ள ஒற்றுமையால் நாம் இவ்விரு புண்ணியத் தலங்களையும் இணைத்தே கூறுகின்றோம். சைவர்கள் பெருமாள் கோயிலுக்கும், வைணவர்கள் சிவன் கோயிலுக்கும் செல்வதை நாம் பார்த்திருக்கின்றோம். சைவர்கள் வைணவ இலக்கியமாகிய நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தையும் வைணவர்கள் சைவ இலக்கியமாகிய தேவாரம், திருவாசகம், பெரிய புராணம் முதலியவற்றையும் விருப்பத்தோடு படிப்பதை நாம் காண்கிறோம். தேம்பாவணி, இரட்சணியயாத்திரிகம் முதலிய நூல்கள் நம் எல்லோருக்கும் இன்பமளிக்கின்றன. இயேசு பெருமானைச் சிலுவையில் வைத்து ஆணியால் அறையும்போது அவர் தமக்காக வருந்தவில்லை! அதற்கு மாறாக, அறியாமையால் தம்மைத் துன்புறுத்துவோரை மன்னிக்க வேண்டும் என்று இறைவனைத் தம் அருள் உள்ளத்தால் வேண்டுகின்றார்! அவருடைய பரந்த உள்ளத்தில் மலர்ந்த அருள் மொழி நம் எல்லோருடைய உள்ளத்தையும் உருக்கிவிடுகின்றது. இதோ அவ்வருள்வாக்கு:

''தன்னரிய திருமேனி சதைப்புண்டு
தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போதும்
பரிந்தெந்தாய்
இன்னதென அறிகில்லார் தாம்
செய்வ திவர்பிழையை
மன்னியும்என்று எழிற்கனிவாய்
மலர்ந்தார் நம்அருள்வள்ளல்''

— இரட்சணிய யாத்திரிகம்:
கிருஷ்ணப் பிள்ளை

இஸ்லாமிய சமய இலக்கியமாகிய சீறுப் புராணம் நபிநாயகத்தின் வரலாற்றைப் பாடும் சிறந்த நூல். பொது நோக்கத்தைக் கொண்ட இந் நூல் நம் அனைவருக்கும் ஏற்றதாக அமைந்துள்ளது.

''திருவினும் திருவாய்ப்
பொருளினும் பொருளாய்த்
தெளிவினும் தெளிவாய்ச் சிறந்த
மருவினும் மருவாய் அணு
வினுக்கும் அணுவாய்
மதித்திடாப் பேரொளி அனைத்தும்

பொருவினும் பொருவா வடிவாய்ப்
பூதலத்து உறைத்தபல் லுயிரின்
கருவிலும் கருவாய்ப் பெருந்தலம்
புரந்த
கருத்தனைப் பொருந்துதல்
கருத்தே.''

— சிருப்புராணம் : உமறுப் புலவர்.

தமிழிலுள்ள மிகச்சிறந்த நூலாகிய நாலடியாரை இயற்றியவர் யார்? சமண முனிவர்கள். நாலடியார் சமணர்களுக்கு மட்டும் தான் சொந்தமா? அன்று! நம் அனைவருக்கும் உரியது. நாலடியின் சிறப்பு நோக்கி நாம் எல்லோரும் பயில்கின்றோம். 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்ற பழமொழி நாலடியாரின் சிறப்பைப் புலப்படுத்துகின்றது. புத்தமதக் கொள்கையை அடிப் படையாகக் கொண்டு சித்தலைச் சாத்தனாரால் எழுதப்பட்ட காப்பியமே மணிமேகலை. புத்தபெருமானின் வாழ்க்கை வரலாற்றை 'ஆசிய ஜோதி' என்ற பெயரில் எளிய தமிழில் பாடியவர் கவிமணி தேசிக வினாயகம் பிள்ளை. தி. இலக்குமணப் பிள்ளை 'புத்தபெருமான் சிந்து' என்ற தலைப்பில் புத்தருடைய பிறப்பு, வளர்ப்பு, போதனை, சாதனை ஆகிய எல்லாவற்றையும் இனிய தமிழில் எல்லாச் சமயத்தாரும் ஏற்றுக் கொள்ளுமாறு பாடி இருக்கின்றார்.

''அன்பு நிலைகொள்ள
வேண்டும் என்றார்; அதி
யாசை ஒழித்திட
வேண்டும் என்றார்;
துன்புக்குக் காரணம்
ஆசை மிகுந்திடல்;
தூய்மை மனத்தினில்
வேண்டும் என்றார்.
கங்கைத் தடத்தின்
இருகரைப் பக்கமும்
கௌதம புத்தர்
நடந்து சென்று,
அங்கையில் மண்கல
மேந்தி, அறச்செயல்
அருள்உப தேசம்
புகன்றனரே.
புத்த சமயம்
பிறந்தது; ஞானத்தின்
போதமும் உலகத்
துதித்ததுவே;
சித்தர்கள், முத்தர்கள்
செய்ய வொணா அருட்
சித்தல்ல வோ
அவர் செய்ததுவே?''

இவ்வாறுகக் கருத்து, கல்வி, கலை, அரசியல், சமயம் ஆகிய துறைகளிலும் மற்றெல்லா முறைகளிலும் காணப்படும் ஒற்றுமை மேலும் வலுப்பட்டு இந்திய மக்கள் அனைவரையும் இணைப்பதாகுக!

அண்ணல் காந்திஜியின் அமுதமொழி

அவ்வப்போது அவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய அளவுக்குமேல் எதையும் கடவுள் உண்டாக்குவதில்லை. எனவே, தன் தேவைக்குமேல் எடுத்துக் கொள்ளுகிறவனும் அதன்மூலமாகத் தம்முடைய அண்டை அயலாரை வறுமைக்குள்ளாக்குகிறார். நம்மில் பலர் தத்தம் தேவைக்கும் அதிகமாகவே பொருள்களைக் கைப்பற்றிக் கொள்வதினால்தான் உலகத்தில் பல்வேறு பகுதிகளில் மக்கள் பட்டினி கிடப்பதற்கு ஏதுவாகிறது.

உறுப்பினர்கள்

1.	முத்தையன்	—	ஊராட்சித் தண்டலர்
2.	பாலசுந்தரம்	—	தெளிவற்ற முரடன்
3.	சித்தலிங்கம்	—	தன்னலம் மிகுந்த செல்வர்
4.	பொன்னன்	—	சித்தலிங்கத்தின் பணியாள்
5.	மணிமாலை	—	முத்தையனின் நல்ல மனைவி
6.	கோமதி	—	பாலசுந்தரத்தின் பொல்லாத மனைவி
7.	பொற்கொடி	—	சிறுமி

மற்றும் சிலர்

காட்சி 5

இடம்: முத்தையன் வீடு — காலம்: மாலை

(மணிமாலை, மகள் பொற்கொடிக்கு ஆடல் பாடல் கற்பிக்கிறாள். பாடிக் கொண்டு அவள் ஆட, சிறுமியும் ஆடுகிறாள்.)

எடுப்பு

சேமித்துப் பழகு—பாப்பா
சேமித்துப் பழகு—தினம் (சே)

தொடுப்பு

நாமிருக்கும் குடும்பத்தோட நன்மையே—உனக்கு
நல்லதெல்லாம் தருமென்ப துண்மையே
சேமிக்கும் பழக்கமுள்ள பிள்ளையால்—குடும்ப
சேமம்வரும் இன்பம்வரும் சொல்லடி—பாப்பா (சே)

தினந்தினம் கொஞ்சம் கொஞ்சம் படிப்பதே—அறிவைத்
திரட்டி வைத்துப் பட்டதாரி யாக்குதே.
பணம்காசு சேர்க்க நல்ல திட்டமே—இதைப்
பரிவுடனே செய்யாவிடில் நட்டமே—பாப்பா (சே)

சிறுகக்கட்டிப் பெருகவாழ வேணுமே—அதஞல்
சிந்தனேயும் செயல்முறையும் தோணுமே
வறுமையிலும் செம்மையாக வாழணும்—குடும்பம்
வளமடையத் தகுந்தவழி காணணும்—பாப்பா (சே)

[முத்தையன் வந்து நின்று சுவைக்கிறுன்]

முத்தை: (கைதட்டி) பலே! பலே! ஒன்சு மோர்! ஒன்சு மோர்!

மணி: 'ஒன்சு மோர்' அங்கேகிக்கப் படமாட்டாது. உடம்பு பலவீனம். நிகழ்ச்சி நாளேக்கும் நடைபெறும்.

முத்தை: ரொம்ப சரி. மணிமாலே! இந்தப் பாடலுக்கும் ஆடலுக்கும் நிச்சயமா பரிசு வாங்கிடுவா பொற்கொடி.

பொற்: அப்பா!...எனக்கொரு சந்தேகம்.

முத்தை: என்னடா கண்ணு சந்தேகம்?

பொற்: பசுமோரும், எருமை மோரும் பார்த்திருக்கேன். இந்த ஒன்சு மோரு எப்படியப்பா இருக்கும்? இது எங்கே கிடைக்கும்?

முத்தை: இதுடா கண்ணு, நாடகக் கொட்டகையிலே கிடைக்கும். மேடையிலே நல்லாப் பாடின வரைப் பார்த்து இரசிகர்கள் இன்னொரு தடவை பாடுங்கோன்னு இப்படிச் சத்தம் போடுவாங்க. இது மோருமில்லே, தயிருமில்லே!

மணி: ஏனத்தான்! 'ஒன்சு மோரு'ங்கிற ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொல்லே தமிழ்நாட்டிலே கெடைக்கலியா?

முத்தை: நாட்டுக்குத் தமிழ்நாடுங்கிற பேரே இப்பத்தானே நமக்குக் கெடைச்சிருக்குது! இனிமே நமக்கு எல்லாம் கெடைக்கும் மணிமாலே. கோட்டையிலிருந்து கோலோச்சும் தமிழக அரசு, கொஞ்சம் கொஞ்சமா, சிறுசேமிப்பு மாதிரி தமிழ்ச் சொற்களேயும் சேமிச்சுக் கிட்டு வருது. இப்ப, போலீஸ் இலாக்கா - காவல் துறையாச்சு, போலீஸ் ஸ்டேஷன்-காவல் நிலேயமாச்சு, எலக்ட்ரிசிடி போர்டு-மின்சார வாரியமாச்சு, பஸ்-பேருந்தாச்சு, ஸ்டாண்டு-நிலேயமாச்சு, டிரான்ஸ்போர்ட் - போக்குவரத்தாச்சு, அங்கே திருக்குறளுக்கு இடமாச்சு, தமிழ் வளத்தோர்க்குச் சென்னேயிலே சிலேகள் வச்சாச்சு; மெட்ராசை, தமிழ் நாடுன்னு பேரு மாத்தியாச்சு, அரசாங்க அலுவல்கள் தமிழிலே நடக்கலாச்சு, கல்லூரிப் படிப்புக்குத் தமிழைப் பாடமொழியாகப் பண்ணியாச்சு, ஊர் நலத்துக்குச் சீரணி தொடங்கியாச்சு, கிராம சேவக் - ஊர்நல ஊழியராஞர், கிராம நலம் சீரணியா மாறிப் போச்சு, பஞ்சாயத்து - ஊராட்சியாகவும், பஞ்சாயத்து யூனியன்-ஊராட்சி ஒன்றியமாகவும் பெயர் மாறிப்போச்சு, இதுபோல எத்தனே எத்தனே புதுமைகள் தெரியுமா? நம்மோட தமிழக அரசு, தமிழ் அன்னேக்கும், தமிழ் நாட்டுக்கும் புதுப்புதுப் பெருமைகளேச் சேர்க்குது மணிமாலே!

மணி: அவர்கள் முயற்சி வெல்லட்டும் அத்தான்.

முத்தை: அவர்களுக்கு நாமும் நம்மால் இயன்ற ஒத்துழைப்புத் தரணுமே!

[பாலசுந்தரம் வந்து ஒதுக்குப் புறத்தில் நிற்கிறுன்]

மணி: ஒத்துழைப்புத் தரணும் அத்தான்! தமிழ்நாடு அரசினர் சிறுசேமிப்பு-குடும்பநலத் திட்டங்கள் மிக அருமையானவை; அவசியமானவை. அவற்றுல் குடிமக்களுக்கு ஏற்படும் நன்மைகளே விளக்கவே நம்ம குழந்தை பொற்

கொடிக்கு ஆடவும் பாடவும் கற்பிக்கிறேன். எந்தத் திட்டமும் மக்களுக்குப் புரிஞ்சாத்தானே ஓத்துக்குவாங்க? அதன்படி நடப் பாங்க?

பால: எந்தத் திட்டத்தைப்போட்டு என்ன ஆகப்போவுது? ஏட்டுச் சுரைக்காய் கரிக்கு ஒதவாதே!

முத்தை: என்னண்ணு சொல்றீங்க!

பால: சிறுசேமிப்புத் திட்டம், குடும்பநலத் திட்டம், அது இதுன்னு ஏதாச்சும் ஒண்ணை ஏட்டிலே தீட்டிக்குவாங்க. அதை வச்சு பத்து அம்பது பேரு பொழச் சுக்குவாங்க. அரசாங்கத்தோட திட்டங்கள் எதுவானலும் ஏட்டோட சரி; நாட்டிலே நடக் காதுங்கிறேன்!

முத்தை: அரசாங்கம்ணு அது யாரண்ணு? அவுங்க யாருக்காக எதுக்காக இருக்குறாங்க?

[மணிமாலே பொற்கொடியை அழைத்துக்கொண்டு உள்ளே போகிறாள்]

பால: நாலெழுத்துப் படிச்சவன் நாற்காலியிலே குந்திகிட்டு நாந் தான் அமைச்சன், நாந்தான் அதிகாரீங்கறான், நான் போட்ட தெல்லாம் சட்டம், தீட்டினதெல் லாம் திட்டம்கிறான். எவண்டா ஏத்துக்குவான்?

முத்தை: நாலெழுத்துப் படிச்சவந் தான் நாற்காலியிலே குந்துவான்; திட்டங்களைத் தீட்டுவான்; சட்டங் களைப் போடுவான். நாமெல்லாம் ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக் கறவங்க அமைச்சராக வர்றுங்க. அதிகாரிகளின் ஆதரவோடு அர சாங்கத்தை நடத்தறுங்க. குடி மக்களின் நல்வாழ்வுக்கு ஏற்ற தான சட்டங்களையும், திட்டங் களையும் கொண்டு வர்றுங்க.

பால: சரிடா! அதெல்லாம் யாருக் குப் பயன்படுது?

முத்தை: நமக்குத்தாணண்ணு பயன் படுது. நாம தேர்ந்தெடுத்த நம் மோட அரசாங்கம், நம்முடைய நன்மைக்காகத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துது, அதெல் லாம் எதுக்காகவோ, யாருக்காக வோன்னு நெனைக்கறது தெரியாத தனம்! திட்டங்களை எவண்டா ஒத்துக்குவான்னு கேக்கறது இருக் குதே.....

பால: மூட்டாள்தனம்கிறே! பில் கலெக்டர் வேலே பார்த்து,சர்க்கார் சம்பளம் வாங்கிறியல்ல. அதுக் காகப் பேசவேணுமா?

முத்தை: வேலே மேலே இருக் கறப்போ அரசாங்க ஊழியன். வீட்டிலே இருக்கறப்போ ஒரு குடி மகன். அந்த முறையிலே சொல் றேன்; நமக்காக நாம்ப ஒரு வீட்டைக் கட்டிக்கிறோம்; கெணத்தை வெட்டிக்கிறோம்; அது நமக்குத்தானே பயன்படும்?

[கோமதி வந்து நிற்கிறாள்]

பால: என்ன எழவோ, எனக்குப் புரியாத அரசியல் தத்துவங்கள். போகட்டும், நம்ப வீடு நமக்குப் பயன்படுனும்னு சொன்னியல்ல; அப்படிப் பயன்படறதுக்கு இப்ப ஒரு சந்தர்ப்பம் வந்திருக்குது.

முத்தை: என்ன சந்தர்ப்பம் அண்ணு?

பால: கடை வியாபாரத்துக்காகச் சித்தலிங்கத்திடம் ஆயிரம்ரூபா கடன் வாங்கணும். அதுக்காக நம்ப வீட்டைக் குகவை வைக்க ணும். பத்திரத்திலே நீ ஒரு கையெழுத்துப் போடணும். அவ் வளவுதான்.

முத்தை: அண்ணு! நீங்க கடன் வாங்கறதே எனக்குப் பிடிக்கலே. அதுக்காக நம்மோட சொத்தைக் குதவை வைக்கறது கொஞ்சமும் பிடிக்கலே! அதிலும் அந்த வஞ்ச கப் பேயிடம் வச்சுக் கடன் வாங்க றது அடியோட பிடிக்கலே! தயவு செய்து இதுக்காக எங்கிட்டே கையெழுத்துக் கேட்க வேணும்!

பால: (சினந்து) அடேய்! வீட்டுக்கு மூத்தவன் நான். என்னோட வார்த் தையை நீ கேக்கலேன்னு, நம் மோட பாகப்பிரிவினையை நடத் திட வேண்டியதுதான்.

முத்தை: பாகப் பிரிவினை செய்ய வேணும்னு நான் சொல்லலே. ஆனு, அப்பா சாகும்போது சொன்ன வார்த்தைகளையும், அவர் கொடுத்த வெள்ளிப் பேழை யையும் நெனவிலே வச்சுத்தான் நாம்ப எதையும் செய்யணும்.

பால: என்னடா அப்பா பிரமாதமா சொல்லிப் போட்டாரு? அதைக் காட்டித் தடுக்க வந்திட்டே?

முத்தை: என்னண்ணு அதை மறந்தே போயிட்டீங்களா? அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வங்களாச்சே. தெய்வ வாக்கை மறக்கலாமா?

பால: வெள்ளிப் பேழை எங்கிட்டே இருக்குது. அப்பா என்ன சொன்னாரு?

முத்தை: வெள்ளிப் பேழையை நம்ம கையிலே கொடுத்து, இதிலே நம்மோட குடும்ப ரகசியம் அடங்கியிருக்குது. இதைப் பத்து வருஷங் கழிச்சு ரெண்டு பேருமா சேர்ந்து திறக்கணும். அப்புறந்தான் பாகம் பிரிச்சுக்கணும். அது வரைக்கும் பேழை மூத்தவனிடம்

பத்திரமா இருக்கணும்னு சொன்னாரு. அதை நாமும் ஏத்துக்கிட்டுச் சத்தியம் பண்ணிக் கொடுத்தோமே!

பால: ஓ?..ஆமாம்..அப்பா சொன்ன வார்த்தையைத் தட்டக்கூடாது. சத்தியத்தைக் காப்பாத்தணும்,

ஆஞ, வியாபாரத்துக்குப் பணம் வேணுமேடா! இது நடந்தாகணுமே!

முத்தை: பத்து வருஷம் முடிய இன்னும் எட்டு மாதந்தான் இருக்குது. பொறுங்க அப்புறம் பாகம் பிரிச்சுக்கலாம். அவரவர் விருப்பம் போலச் செஞ்சுக்கலாம். அது வரைக்கும் நம்ப குடும்பச் சொத்தைப் பாரதீனப்படுத்த நான் ஒப்புக்கமாட்டேன். கடன் வாங்கவும் சம்மதிக்கமாட்டேன்.

கோம: பாத்துக்கிட்டீங்களா தம்பியோட வரிசையை? கடனே வாங்கி வியாபாரம் பண்ணி, பணங்காசு சேத்துட்டா நம்ப ஒசந்திடுவோம்; ஒய்யாரமாப் பொழைச்சிடுவோம். பொறுக்குமா பங்காளி மனசு? அந்தப் பொருமைதான் முட்டுக்கட்டை போடுது!

முத்தை: அண்ணி! நீங்க தப்பா நினைக்கறீங்க, ''வாழு வாழ விடு''ங்கறதே என்னோட கொள்கை. நாட்டிலே அப்படி நடக்கிற நான், வீட்டிலே அண்ணன் குடும்பத்தையா வாழவிடாமல் தடுப்பேன்? வேண்டாம் அண்ணி! இது அநியாயம்! அபாண்டப் பழி!

கோம: பாத்திங்களா? பாத்திங்களா? நான் அநியாயக்காரியாம்! அபாண்டப் பழி சுமத்தறவளாம்! வரவுக்கு மேலே செலவு பண்ணி, ஆடம்பரத்திலே அழிஞ்சு போற வள்ளு பரிகாசம் பண்ற பத்தினியோட புருஷன் சொல்ருரு. இப்ப வாவது புரிஞ்சுதா இளவலோட எண்ணம்? நான் அப்பவே சொன்னேனே கேட்டிங்களா?

பால: சந்தர்ப்பம் வரும்போது தானே ஒருத்தனோட குணந் தெரியுது.

கோம: அது தெரிஞ்சாப் போதும்; நாம பொழைச்சுக்கலாம். தாட் சண்யமில்லாத தம்பிகிட்டே நீங்க ஒண்ணும் கெஞ்சிக்கிட்டு நிக்க வேணும். இந்த மடம் இல்லேன்ஞ சந்தை மடம்! இந்தச் சீமான் கையெழுத்துப் போடலேன்ஞ நாம வாழமுடியாதா? நீங்க வாங்க. ஆயிரத்துக்கு ரெண்டாயிரமா பாண்டு எழுதிக் கொடுத்தா அழகா எண்ணிக் கொடுக்கருரு சித்தலிங்கம்! நாம பாடுபட்டுச் சம்பாதிச்சா ஆறு மாசத்திலே பிடியப்பா பணத்தேன்னு வீசிப் போடலாம் வாங்க!

[கணவன் கையைப் பிடித்து இழுத்துச் செல்லுகிருள் கோமதி. திகைத்து நிற்கிருன் முத்தையா.]

தாய்மையடையப்போகும் பெண்ணுக்கான உணவு

தாய்மையடையப்போகும் பெண், தன் நலனிற்காகவும், பிறக்கப்போகும் குழந்தையின் நலனிற்காகவும் சீரான உணவு உட்கொள்ள வேண்டும்.

இந்த நிலையிலிருக்கும் பெண்கள் நாளொன்றுக்கு 225 கிராம் பால் மற்றும் தயிர், 55 கிராம் பருப்புகள், 60 கிராம் மாமிசம், மீன் மற்றும் முட்டை, 30 கிராம் பழங்கள், கீரை மற்றும் கிழங்குகளுட்பட மற்ற காய்கறிகள் 150 கிராம் ஆகியன உட்கொள்ள வேண்டுமென்று சிபாரிசு செய்யப்படுகிறது. இவற்றைத் தவிர, இப்பெண் 400 கிராம் உணவுத் தானியங்கள், 40 கிராம் எண்ணெய் போன்ற கொழுப்புச் சத்து உணவுகள் மற்றும் 30 கிராம் வெல்லம் அல்லது சர்க்கரையும் உட்கொள்ள வேண்டும்.

மரக்கறி உணவு உண்போர் மாமிசம் முதலியவற்றிற்குப் பதிலாக 70 கிராம் பருப்புகள், 325 கிராம் பால் இவற்றை உட்கொள்ளலாம். இவர்கள் எண்ணெய் போன்ற கொழுப்புச் சத்துணவுகள் 35 கிராம் உட்கொண்டால் போதுமானது.

அமோக விளைச்சலுக்கு
யூரியா

இது ஓர்
நெய்வேலி
லிக்னைட்
கார்ப்போரேஷன்
தயாரிப்பு

FDSNLC 11427

ஏர்முனை வெல்க!

(இசைப்பாடல்)

தென்கச்சி கோ. சுவாமிநாதன்
பி. எஸ்சி. (வேளாண்மை)

இனிமை வளரட்டும்! இதயம் மலரட்டும்
ஏழ்மை மறையட்டும் தோழா—நம்
ஏர்முனை வெல்லட்டும் தோழா!

(இனிமை)

குறுவை செழிக்கவே ஆடுது றைவகை
இருபத்தி ஏழினைப் பாராய்!—நிலம்
இருபோகம் காணவே வாராய்!

(இனிமை)

உரம்மிக ஏற்கும்! சாய்வதும் இல்லை!
முதல்தர விளைச்சல் தோழா!—பலன்
மூன்றரை மாதத்தில் தோழா!

(இனிமை)

புரதம் மிகுந்தது! கலப்பு நெல்இது!
புதுமை உழவுசெய் தோழா!—நீ
புதிய உலகம்செய் தோழா!

(இனிமை)

கர்ப்பம் ஏற்பட்டுவிடுமே என்று அச்சமின்றி இல்லற வாழ்க்கையை இன்பமாக அனுபவியுங்கள்.

குடும்பக் கட்டுப்பாட்டிற்கு மிகவும் பத்திரமான முறை ஆண்களுக்கு இப்பொழுது உண்டு. அதுதான் நிரோத்

ஆடவர்களின் உபயோகத்திற்கு உகந்த உயர்தரமான குடும்பக் கட்டுப்பாடு சாதனம்.

நிரோத்

குடும்பக் கட்டுப்பாட்டிற்கு

மூன்றின் விலை 15 பைசா

அரசாங்க ஆதரவு விலையில் கிடைக்கிறது.



davp 69/106

தானே வந்த சுழற் கேடயம்

முகவை மாவட்டத்திலுள்ள ஊராளும் ஒன்றியங்களுள், சீரான சிறப்பான ஒன்றியமெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இராஜபாளையம் ஒன்றியம், மக்களின் குறைகளைக் களைந்து வெற்றிப் பெருமிதத்தால், பீடு நடையிட்டுச் செல்கின்றது.

1961ஆம் ஆண்டில் தோன்றி, சிறப்புடன் வளர்ந்துள்ள இவ்வொன்றியம் 37 சிற்றூர்களைத் தன்னகத்தே கொண்டு கவினுற விளங்குகிறது.

வேளாண்மை

இப் பகுதியில் ஏறத்தாழ 63,000 ஏக்கர்கள் வேளாண்மையில் உள்ளன. இவற்றில் 32,000 ஏக்கர்கள் நீர் வசதியற்ற நிலமேயாகும். மேற்குமலைப் பருவமழையை நம்பியே இந்த 32,000 ஏக்கர்களிலும் வேளாண்மை செய்யப்படுகிறது. இப் பருவ மழை 102 கண்மாய்களையும், தனியார் பொறுப்பிலுள்ள 4,500 கிணறுகளையும் நிரப்பி நெடும் பயனளித்து, நிறைவளம் தருகிறது.

சென்ற ஆண்டில் 15 சென்ட்டுகளில் ஆய்விற்காக வேளாண்மை செய்யப்பெற்ற ஜ.ஆர். 8 நெற்பயிர் இவ்வாண்டு ஏறத்தாழ 500 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. இனி வரும் ஆண்டுகளில் சற்றேறத்தாழ 10,000 ஏக்கர்களுக்கு இப்பயிர் விரிவாக்கப்படவிருக்கிறது.

வேளாண்மையைத் தழுவி வாழ்ந்து, மக்களுக்குச் சோறுபடைக்கும் உழவர் பெருமக்களுக்கென 37 தெளிப்பான்கள், 10 மருந்து தூவும் கருவிகள், 28 தழை மிதிப்புக் கருவிகள், 8 விதைத் தெளிப்பான்கள் வாங்கப் பெற்றுள்ளன.

கல்வி

இவ்வொன்றியத்தில் 29 தொடக்கப் பள்ளிகள், 3 உயர் தொடக்கப் பள்ளிகள் இயங்குகின்றன. தவிர, தனியார் மேலாண்மையில் 44 தொடக்கப் பள்ளிகளும் 7 உயர் தொடக்கப் பள்ளிகளும் செயற்படுகின்றன. இப்பள்ளிகளில் பெரும் பான்மையானவை, சொந்தக் கட்டடங்களிலேயே நிறுவப்பட்டுள்ளன.

இப்பள்ளிகளில் கல்வி கற்கும் சிறுர்களில் 35 சதவீதத்தினருக்கு நண்பகல் உணவுத் திட்டத்தால், உணவளித்துப் பசி அகற்றப்படுகிறது.

கால்நடை

கால்நடைகளைக் காப்பதிலும், பயன்படாக் காளைகளைக் காயடித்து, நல்ல இனங்களை உருவாக்குவதிலும், கோழிகள் வளர்த்து நிறைபயன் கொள்வதிலும்இப்பகுதிவாழ் உழவர் தணியா ஆர்வங் காட்டுகின்றனர்.

கூட்டுறவு

கூடித் தொழிலாற்றின் நாடுயரும் அல்லவா? இங்குச் செயற்படும் இரண்டு வேளாண்மை வங்கிகளால் எண்ணற்ற நன்மைகள் கிட்டியுள்

ளன. ஓர் உழவர் தனித்து நின்று, தாமே பெறவியலாத தரமான வித்துக்கள், உயிர் இன உரங்கள் அனைத்தும் இவ்வங்கிகளின் வாயிலாகக் குறைவின்றி வழங்கப்பட்டுள்ளன. இதற்கெனவே எட்டு வேளாண்மைக் கிடங்குகள் நிறுவப்பட்டுள்ளன. உர விற்பனைத் துறையில் 12 நாணய மன்றங்களும் 48 தனியாரும் ஈடுபட்டுள்ளனர்.

உடற்பிணி நீக்கி, உயிர் நலம் தேடித் தரும் பணியில், கூட்டுறவு மருத்துவமனையொன்று இவ்வொன்றியத்தில் அமைந்துள்ளது. இங்கு வந்தவரெல்லாம், இம்மனையைப் புகழ்ந்துரைத்துச் செல்கின்றனர்.

சுருங்கக் கூறின், இவ்வொன்றிய வாழ் மக்கள் பேராரவம் காட்டி நன்மைகளே வரவேற்கின்றனர். அகமும் முகமும்கோணுதை மலர்ச்சிகாட்டுகின்றனர். ஒன்றியமோ அவரவர் பெற வேண்டிய நலன்களையறிந்து, தான் அளிக்கவேண்டியவற்றை முயன்று பெற்றுத் தருகிறது.

எனவே பரிசுபெற்ற இராஜபாளையம் ஒன்றியத்திற்கு உங்களைப் போன்ற 'சிரணி' அன்பர்கள் வாயிலாக வாழ்த்துக் கூறுவோம்.

சிரணியின் சாதனை

திருச்சி மாவட்டத்தில் பள்ளிக் கட்டட வேலை, சாலை அமைப்பு ஆகிய வகையில் சிரணியினரால் துவக்கப்பட்டு, ரூ. 7,897 அரசினர் செலவில் 41,725 ரூபாய் மதிப்பீடுள்ள வேலைகளைச் செய்து முடித்திருப்பது மிகவும் பாராட்டுக்குரிய ஒன்றாகும். இதேபோன்று திருமானூர் ஊராட்சி ஒன்றியத்தில் திருமலைப்பாடி ஊராட்சியில் அரசினர் செலவு 4,000 ரூபாயில், 15,000 ரூபாய் பெறுமான முள்ள அழகான பள்ளிக் கட்டடத்தைக் கட்டி முடிக்கும் தறுவாயிலுள்ளதை அந்த ஊராட்சி ஒன்றியச் சிரணித் தலைவர் மிகவும் பெருமிதத்தோடு கூறியிருக்கிறார். உள்ளபடியே இவ்வட்டாரத்தினுடைய, சிரணித் தொண்டர்களின் சாதனை மிக மிகப் பாராட்டுக்குரிய ஒன்றாகும். மேலும் தஞ்சை மாவட்டத்தில் செப்டெம்பர் திங்களில் 5,695 ரூபாய் அரசினர் செலவுடன் 19,993 ரூபாய் மதிப்பீடுள்ள வேலைகளைச் செய்து முடித்திருக்கிறார்கள்.

குமரி மாவட்டத்தில் திரு. இராசப்பா அவர்கள் மாவட்டச் சிரணித் தலைவராக நியமிக்கப்பட்ட பிறகு சிரணிப் பணிகள் மிகத் துரிதமாக நடந்து வருகின்றன. அவருடைய இடைவிடாத உழைப்பாலும், குமரி மாவட்டத்தின் சிரணித் தொண்டர்களின் உழைப்பாலும், சென்ற மாதத்தில் 3,284 ரூபாய் அரசினர் செலவுடன் 10,200 ரூபாய் மதிப்புள்ள பள்ளிக் கட்டடங்களைக் கட்டியிருக்கிறார்கள் என்பதும், 3,000 ரூபாய் அரசினர் செலவுடன் 9,000 ரூபாய் மதிப்பில் வாய்க்கால், குளம் சீர்செய்து, செப்பனிட்டிருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எழில்மிகு சென்னை மாநகரைச் சார்ந்துள்ள மணலியில் நிறுவப்பட்டிருக்கும் 'எண்ணெய் தூய்மை செய்யும் ஆலை' (Madras Refineries Limited) தமிழகத்தின் வருங்காலத் தொழில் வளர்ச்சிக்கு நிலைக்களனாக விளங்கி, பெருந்துணைத் தொழில்களை உருவாக்குவதற்கு வழி கோலிவருக்கிறது.

415 ஏக்கர்கள் பரப்பளவில், ரூ. 44·7 கோடி செலவில் அமைந்து இயங்கும் இவ்வாலை, மூன்று நாடுகளின் சலியா ஒத்துழைப்பிற்கு அழியாச் சின்னமாக விளங்குகிறது. இந்திய அரசுடன், 'தேசிய ஈரான் எண்ணெய்க் கம்பெனி', மற்றும் 'அமெரிக்க இண்டர்நேஷனல் ஆயில் கம்பெனி' ஆகிய இரண்டு நிறுவனங்களும் ஒத்துழைத்து, குறுகிய காலத்தில் ஆலையைத் திறம்பட இயங்கச் செய்துள்ளன.

நம் நாட்டிலுள்ள எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலைகளிலேயே இஃது ஒன்பதாவதாகும்; மேலும் நவீன இயந்திரங்களைக் கொண்டு மிகு உற்பத்தியைத் தரும் பெரிய ஆலையும் நம் நாட்டில் இதுதான்.

இவ்வாலையை நிறுவுவதற்குத் தேவையான இயந்திரங்கள், கருவிகள், பொருட்கள் மட்டுமே வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இதனால் கணிசமான அந்நியச் செலாவணி சேமிக்கப்பட்டது.

மணலியிலுள்ள இவ்வெண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை U வடிவத்தில் கவினுற அமைக்கப்பட்டுள்ளது. நடுவில் கட்டப்பட்டுள்ள கட்டுப்பாடு அறையிலிருந்தவாறே தேவையான விசைகளைத் திருகி ஆலை முழுவதையும் திறம்பட இயங்கச் செய்யவும் பல்வேறு செயல்களை ஒருங்கிணைக்கவும் கூடும்.

இயங்கும் முறை :

பாரசீக வளைகுடாவிலிருந்து பெரிய பெரிய எண்ணெய்க் கப்பல்களில் சுத்தம் செய்யப்படாத எண்ணெய் (Crude oil) சென்னைத் துறைமுகத்தை யடைகின்றது. அங்கிருந்து அது குழாய்கள் வாயிலாக ஐந்து கல் தொலைவிலுள்ள இவ்வாலைக்குக் கொண்டு செல்லப்படுகிறது.

இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டு நிறுவப்பட்ட மிகப் பெரிய நான்கு எண்ணெய்த் தொட்டிகளில் இவை சேகரிக்கப்படுகின்றன. ஒவ்வோர் எண்ணெய்த் தொட்டியும், 35,000 டன் கொள்ளளவுள்ளது.

தொட்டிகளில் சேகரிக்கப்பட்டுள்ள சுத்தம் செய்யப்படாத எண்ணெயை பதின்மூன்று வெவ்வேறு குழாய்கள் வழியாகப் பற்பல இயந்திரங்களில் செலுத்தி, ஒரே சமயத்தில் அதிகமாக வெப்பப்படுத்தியும், குளிர் செய்தும் பற்பல பொருட்களைத் தயாரிக்கின்றனர்.

மின்சாரத் தடையேற்படின் ஆலை முழுதும் நீக்கிரையாகிவிடும். அதைத் தவிர்க்க இரண்டு மின் உற்பத்தி நிலையங்கள் இயங்கியவண்ணமுள்ளன. தமிழ்நாடு மின் வாரியத்தி

லிருந்தும் மின்சாரம் பெறப்படுகிறது.

ஆலைக்கு மிகுந்த நீர் தேவை; ஆனால் வறட்சி நிலை காரணமாகத் தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவுவதால், சுமார் 80 மில்லியன் காலன் நீரைத் திரும்ப திரும்ப ஓயாது பயன்படுத்தி அதன்வாயிலாகஎண்ணெய்ப் பொருட்களை உறபத்தி செய்கின்றனர். இம்முறையினால் நீரின் தேவை வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

உற்பத்தியாகும் பொருட்கள் :

இங்கு எட்டு வகைப் பொருட்கள் உற்பத்தியாகின்றன. அவையாவன: உர உற்பத்திக்குத் தேவையான இரச கற்பூரத்தைலம்; ஊர்திகளுக்குரிய 'பெட்ரோல்'; விளக்குகளுக்கும் சமையலுக்கும் பயன்படும் மண்ணெண்ணெய்; 'ஜெட்' விமானங்களுக்குத் தேவைப்படும் உயர் ரக சிறப்புப் 'பெட்ரோல்'; 'டிசெல்' எண்ணெய்; இயந்திரக் கலப்பைகளை ஓட்டுதற்குப் பயன்படும் இலேசான 'டிசெல்' எண்ணெய்; தொழிற்சாலை இயந்திரங்களை இயக்குதற்கு வேண்டிய எரி எண்ணெய்; சாலைகள் அமைக்க உதவும் தார்.

இவையனைத்தும் 'இந்தியன் ஆயில் கம்பெனி' வாயிலாக விற்பனை யாகின்றன.

இனி இறக்குமதியேயில்லை :

மேற்கண்ட எட்டுப் பொருட்களில் மண்ணெண்ணெய் தவிர ஏனைய வற்றில் நாம் ஏற்கனவேயே சுய தேவையை நிறைவேற்றிக் கொண்டுள்ளோம். தற்போது இவ்வாலையி விருந்து கிடைக்கும் மண்ணெண்ணெயினால் நம்முடைய இந்த தேவையும் பூர்த்தியடைந்து விடுவதால் இனி இறக்குமதி செய்யவேண்டிய நிலையே இருக்காது. ஆண்டொன்றிற்கு 3,40,000 டன் மண்ணெண்ணெய் இங்கு உற்பத்தியாகும்.

இப்பொருட்களெல்லாம் வடக்கே யுள்ள ஐதராபாத், விசயவாடா பகுதிகளிலிருந்து, மேற்கிலுள்ள பெங்களூர், தெற்கிலுள்ள மதுரை ஆகிய இடங்களை உள்ளடக்கிய பகுதிகளில் விற்பனை செய்யப்படும்.

வெளிநாட்டிற்கும் ஏற்றுமதி :

இருப்பினும் கல்கத்தாவிற்கும் பம்பாய்க்கும் சென்னையிலிருந்து கப்பல் மூலம் 'எரி எண்ணெய்' அனுப்பப்பட்டுள்ளது. தவிர, இரச கற்பூரத்தைலம் ஜப்பான் நாட்டிற்கும் ஏற்றுமதியாகியுள்ளது பாராட்டுதற்குரியது.

1970ஆம் ஆண்டளவில் இவ்வாலை முழு உற்பத்தித் திறனை எய்தும். 1970-71ஆம் ஆண்டுத் தொடக்கம் இதிலிருந்து ஆதாயம் கிடைக்கப் பெறும்.

பதின்மூன்று உற்பத்திப் பிரிவுகளைத் தவிர, குளிர்ப் பதன முறைகள், இரண்டு மின் உற்பத்தி இயந்திரங்கள், தார் நிரப்பும் பகுதி போன்ற வற்றைத் தன்னகத்தே கொண்டு சிறப்பாக இயங்கும் இவ்வாலையில் 450 பேர்கள் பணியாற்றுகின்றனர்.

இந்திய தலைமையமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்களால் இத்திட்டம் 6-1-1967இல் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தியக் குடியரசுத் தலைவர் திரு.வி.வி. கிரி அவர்கள் ஆலையை 27-9-1969 அன்று திறந்து வைத்தார்.

— எம்.ஏ. லத்திப்

வெளிநாடுகளிலிருந்து ஏதேனும் உதவி பெறுவதன்மூலம் வறுமையையும் வேலையின்மையையும் ஒழித்துவிட முடியாது. இன்று வளமாக இருக்கிற நாடுகள் எல்லாம் உற்பத்தியைப் பெருக்கிச் செல்வத்தைத் தங்கள் முயற்சியிலேயே உண்டாக்கியிருக்கிறார்கள். நமக்கு வேண்டியுள்ள செல்வத்தை நாமேதாம் உண்டாக்கவேண்டும்.

— ஜவகர்லால் நேரு

"பஞ்சாயத்து ராஜ்" இதழிலிருந்து

ஒலி உருவக் காட்சிகளில் வேளாண்மை நிகழ்ச்சிகள்

ஒலி - உருவக் காட்சிகளின் (டெலிவிசன்) வாயிலாக உழவர்கள் பயனடையவியலுமா என்பதைக் கண்டறிய அணுசக்தித் துறை, அனைத்திந்திய வானொலி, இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம் ஆகிய மைய அரசுத் துறைகள் ஓர் ஆய்வை மேற்கொண்டன.

டெல்லியைச் சுற்றி 23 கல் வட்டத்திலுள்ள மின் வசதி பெற்றுள்ள ஊர்களனைத்திலும், 80 ஒலி - உருவக் காட்சிப் பெட்டிகள் நிறுவப் பெற்றன. ஒவ்வொரு புதன், வெள்ளிக் கிழமைகளிலும் 20 நிமிடங்களுக்கு வேளாண்மை நிகழ்ச்சிகள் ஒலி - உருவக் காட்சிகளாகப் பரப்பப்பட்டன. இவை தொடர்ந்து நான்கு திங்கள்கள் நடைபெற்றன.

பின்னர் ஒவ்வோர் உழவரையும் பேட்டி கண்டதில் 68 சதவீதத்தினர் இந்நிகழ்ச்சிகளால் சிறந்த பண்ணை முறைகளைப்பற்றிய அறிவையும், விளக்கங்களையும் பெற்றுப் பயனடைந்ததாகக் கூறினர். தனிப் பட்ட முறையில் பிறரிடம் கேட்டறிந்து கொள்ளவியலாத சில இன்றியமையாச் செய்திகளை இவ் வொலி - உரு நிகழ்ச்சிகளின் வாயிலாகப் பார்த்தறிந்ததாகப் பதினேழு சதவீத உழவர்கள் பதிலளித்தனர். எழுதப் படிக்கத் தெரியாத உழவர்கள் இவற்றால் மிகப் பயனடைந்தனர் என்பது பொதுவாகத் தெரிந்துள்ளது.

பயனடைந்த உழவர்களின் விகிதம்:

இவ்வொலி - உருவக் காட்சிகளில் நிகழ்த்தப்பட்ட வேளாண்மைக் குறிப்புகளாவன :

1. மிகு விளைச்சல் தரும் கோதுமைப் பயிருக்குரிய வேளாண்மை முறைகள்.

2. நீண்ட காலப் பயிருக்கான நீர்ப்பாசனம்.

3. தக்காளி, காலிஃப்ளவர், முட்டைகோசு ஆகியவற்றைப் பயிரிடல்.

4. பயிர்களுக்கு உரமிடுதல்.

5. உப்புச் சத்துள்ள மண்ணில் காய்கறிகள் பயிரிடல்.

6. வயல் எலிகளை ஒழித்தல்.

இவற்றை அறிந்து கொள்வதில் 100க்கு 80 உழவர்களுக்கு எவ்வித சிரமமும் இருக்கவில்லை. 17 உழவர்களுக்குச் சிறிது சிரமமிருந்தது. இந்த 17 பேர்களில் 12 பேர்களால் மொழியை மட்டும் சரிவரப் புரிந்து கொள்ள இயலவில்லை. ஒலி - உருவக் காட்சிகளில் பேசப்பட்ட மொழி மிகவும் உயரிய முறையில் இருந்ததாலும், போதிய அளவில் விளக்கம் தரப்பட்டுப் பேசப் படாததாலும்

தங்களால் புரிந்துகொள்ள முடிய வில்லையென்று இவர்கள் கூறினர். கேட்பவர்களின் மொழி நடைக் கேற்ப நிகழ்ச்சிகள் அமையவேண்டு மென்று 2 பேர்களும், நிகழ்ச்சிகளின் கால அளவு மிகக் குறைவாயுள்ள தென்று 60 பேர்களும் கருத்தறிவித் தனர்.

ஒரு நாள் விட்டு மறு நாள் நிகழ்ச் சியைக் காண்பித்தல் உற்சாகமா யிருக்குமென்று ஓர் உழவர் கூறினர்.

ஒருவர் ஓர் ஐயத்தைக் கூற, மற் றொருவர் அந்த ஐயப்பாட்டை விளக்கி நீக்கும் முறையில் நிகழ்ச்சி கள் தொகுக்கப்பட்டால், கேட்பதற் குச் சுவையாகவும், அறிந்து கொள்ளு வதற்கு எளிதாகவும் இருக்குமென 78 உழவர்கள் கூறியுள்ளனர்.

வடகிழக்கும் தெற்கும்

வடகிழக்கு எல்லைப் பகுதியிலுள்ள சியாங் மாவட்டம் மிகுந்த முன் னேற்றமடைந்துள்ளது. இவ்வெல் லைப் பகுதிகளிலேயே இம்மாவட்டந் தான் சிறந்த வளர்ச்சி பெற்றுள்ளது எனக் கூறலாம்.

மாவட்டத் தலைநகரான 'அலாங்' என்னுமிடத்தில் ஓர் உயர் தொடக் கப் பள்ளி இருநூறு மாணவர்களு டன் செயற்படுகிறது. பழங்குடி மக்களிடையே இப்பள்ளி மிகுந்த செல்வாக்குள்ளதாக இருப்பதால், பிறவிடங்களிலுள்ள பழங்குடி மக் களும், இதுபோன்ற பள்ளிகள் பல அமைக்கப்படவேண்டுமெனக் கோரி யுள்ளனர். 'பகிகாட்' என்னுமிடத் தில் ஒரு கல்லூரி நிறுவப்பட்டுள்ளது.

40 படுக்கைகளைக் கொண்ட மருத் துவ மனையொன்று அலாங்கில் நோய் தீர்க்கும் பணியினைச் செவ்வையாகச் செய்கிறது.

வேளாண்மை :

காடு, மேடுகளை அழித்து, அந்நிலங் களையெல்லாம் வேளாண்மைக்கு ஏற்றதாக மாற்றியமைத்துள்ளனர். 45,000 மக்களே வாழ்ந்துவரும் இம் மாவட்டத்தில் மொத்த விளைநிலம் 14,975 ஏக்கர்களாகும். சிறிய நீர்ப் பாசனத் திட்டங்கள் உருவாக்கப் பட்டு, 25 வேலைத் திட்டங்கள் நிறை வேற்றப்பட்டுள்ளன. கலவையுர உற்பத்தி பெருகியுள்ளது. இவற்றின் காரணமாக நெல் விளைச்சலும் பன் மடங்கு அதிகரித்துள்ளது.

நவீன வாழ்க்கையின் இன்னமான மின் வசதி இங்கும் உண்டு. எட்டு ஊர்களுக்கு இதுவரை இவ்வசதி கிடைத்துள்ளது. எண்ணெயால் இயங்கும் இறைவை இயந்திரங்கள் மாவட்டமெங்கிலும் நீரை வாரி யிறைத்த வண்ணமிருக்கின்றன. கரும்புச் சாறு பிழியும் தொழில் விரைவிலேயே தொடங்கப்படவிருக் கிறது.

வடகிழக்கும், தெற்கும்:

வடகிழக்கு எல்லைப் பகுதிக்கும் கேரள மாநிலத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு - வெப்ப தட்ப நிலை யில். எனவே கேரளத்தில் பயிரிடுவது போன்று, இங்கும் மிளகைப் பயிரிடு வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டதில் வெற்றி கிட்டியுள்ளது.

இப்பகுதியில் வாழைகளும் மிகுதி யாக விளைகின்றன. கேரளத்தி லிருந்து கொணரப்பட்ட சில வாழை யினங்கள் இங்குச் செழிப்பாக வளர்ந்துள்ளன. வாழையில் ஏக்க ருக்கு ரூ. 5000 வரை ஆதாயம் கிடைக்கிறது. தவிர அன்னசி, ஆரஞ் சுப் பழங்களும் நன்கு விளைகின்றன. வடகிழக்கிற்கும், தெற்கிற்கும் நெருங்கிய தொடர்புண்டு போலும்! சில ஆண்டுகளில் வடகிழக்கு எல் லைப் பகுதிகளில் பழத் தோட்டங்கள் நிறைய ஏற்படுத்துவதற்குப் போதிய வாய்ப்புகளுள்ளன.

எல்லாம் இங்கே!

இயற்கைக் கோளாறுகளே மக்கள் ஒன்றுகூடி எவ்வாறு எதிர்த்துப் போராடி வெல்ல வேண்டுமென் பதற்குக் கஸ்டோல் ஊராட்சி (இராய்ப்பூர் மாவட்டம்) சிறந்த சான்றுகும்.

நெடுநாட்களாக இங்கு மழை யில்லாதிருந்ததால் செழித்தோங்கி வளர்ந்திருந்த நெற்பயிர்கள் பாழடையவிருந்தன. பயிரின் தாகத்தைத் தணிப்பதற்கு உடனேயே பாசனவசதி செய்யாவிடில் பயிரனைத்தும் நாசமடைந்துவிடும்.

கஸ்டோல் ஊராட்சி அவசரக் கூட்டமொன்றில் வறட்சி நிலைமை பற்றித் தீவிரமாக ஆராயப்பட்டது. ஊருக்கருகில் பாய்ந்து செல்லும் நதிக்குக் குறுக்கே ஒரு நிலையான அணையைக் கட்டி, நீரைத் தேக்கி, வாடி நிற்கும் பயிர்களுக்கு உடனே பாசன வசதிசெய்து விடுவதென்று ஊராட்சி முடிவு செய்தது. சுமார் இரண்டாயிரம் மக்கள் ஒன்றுகூடி, இரவும் பகலுமாகத் தொடர்ந்து உழைத்து அணையைக் கட்டி முடித்தனர்.

ஊராட்சித் தலைவர் திரு. கன்னையாலால் சர்மா அவர்களின் ஒப்பற்ற தலைமையில், ஊர் மக்கள் தாமாகவே முன்வந்து செயலாற்றி, அணையைக் குறைந்த கால அளவிலேயே உருவாக்கியது காண்பதற்குப் பெருங் காட்சியாயிருந்தது. அணைக் கட்டின் வாயிலாக ஊரிலிருக்கும் 150 ஏக்கர்களுக்கும் தற்போது நிலையான பாசன வசதி கிடைத்துள்ளது.

அணையைக் கட்டி முடித்தவுடன் அங்குள்ள குளங்களும் தூரெடுக்கப் பட்டுப் பாசனத்திற் கேற்றனவாக அமைக்கப்பட்டன.

இவ்விரண்டு சாதனைகளினால் நிலையான பாசன வசதி ஏற்பட்டுள்ளது. எனவே ஆண்டிற்கு ஒரு முறை விளைச்சல் தந்த நெல் வயல்களெல்லாம் தற்போது இரண்டு முறை விளைச்சலைத் தருகின்றன.

இராய்ப்பூர் மாவட்டத்திலிருந்து 30 கல் தொலைவிலுள்ள கஸ்டோல் ஊராட்சியில், ஓர் ஊருக்குத் தேவையான எல்லா அம்சங்களும் நிறைந்து விளங்குவது காரணமாக இவ்வூர் மாவட்ட அளவில் 1967ஆம் ஆண்டின் சிறந்த கிராமமெனத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

சாதனைகள் பட்டியல் :

கஸ்டோல் ஊராட்சியின் இதர சில சாதனைகள் பின்வருமாறு :

நதிக்குக் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணையின் மதிப்பு ரூ. 64,000 ஆகும். தவிர இரண்டு புதிய கிணறுகள் தோண்டப் பட்டதுடன், 11 பழைய கிணறுகள் செப்பனிடப் பட்டன. 1155 மூட்டை நல்லின விதைகளும், 9 டன் இரசாயன உரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

தவிர ஊராட்சியின் மேற்பார்வையில் 44 உரக் குழிகள் தோண்டப் பட்டன.

சிறுசேமிப்பு, குடும்பக் கூட்டுப் பாடுப் பணிகளில் மகளிர் மன்றங்கள் சிறந்த பணியாற்றியுள்ளன. 24 தந்தையர் அறுவை சிகிச்சை செய்து கொண்டுள்ளனர். ஒரு பொது நூல் நிலையமும் மனமகிழ் மன்றமும் நிறுவப்பட்டுள்ளன.

ஊரிலுள்ள நீர் நிலைகள் அனைத்திற்கும் 35000 மீன் குஞ்சுகள் வழங்கப் பட்டுள்ளன. இவற்றால் ஊராட்சிக்கு ஆண்டுதோறும் ரூ. 40,000 வருவாய் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஊரிலுள்ள தெருக்களைச் செப்பனிட, அடிப்படைச் சுகாதார வசதிகளைப் பெருக்க, உழவர்களுக்குச் சிறந்த கருவிகளை வழங்க, பேரொளி சிந்தும் மின் விளக்குகளை அமைக்க மேற்கண்ட வருவாய் பயன்படுத்தப் படவிருக்கிறது.

இதோ ஹம்ஸாவும் வந்து விட்டாள்!

புதிதாக வெளியிடப்பட்டுள்ள 'ஹம்சா' நல்லின நெல்வித்துக்கள், 'டாய்ச்சுங் நேடிவ் - 1' ஐபோல் மிகு விளைச்சலைத் தரவல்லது. ஹம்சா உணவிற்கு ஏற்ற சிறந்த அரிசியைத் தருகிறது. ஆந்திர மாநிலத்தில் விளைவிக்கப்படும் எச்.ஆர். 35 போன்று மெல்லிய சுவையமிக்க அரிசியைத் தருகிறது ஹம்சா. டாய்ச்சுங் நேடிவ் -1ஐவிட ஒரு வாரத்திற்கு முன்னரே அறுவடைக்குத் தயாராகி விடுகிறது. குறுவைப் பயிருக்கு 120 நாட்களும், தாளடிப்பயிருக்கு 130 நாட்களும் ஹம்சா பயிருக்குத் தேவை. குறுத் துப்புழு, தண்டுப்புழு போன்ற நோய்கள் ஹம்சா பயிரைத் தாக்குவதில்லை.

சிவப்பு முக்கோணத்திற்கு கேரளத்தின் பணி

குடும்பக்கட்டுப்பாடுத் திட்டம் தொடங்கிய நாளிலிருந்து இன்று வரை, கேரளத்தில் 2·94 இலட்சம் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. தவிர 1·5 இலட்சம் மகளிர்க்குக் கருத்தடை வளையம் (லூப்) பொருத்தப்பட்டுள்ளது. 1968-69 ஆம் ஆண்டில் மட்டும் 73,840 அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. அதே ஆண்டில் 36,062 கருத்தடை வளையங்களும் அணிவிக்கப்பட்டுள்ளன.

அறுவை சிகிச்சைக்கென 74 நிலையான நிலையங்களும், 9 நடமாடும் நிலையங்களும் செயற்படுகின்றன. கருத்தடை வளையத்திற்கென 166 நிலையான நிறுவனங்களும் 9 நடமாடும் நிலையங்களும் பணியாற்றுகின்றன.

அறுவை சிகிச்சையிலும், வளையம் பொருத்திக் கொள்வதிலும், திருவனந்தபுரம் மாநகர் முதலிடம் வகிக்கிறது.

வெறி நோய்

நாய்களுக்கு ஏற்படுவதைத் தடுக்கலாம்

மனிதன், மிருகம் இருவருக்குமே அபாயகரமானதான வெறி நோய், நாய்களுக்கு ஏற்படுவதை, சமயத்தில் ஊசி போடுவதன் மூலம் தடுக்கலாம்.

இவ்வூசிக்கான மருந்து கஸௌலியிலுள்ள மத்திய ஆராய்ச்சி நிலையத்திலும், பம்பாயிலுள்ள ஹாப்கின்ஸ் இன்ஸ்டிட்டியூடிலும் தயாரிக்கப்படுகிறது.

நாய்க்கு மூன்று மாதத்தில் முதல் ஊசியும், முதல் ஊசி போட்ட ஆறு மாதத்திற்குப் பிறகு இரண்டாவது ஊசியும் போட வேண்டும். இதன் பின்னர் வருடமொரு முறை ஊசி போட வேண்டும்.

அனைத்து இந்திய ஏழாவது கொறடாக்கள் மாநாட்டுப் பேராளர்களுடன் தமிழ்நாடு முதலமைச்சர், பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் கூட்டுறவு அமைச்சர் முதலியோர்.

நிலமில்லாத ஏழைகளுக்குப் பட்டா வழங்கும் திட்டத்தின்படி செய்யாறில் 20-9-1969 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரு. குப் சிங்கிற்குப் பட்டா வழங்கினர்.



இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் மேதகு ஜி. எஸ். பதக் சென்னைக்கு வருகைதந்தபொழுது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் வரவேற்றார்.

மத்திய அரசுத் துணைப் பாதுகாப்பு அமைச்சர் எம். ஆர். கிருஷ்ணு அவர்கள் தலைமைச் செயலகத்தில் 11-9-1969 அன்று தமிழ்நாடு முதலமைச்சரையும் கல்வியமைச்சரையும் சந்தித்தார்.

செய்யாறில்
அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளிக்
கட்டடத்தை.....

மாண்புமிகு தமிழ்நாடு கல்வியமைச்சர்
அவர்கள் தலைமையில்
திருமதி தயாளு கருணாநிதி அவர்கள்
20-9-1969 அன்று திறந்து வைத்தார்கள்.

சென்னையில் 21-9-1969 அன்று நடைபெற்ற ஏழாவது அனைத்திந்திய கொறடாக்கள் மாநாட்டின்போது பாராளுமன்ற விவகார அமைச்சர் திரு. இரகுராமையாவும் தமிழ்நாடு முதலமைச்சரும் உரையாடிக்கொண்டிருக்கின்றனர்.

போக்குவரத்துப் பாதுகாப்பு வாரத்தை ஒட்டி கடைசி நாளன்று நடைபெற்ற விழாவில் 21-9-1969 அன்று அரசுப்போக்குவரத்து ஓட்டுநர் ஒருவருக்குத் திருமதி சர்தாரணி உஜ்ஜல்சிங் பரிசு வழங்குகிறார்.

இன்டெலிஜென்ஸ் அகாலஸா

இதழிலிருந்து...

முந்திரியை விரும்பாதார் உலகி லுண்டோ? முந்திரியை உலகமக்களில் பெரும்பாலோர் விரும்பி உட்கொள் கின்றனர். அமெரிக்கா, ஜப்பான், ஸ்வீடன், கிழக்கு ஜெர்மனி, சோவி யத் ஒன்றியம், இங்கிலாந்து, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியவை முந்திரியை இறக்குமதி செய்கின்றன. இந்தியா, மொசாம்பிக், டான் சானியா, பிரேசில், கென்யா ஆகிய நாடுகள் முந்திரியைப் பெருமளவில் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய் கின்றன.

யத்தை எடுத்துக்கொள்வோம். முதன்முதலாக, 1966-67ஆம் ஆண் டில்தான் அந்நாடு முந்திரியை இறக்குமதி செய்தது. இறக்குமதி செய்த அதே ஆண்டில் 418 டன் முந்திரியை அந்நாடு ஏற்றுமதி செய் துள்ளது. 1962 முதல் 1968ஆம் ஆண்டு வரையுள்ள ஆறுண்டுக் காலங்களில், அமெரிக்காவின் தேவை 10,000 டன்களுக்கு உயர்ந் துள்ளது இங்குக் குறிப்பிடத் தக்கது.

முந்திரி ஏற்றுமதியிலே, இந்தியா தான் உலகில் முதன்மை இடம் வகிக் கிறது. கடந்த பத்தாண்டுகளாக, நம்நாட்டில் ஆண்டுதோறும் 70,000 டன் முந்திரி உற்பத்தியாகிறது. இந்திய முந்திரிகளுக்கு வெளிநாடு களில், சிறப்பாக அமெரிக்காவில் பெருந்தேவை ஏற்பட்டுள்ளதால், பதனிடப்படாத முந்திரிகளை, ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து இந்தியா இறக்குமதி செய்கிறது. 1966ஆம் ஆண்டில், 40,700 டன் பதனிடப் படாத முந்திரிகளை நாம் இறக்குமதி செய்துள்ளோம்.

மிகு விலைச்சல், மிகு ஆதாயம் :

முந்திரியைப்பெருமளவில் உற்பத்தி செய்தாலும், அதன் தற்போதைய விலையில் வீழ்ச்சியிருக்காதென்று வணிக நிபுணர்கள் கருத்துத் தெரி விக்கின்றனர். உற்பத்தி பெருகப் பெருக, அதற்கேற்றவாறு தேவையு மிருக்கிறதென்று அவர்கள் கூறுகின்ற னர். சான்றாக, சோவியத் ஒன்றி

முந்திரிப் பருப்புக்களைத் தனியே எடுப்பது ஒரு திறமை வாய்ந்த செய லாகும். இயந்திரங்களால்கூட இதைச் செவ்வனே செய்யவியலாது. ஆனால் இந்திய மகளிரின் பக்குவ மிக்க, பசுமைக் கரங்களால் அவை தனியே பிரித்தெடுக்கப்படுகின்றன. உடைபட்ட முந்திரிகளுக்குக் கிடைக் கும் விலை மிகவும் குறைவேயாகும்.

முந்திரியைப் பதனிடுதற்குரிய இயந்திரமொன்றை, இத்தாலிய நிறுவனமொன்று தற்போது உரு வாக்கியுள்ளது. இதனால் முந்திரி ஏற்றுமதி அதிகரிக்குமென்று கூற முடியும். பக்குவப்படுத்தப்படாத முந்திரிகளை இந்தியாவிற்கு அனுப்பிக் கொண்டிருந்த மொசாம்பிக் நாடும் ஓர் இயந்திரத்தைக் கண்டு பிடித்துள்ளது. ஆண்டொன்றிற்கு 2900 டன்கள் முந்திரியை ஏற்றுமதி செய்ய இவ்வியந்திரம் உதவுகிறது. டான் சானியாவும், கென்யாவும்கூட இத் தொழிலை இயந்திரமயமாக்க விருக்கின்றன. ஏனைய நாடுகளும் இதைப் பின்பற்றலாம்.

இவ்வகை இயந்திரங்களின் விலை ரூ 30 இலட்சமாகும். இவற்றைக் கொண்டு, 3,000 டன் முந்திரிகளைப் பக்குவப் படுத்த முடியும். ஒரு தொழிற்சாலையை அமைக்க ரூ. 62 இலட்சம் செலவாகும். இத் தொழிற் சாலையில், ஒரு டன் எடையுள்ள முந்திரிகளைப் பக்குவப்படுத்த ஏற்படும் செலவு ரூ. 870 மட்டுமே. பெரிய அளவில் தொழிற்சாலைகளை நிறுவினால் இச் செலவு மேலும் குறையும்.

எனவே முந்திரி உற்பத்தியாளர்கள் அனைவரும் இந் நிலையை நன்குணர்ந்து, உற்பத்தியைப் பெருக்கி, தங்களுக்கும் நாட்டிற்கும் நன்மைகள் பலவற்றைத் தேடித்தர முந்துவார்களாக.

உரமும் பரிசையும் தந்த வயல்

''தற்போது எனக்குக் கிடைத்திருக்கும் இதே விளைச்சல், சென்ற இருபதாண்டுகளுக்கு முன்பு கிடைத்திருக்குமாயின், நான் தமிழகத்தை விட்டுச் சிலோன் சென்றிருக்கவே மாட்டேன்'' என்கிறார் திரு. பி. நடராச நாடார் அவர்கள்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குமாரசிவபுரம் எனும் ஊரைச்சார்ந்த திரு. பி. நடராச நாடார், அனைத்திந்திய நிலையில், 1966-67ஆம் ஆண்டிற்கான மூன்றாவது பரிசைப் பெற்றுள்ளார்.

பதினைந்தாண்டு காலமாகச் சிலோனில் வணிகம் செய்த இவர், 1957 ஆம் ஆண்டில் தாயகம் திரும்ப நேர்ந்தது.

''என்னுடைய பத்து ஏக்கர் நிலத்தைக் கொண்டு எவ்வாறு வாழமுடியும் என எண்ணினேன். காரணம், பாசனத்திற்கு மழையைத்தான் நம்பி நிற்கவேண்டிய நிலை'' என்கிறார் திரு. நடராசன்.

ஒன்றுக்கு இரண்டு :

அவருடைய கவலை விரைவிலேயே நீங்கிற்று. குமாரசிவபுரத்திற்கு மின் வசதி கிடைத்தது; நல்லினப் பொறுக்கு விதைகளும், நவீன வேளாண்மை முறைகளும் அவருடைய வளரில் செயற்படுத்தப் பட்டன.

கிடைத்தற்கரிய இவ்வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்திக் கொண்டார். ரூ 5,000 செலவிட்டு ஒரு மின் இறைவை இயந்திரத்தை நிறுவினார். மின்தடை காரணமாகப் பாசனம் தடைப்படக் கூடாதென்பதற்காக ஓர் எண்ணெய் இறைவை இயந்திரத்தையும் பொருத்திக் கொண்டார்.

பல்லாண்டுகளாகக் கவனிப்பாரற்றுக் கிடந்த நிலத்தைப் பண்படுத்துவது பெரும் சிரமமாக இருந்தது. 500 தொழிலாளர்களை மூன்று திங்கட்குத் தொடர்ச்சியாக வேலைக் கமர்த்தி ரூ 5000 வரை செலவிட்டு நிலத்தை வேளாண்மைக் கேற்றதாக மாற்றியமைத்தார்.

1957ஆம் ஆண்டு முதல் 1962ஆம் ஆண்டுவரை, ஏ. எஸ். டி-5 நெற் பயிரை அக்டோபர் முதல் பிப்ரவரி வரையிலும், ஏ. எஸ். டி-1 பயிரை ஏப்ரல் முதல் சூலை வரையிலும் பயிர் செய்தார். இவ்விரண்டு பயிர்களினால் அவருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 3000 கிலோ வரை விளைச்சல் கிடைத்தது.

ஒருமுறையில் இரண்டுமுறை விளைச்சல் :

1962ஆம் ஆண்டு மலர்ந்தது. கோ 25 நெல் இனத்தைப்பற்றி, வளர்ச்சி அலுவலர்கள் நாடாரிடம் விளக்கினர். இவ்வினத்தைப் பயிரிடுவதால் ஏக்கருக்கு 2,600 முதல் 2,900 கிலோ

வரை நெல் கிடைக்குமென்றும், இது இரண்டுமுறை கூடுதல் விளைச்சலுக்கு ஒப்பானதென்றும் அலுவலர்கள் கூறினர்.

அப்போதிருந்தே திரு. நடராசன் அவர்கள் ஏ.எஸ்.டி.5ஐ குறுகிய காலப் பயிராகவும், கோ 25-ஐ நீண்டகாலப் பயிராகவும் விளைவிக்கத் தொடங்கினர்.

கோ-25 பயிர் செய்யத் தொடங்கிய முதலாண்டிலேயே, ஏக்கருக்கு 2,600 கிலோ அறுவடை செய்தார். அடுத்த ஆண்டு 2,900 கிலோ அறுவடை செய்து, மாவட்ட நிலையில் முதற்பரிசு பெற்றார். அதற்கடுத்த ஆண்டும் இதேயளவு நெல் உற்பத்தி செய்தமைக்காக, மாநில நிலையில் அவருக்கு ரூ. 200 ரொக்கப் பரிசு அளிக்கப்பட்டது.

பரிசு பெற்றதெவ்வாறு ?

அனேந்திந்திய நிலையில் பரிசு பெற்றதற்குத் திரு. நடராசன் அவர்கள் கையாண்ட வேளாண்மை முறைகள் எவையெவை என்பதைக் காண்போம்.

அக்ரசான் கொண்டு பதனிட்ட கோ-25 விதைகளில் 12% கிலோவை 14 சென்ட் பரப்பளவுள்ள நாற்றங்காலில் விதைத்தார்.

நடவு செய்யவேண்டிய வயலே ஏழு முறைகள் உழுதார். பின்னர் 6000 கிலோ பசுந்தாள் உரம், 50 கிலோ 'அம்மோனியம் சல்பேட்', 50 கிலோ 'சூப்பர் பாஸ்பேட்' ஆகிய உரங்கள் ஓர் ஏக்கர் அளவில் இடப்பட்டன.

15 சென்டி மீட்டருக்கு 12½ சென்டி மீட்டர் அளவில் நடவு செய்யப்பட்டது. அறுவடைக்குப் பத்து நாட்கள் முன்னர் வரை 3 நாட்கள் இடைவெளியில் பாசனம் செய்யப்பட்டது.

அறுவடை செய்து நன்கு உலர்ந்த பின்னர் ஒரு ஹெக்டேருக்குக் கிடைத்த விளைச்சல் 5269·9 கிலோ வாகும்.

''எனக்கு உணவளிக்கும் என் வயல், எனக்குப் பெருமையையும் சிறப்பையும் தேடித்தந்தது'' என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் திரு. நடராசன்.

பாலனே ? மாலனே ?

ஆந்திரத்தைச் சார்ந்த இரண்டு சகோதரர்கள்—பாலனு, மாலனு—எட்டு பசுக்களை வைத்துக்கொண்டு, ஆண்டொன்றிற்கு ரூ. 2000 முதல் ரூ. 3000 வரை பொருளீட்டினர். இவ்வாதாயம் பால் விற்பதனால் மட்டுமே அவர்களுக்குக் கிடைக்கிறது. இது தவிர, கன்றுகளையும் உரங்களையும் விற்பதனால் அவர்களுக்கு மேலும் ரூ. 1000 வருவாய் கிடைக்கிறது.

அவர்களுடைய பசுக்களெல்லாம் வெட்டவெளியில் கட்டப்பெற்று, வெயிலையும், மழையையும் ஒன்றெனப் பாவித்து, பாலை மட்டும் தவறு தந்துகொண்டிருந்தன. அவற்றை ஒழுங்கான முறையில் பேணிக் காத்துவரின், அவை மேலும் பாலைத் தந்திருக்குமல்லவா?

திருப்பதியிலுள்ள கால்நடைக் கல்லூரியைச் சார்ந்த ஒருவர் இப் பசுக்களைக் கவனித்தார். பசுக்களை நன்கு பாதுகாக்கும் முறைகளைப் பற்றிச் சகோதரர்களிடம் கலந்துரையாடுதற்கு விரும்பி, அவர்களைச் சந்தித்தார்.

செயலுக்குமுன் தயக்கம் :

மிகுந்த அளவில் பால் தரும் நல்லினப் பசுக்களை வாங்கி வளர்ப்பதன் மூலம் பால் உற்பத்தியைப் பெருக்கி நிறைந்த ஆதாயம் பெருதற்கான

வழிமுறைகளை அவர் எடுத்துரைத்தார்.

சகோதரர்கள் அவற்றை உன்னிப்புடன் செவிமடுத்தார்களெனினும், அவர் கூறும் பசுக்களை வாங்குதற்கு மட்டும் இசையவில்லை. சிந்திநல்லினப் பசுக்களின் விலை அதிகமாகையால், ஏதோ ஒன்று இறந்து விட்டால்கூட மிகுந்த இழப்பேற்படுமே என்று அவர்கள் அஞ்சினர்.

ஆனால் அவர்களின் பிடிவாதம் நெடுநாட்கள் நீடிக்கவில்லை; இரண்டு சிந்துப் பசுக்களை வாங்க முடிவு செய்து, அவ்வாறே விலைக்கு வாங்கினர். கிற்றுக் கொட்டகை அமைத்துப் பசுக்களைக் கட்டினர்.

செலவும் வருவாயும் :

சிந்துப் பசுக்களுக்கு நாளொன்றுக்கு 2 கிலோ வேர்க்கடலைப் பிண்ணாக்கு, 2 கிலோ சோளம், 2 கிலோ அரிசித் தவிடு, 15 கிலோ பசும்புல், மற்றும் 4 கிலோ வைக்கோல் தினமாக அளிக்கப்பட்டன.

ஒவ்வொரு பசுவும் நாளொன்றுக்கு 8 கிலோ பால் தந்தது. இதைக் கணக்கிட்டுப் பார்க்கையில், ஒவ்வொரு பசுவிடமிருந்தும் ஒரு திங்களுக்கு அவர்களுக்குக் கிடைத்த ஆதாயம் ரூ. 300 ஆயிற்று.

சிந்துப் பசுக்களினுல் கிடைக்கும் ஆதாயத்தைக் கண்ணுற்ற சகோதரர்கள் மென்மேலும் அப்பசுக்களையே வாங்குவாராயினர். தற்போது அவர்களிடம் 8 சிந்துப் பசுக்களிருக்கின்றன. தங்களிடமிருந்த நாட்டினப் பசுக்களை விற்றுவிட்டனர்.

"நாங்கள் பால்பண்ணையொன்றை தொடங்கலாமென்றிருக்கிறோம். அதற்கென நந்தியால் நகருக்குச் செல்லவிருக்கிறோம்" எனப் புன்னகை தவழக் கூறுகின்றனர் பாலனு, மாலனு சகோதரர்கள்.

அவர்கள் கூற்றின்படியே, நந்தியால் நகரில் 25 ஏக்கர் நிலத்தில் ஒரு செங்கற் கட்டடம் உருவாகிக்கொண்டிருக்கிறது. இங்குதான் பால் பண்ணை தொடங்கப்படும்.

இச்சகோதரர்களின் ஒரேயொரு மனக்குறை இதுதான்: "பசுக்களை முன்பே நன்கு பேணிப் பாதுகாத்திருந்தால், இன்னும் பொருள் சேர்த்திருக்கலாமே."

இது அவர்களுக்கு மட்டுமல்ல, நமக்கும் பொருந்துவதுதான்.

களைகளைக் கட்டுப்படுத்துதல்

பரிசோதனைகளின் விளைவு :

புது தில்லியிலுள்ள இந்திய ஆராய்ச்சிக் கழகத்தின் பரிசோதனைகளின்மேல், உழவுடன் களைகொல்லியையும் இட்டல் கோரை, அருகம்புல் போன்ற களைகளைக் கட்டுப்படுத்துகிறதென்று தெரிகிறது.

இரு முறைகளை உழுது, உழுத உடனேயே களைகொல்லிகளையும் இடுதலே சிறந்த முறை.

800 லிட்டர் தண்ணீருக்கு 2 கிலோ வீதம், 2, 4-டி மற்றும் டெலபான் ஆகிய களைகொல்லிகளைக் கலந்து இக்கலவையை உழவிற்குப் பின்னர் இடவேண்டும். இக் கலவை ஒரு ஹெக்டேர் நிலத்திற்குப் போதுமானது.

இவ்வாறு பண்படுத்தப்பட்ட நிலத்தில் மக்காச் சோளம், கோதுமை ஆகியன விளைவித்து ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.240 நிகர இலாபம் காணப்பட்டிருக்கிறது.

Articles reproduced from 'Panchayat Raj', 'Intensive Agriculture' etc., pages 69 to 76 (8 pages)

பயிர்களுக்கு சிறந்த அடி உரம்

பாக்டம்பாஸ்

FACT

முக்கிய தாவர உணவுகளான தழைச் சத்தையும், மணிச்சத்தையும் ஒருங்கே கொண்ட அதிசயக்கூட்டு உரம் பாக்டம்பாஸ். எல்லாப் பயிர்களுக்கும் ஏற்ற உரம். நிலத்தில் இட்டவுடனே இவ்வுரம் முழுவதும் தண்ணீரில் கரைபடும் தன்மை உடையதால் பயிர்களுக்கு வேண்டிய உணவுச் சத்துக்களை பாக்டம்பாஸ் உடனடியாகக் கொடுக்கிறது. பாக்டம்பாஸ் பயிர்களை நல்ல பசுமையுடன் வளரச் செய்கிறது... மகசூலை அதிகப் படுத்துகிறது.

பாக்ட் ...யானை மார்க் உரங்கள்

பொடிலேஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ்
திருவாங்கூர் லிமிடெட்
உத்யோகமண்டல், கேரளா

பிராந்திய அலுவலகம்: 2-வது மாடி,
19, மவுண்ட்-இன்-சீப்-ரோடு,
சென்னை-8.

உரத்தின் தரத்திற்கு உத்திரவாதம் யானை மார்க்



Criterion FT2203 TM

சுபிட்சத்துக்கும் தாராளமான தண்ணீர் வசதிக்கும்
பம்புடன் கூடிய

Kirloskar கிர்லோஸ்கர் மோட்டார்

நம்பத்தகுந்தது



நல்ல
மகசூல்

விவசாயிக்கு
சுபிட்சத்தை
அளிக்கிறது

தாராளமான
தண்ணீர்

நல்ல மகசூலை
அளிக்கிறது

பம்புடன் கூடிய நம்பத்தகுந்த ஒரு

Kirloskar கிர்லோஸ்கர்
மோட்டார்

தாராளமான தண்ணீர்
வசதியை அளிக்கிறது.



கிர்லோஸ்கர் எலக்ட்ரிக் கம்பெனி லிட்.,
த. பெ. எண் 1017; பெங்களூர்-3, இந்தியா
பூரண விபரங்களுக்கு: பாரி & கம்பெனி லிட்.,
த. பெ. எண் 12, மதராஸ்-1. ● த. பெ. எண் 208, கல்கத்தா-1
த. பெ. எண் 506, பம்பாய்-1. BR. ● த. பெ. எண் 172, புது டில்லி-1.

கிர்லோஸ்கர்-ஆயில் டைரக்ட்-ஆன்-லைன் ஸ்டார்ட்டர்கள் 10 எச்பி வரையிலும், ஸ்டார்-டெல்டா ஸ்டார்ட்டர்கள் 60எச்பி வரையிலும் ஸ்விரிங் மோட்டார் ஸ்டார்ட்டர்கள் 70 எச்பி வரையிலும் உடனடியாகக் கிடைக்கும்.

Benson-1282 TAM

ஊராட்சி அரசிதழ்

PANCHAYAT GAZETTE

1970 ஆம் ஆண்டில் நடைபெற விருக்கும் ஊராட்சித் தேர்தல்கள்

உறுப்பினர்கள் பதவிக்காலம் பற்றிய விளக்கம் :

இந்த மாநிலத்தில் பெருவாரியான ஊராட்சித்தேர்தல்கள் கடந்தமுறை 1965ஆம் ஆண்டில் சனவரி - பிப்ரவரி திங்கள்களில் நடைபெற்றன. அவ்வமயம் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் 3-2-1965 இல் பதவியேற்றனர். ஆகவே, இந்த ஊராட்சிகளின் உறுப்பினர்களின் பதவிக்காலம் 2-2-1970உடன் முடிவடைந்துவிடும். ஆகவே இந்த இடங்களை நிரப்புவதற்கான தேர்தல்கள் 1970இன் தொடக்க மாதங்களிலேயே நடைபெற்று விடவேண்டும். ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கு இத்தேர்தல்களைத் தள்ளிப் போடுவது என்று இப்பொழுது முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதற்காக வேண்டி 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தைத் தகுந்த முறையில் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2. சில ஊராட்சிகளில் 1965 சனவரி - பிப்ரவரி திங்கள்களில் தேர்தல் நடைபெறவில்லை. ஊராட்சிகளைப் பிரித்துத் திருத்தி அமைத்தல், உயர்நிலை மன்றம் பிறப்பித்த தடை உத்தரவுகள், ஊராட்சிகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகப் படுத்துதல் ஆகிய இப்படிப்பட்ட காரணங்களினால் இத் தேர்தல்கள் நடைபெறவில்லை. சில இடங்களில் 1965இல் தேர்தல்கள் நடைபெற்று முடிந்த பின் ஊராட்சி இல்லாத கிராமங்களுக்கு முதன் முதலாக ஊராட்சிகள் புதிதாக அமைக்கப்பட்டன. இந்த, இப்படிப்பட்ட நிலைகளில், இவ்வட்டங்களில் எல்லாம் உறுப்பினர்களின் பதவிக் காலம் எப்பொழுது முடிவுறுகிறது என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

3. சாதாரணமாகத் தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலமானது, மற்ற வகைகளில் வழி செய்யப்பட்டாலன்றி அல்லது சட்டத்தில் வரையறுக்கப்பட்டிருந்தாலன்றி, காலியிடம் ஏற்பட்ட அன்றைய நாள் நடுப்பகலிலிருந்து ஐந்தாண்டுக் காலமாக இருக்கும் என்று தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 17ஆவது பிரிவு கூறுகிறது. ஆகவே, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலம் பதவி காலியிடமாக ஆன அன்றைய நாள் நடுப்பகலிலிருந்து ஐந்தாண்டுக் காலத்திற்கு இருக்கும். இதிலிருந்து, காலியிடமான நாள் தான் முக்கியமாக எடுத்துக் கொள்ளப்பட்டு அன்றிலிருந்து உறுப்பினர்களின் பதவிக் காலத்தை நிர்ணயம் செய்யும் பொழுது, ஐந்தாண்டுக் காலம் கணக்கிடப்படல் வேண்டும்

என்று தெரிகிறது. ஆகவே தேர்தல் நடந்த நாள், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் பதவியேற்ற நாள் ஆகிய வற்றை உறுப்பினர்களின் பதவிக் காலத்தை நிர்ணயிக்கக் கணக்கில் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. ஆகவே, இயங்கிக் கொண்டிருக்கும் ஓர் ஊராட்சியில் தேர்தல் 1965 சனவரி - பிப்ரவரி மாதங்களில் நடை பெறவில்லையென்றாலும், காலியிட மானது 1965 சனவரி - பிப்ரவரியில் ஏற்பட்டிருந்தால், அதன் பிறகு நடை பெற்ற ஒரு தேர்தலில் தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலமானது, காலியிடம் ஏற்பட்ட சனவரி - பிப்ரவரி 1965 இலிருந்து ஐந்தாண்டிற்குப் பிறகு செல்லுபடி ஆகாததாகிவிடும்.

4. திருத்தியமைக்கப்பட்ட ஊராட்சிகளைப் பொறுத்தவரையில், பிரிவு 3 (2) விதி (அ)-வின் கீழ்ச் சேர்க்கப்படாத பகுதியானது அந்தப் பிரிவின் (b) விதியின் கீழ் ஆய்வாள ரால் ஒரு புதிய ஊராட்சியாக அறி விக்கப்பட்டிருந்தால், அந்தப் புதிய ஊராட்சிக்குத் தேர்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலம், ஊராட்சி அமைக்கப்பட்ட தேதியி லிருந்து ஐந்தாண்டுக் காலத்திற்கு இருக்கும். ஊராட்சி அமைக்கப்பட்ட தேதிதான் காலியிடம் ஏற்பட்ட தேதியாதலால், இவ்வாறு இருக்கும். பிரிக்கப்பட்டதுபோக எஞ்சியுள்ள ஊராட்சிகளைப் பொறுத்த வரையில் ஊராட்சி பிரிக்கப்பட்ட பிறகு தேர் தல் நடந்திருந்தால்கூட, அந்த எஞ்சியுள்ள ஊராட்சியானது (பிரிப்பதற்கு முன்னுல்) அமைக்கப் பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுக் காலத்திற்கு, உறுப்பினர்களின் பத விக் காலம் இருக்கும். காலியிடம் அப்பொழுதுதான் ஏற்பட்டதாகை யால், இவ்வாறு இருக்கும்.

5. உயர்நீதி மன்றத்தின் தடை விதிப்பு காரணமாக ஊராட்சி முழு மைக்குமோ, அல்லது சில வார்டு களுக்கோ 1965 சனவரி - பிப்ரவரித் தினங்களில் தேர்தல்கள் நடைபெறு மல், பிறகு உயர்நீதி மன்றத்தின் தடையானது நீக்கப்பட்ட பிறகு தேர்தல் நடைபெற்ற ஊராட்சி களைப் பொருத்தவரை, தேர்ந்தெடுக் பட்ட உறுப்பினர்களின் பதவிக்கால மானது 2-2-1970 உடன் தீர்ந்து விடும். ஏனெனில், காலியிடம் 3-2-1965 அன்று ஏற்பட்டதாகக் கொள்ளப்படல் வேண்டியுள்ளதால், இவ்வாறு இருக்கும்.

6. ஊராட்சித் தேர்தல்கள் நடை பெற்ற பிறகு, ஊராட்சியின் உறுப் பினர் எண்ணிக்கை அதிகப் படுத்தப் பட்டிருந்தால், கூடுதல் இடங்களுக் குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப் பினர்கள் 2-2-1970வரைதான் பதவி வகிப்பர். 1958ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 17 துணை விதி 4ஐப் பார்க்கவும்.

7. ஊராட்சி இல்லாத கிராமங் களில் முதன் முறையாக 1965 சனவரி - பிப்ரவரிக்குப் பிறகு அமைக்கப்பட்ட ஊராட்சிகளில், அவ்வூராட்சிகள் அமைக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுக் காலத் திற்கு, உறுப்பினர்களின் பதவிக் காலம் இருக்கும். ஏனெனில் அமைக் கப்பட்ட அந்த நாள்தான் காலி யிடம் ஏற்பட்ட நாள் என, சட்டத் தின் பிரிவு 17 (1) இன்படிக் கொள் ளப்படவேண்டும்.

8. கலைக்கப்பட்ட பிறகு மறுபடி யும் அமைக்கப்பட்ட ஊராட்சி களைப் பொறுத்தவரையில், திருத்தி யமைக்கப்பட்ட ஊராட்சியின் பத விக் காலமானது அரசு நிர்ணயம் செய்யும் நாளுடன் தீர்ந்துவிடும் என்று சட்டத்தின் பிரிவு 154 (6) வழிவகை செய்துள்ளது.

[ஊர் வளர்ச்சி - உள்ளாட்சித் துறையின் 1-9-69தேதியிட்ட குறிப்பாணை எண் 100834/C1/69-1-ன் சுருக்கம்.]

[Rural Development and Local Administration Department.

Memorandum No. 100834/C1/69-1 dated 1st September 1969.

Sub: Elections-Panchayat Elections 1970-Holding-Instructions issued.

ஊராட்சித் தேர்தல்கள்
வாக்குரிமை பற்றிய விளக்கம்

பல்வேறு ஊராட்சிகளுக்கான தேர்தலை, பிப்ரவரி 1970க்குப் பதிலாக 1970ஆம் ஆண்டு நடுவில் நடத்துவது என்ற முடிவு எடுக்கப் பட்டுத் தேர்தல் தள்ளிவைக்கப்பட் டுள்ளதனால், வாக்காளர் பட்டியலைத் திருத்தி அமைக்கும்வேலை 15-9-69இல் தொடங்கி 1-6-1970இல் முடிவு பெறும். வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கும்பொழுது, வாக்காளர் பட்டியலில் சேரத் தகுதிக்கான நாள் 1970 சனவரி முதல் தேதி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வாக்காளர் கணக்கெடுக்கும் வேலை 15-9-69இல் தொடங்கி 1-6-70இல் முடிந்தாலும், 1-1-1970 தேதியில் 21 வயது அல்லது அதற்கு மேலும் வயதானவர்களே வாக்காளர் பட்டியலில் சேர்க்கத் தகுதி படைத்தவர்களாவார்கள். இந்த விவரம் தெளிவாக "வாக் காளர் கணக்கெடுப்போருக்கான விவ ரக் குறிப்பு"களில் குறிப்பிடப்பட்டுள் ளது. இருந்தாலும் இந்த விவரத்தை, அதாவது 1-1-70இல் 21 வயது அல் லது அதற்கு மேற்பட்டு வயதுள் ளோரே, வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்ற விவரத்தை, தாசில்தார்கள் அவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தும்பொழுது தெளிவாக வலி யுறுத்திக் கூறி விளக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. வாக்காளர் பட்டியல் தயாரிப் பதில், அதிகாரபூர்வமான முதல் வேலை வாக்காளர் பட்டியலின் வரை வினை வெளியிடல் என்பதாலும், வாக்காளர் பட்டியலில் சேரத் தகுதிக்கான நாள் 1-1-1970 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளதாலும், வாக் காளர் பட்டியலின் வரைவானது 2-1-1970லோ அல்லது அதற்குப் பிறகோ வெளியாகும்படித் தாசில் தார்கள் பார்த்துக்கொள்ள வேண் டும். சில சமயங்களில் வாக்காளர் பட்டியல் அந்தத் தேதிக்கு முன்னே தயாரிக்கப்பட்டு விட்டாலும், அந் தத் தேதி (2-1-70) அன்றே அல்லது அதற்குப் பிறகோதான் வெளியிடப் படவேண்டும்.

[ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 3-9-69 தேதியிட்ட அரசு குறிப்பாணை எண் 101244 A/69-1இன் தமிழாக்கம்]

[Rural Development and Local Administration Department.

Memorandum No. 101244A/ Panchayat Election/69-1 dated 3-9-1969.

Sub : Elections - Panchayat Election-Revision of Electoral Rolls-Qualifying date-Instructions issued.]

ஊராட்சித் தேர்தல்கள்
வாக்குப் பெட்டிகளை முத்திரை இடுதல்

சட்ட மன்றத் தேர்தல்களில் கடைப்பிடிக்கப்பட்டது போலவே, வருகின்ற ஊராட்சித் தேர்தல்களி லும், பேரூராட்சிகளுக்கு மட்டும் நடக் கும் தேர்தல்களில் உபயோகப் படுத்தப்படும் வாக்குப் பெட்டிகளை முத்திரை (சீல்) செய்யும் முறையைக் கடைப்பிடிப்பதென முடிவு செய்யப் பட்டுள்ளது. வாக்குப் பெட்டிகளை உடைத்துத் தவறான முறையில் கையாள்வதைத் தடுக்க வேண்டி, வாக்குப் பெட்டிகளை டேப்பினால்

கட்டி முத்திரையிட்டு, பின்பு துணிப் பைகளில் போட்டு அந்தப் பைகளையும் முத்திரையிடுவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

நகராட்சிகளிடமிருந்து கிடைக்கக் கூடிய 'கேன்வாஸ்' பைகளை இதற்காகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும், பெட்டிகளைச் 'சீல்' செய்ய 'டேப்'புகளை மட்டும் வாங்கிக் கொள்வதென்றும் முடிவு செய்யப் பட்டுள்ளது.

[ஊர் வளர்ச்சி-ஊராட்சித் துறையின் 11-9-69 தேதியிட்ட குறிப்பாணை எண் 67665/PE/69-5இன் தமிழாக்கம்]

[Rural Development and Local Administration Department.

Memorandum No. 67665/PE. Election /69-5 dated 11-9-1969.

Sub : Election - Panchayat Election-bags-Taps supply of.]

காந்தி நூற்றாண்டுவிழா

வள்ளியம்மை, நாகப்பன், நாராயண சாமி நினைவாகத் தில்லையாடி கிராமத்தைச் சிறப்பித்தல் :

தென் ஆப்பிரிக்க அறப் போராட்டத்தில் கலந்துகொண்டு தங்களுடைய இன்னுயிரையே ஈந்த வீரத் தியாகிகள் தமிழ்ப் பெருமக்கள் வள்ளியம்மை, நாகப்பன், நாராயண சாமி, மற்றும் பலரின் நினைவாகத் தில்லையாடி கிராமத்தில் பல்வேறு வேலைகளையும் பணித் திட்டங்களையும் நிறைவேற்றுவதென அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக ஏழரை இலட்சம் ரூபாய் செலவிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. (வள்ளியம்மை நகரிய நிதிக்கு நன்கொடைகளை மாண்புமிகு முதலமைச்சருக்கு அனுப்பி வைக்குமாறு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் ஏற்கனவே வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளார்.)

2. உபரிநிதி வைத்துள்ள ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் இந்தத் தியாகிகளின் நினைவாகச் செய்யப்படும் இப்பணிகளுக்குத் தமிழ் நாடு முழுதுமே அஞ்சலி செலுத்தும் வகையில், நன்கொடைகள் வழங்க வேண்டுமென அரசாங்கம் விழைகிறது. அதன்படி, ஊராட்சி நிறுவனங்கள், கீழ்க்கண்ட முறையில் தங்களுடைய பொது நிதியிலிருந்து ''வள்ளியம்மை நகரிய நிதி''க்கு நன்கொடைகள் வழங்கலாம் என அரசு அனுமதி அளிக்கிறது.

கிராம ஊராட்சிகள் : 100 ரூபாய்க்கு மேற்படாமல்

பேரூராட்சிகள் : 250 ரூபாய்க்கு மேற்படாமல்

ஊராட்சி ஒன்றியங்கள் : ஓர் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல்

இப்படி நன்கொடை வழங்க விழையும் ஊராட்சிகள்/ஊராட்சி ஒன்றியங்கள், அதற்குத் தேவையான தீர்மானத்தை நிறைவேற்றிச் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடம் பணத்தைச் செலுத்தினால், அவர் மாண்புமிகு முதலமைச்சர், சென்னை-9க்கு அரசு 'உண்டி'யலை ''வள்ளியம்மாள் நகரிய நிதி''க்கு என அனுப்பி வைப்பார். ஒவ்வோர் ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும் எவ்வளவு தொகை கொடுத்துள்ளன என்ற விவரக் குறிப்படங்கிய பட்டியல் ஒன்றினையும், உண்டியலுடன், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் அனுப்பி வைக்கவேண்டும். இதனுடைய நகலினைக் கிராம வளர்ச்சி இயக்குநருக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அனுப்பி வைக்கவேண்டும்.

3. இந்த ஆணையில் சொல்லப்பட்டுள்ளது, எல்லா ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கும் தெரியும்படியாகக் கிராம வளர்ச்சி இயக்குநர் நடவடிக்கை எடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார். அதே

போல், சென்னை தவிர மற்ற எல்லா மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களும் இந்த ஆணையின் படிகளை எல்லா நகராட்சிகள், கிராம ஊராட்சிகள், நகரியக் குழுக்களுக்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பிவைத்தல் வேண்டும்.

[ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 27-8-69 தேதியிட்ட அரசு ஆணை எண் 1583]

[Rural Development and Local Administration Department.

Memorandum No. 1583 dated 27-8-1969.

Expenditure-Gandhi Centenary celeberations—Sembanar koil Block—Thillayadi Village works and projects in memory of Valliammai, Nagappan, Narayanasamy and others—Payment of contribution by the panchayat and panchayat unions permitted.

காரைச்சித்துப்புதூர் ஊராட்சி இரண்டாகப் பிரிக்கப் படுகிறது!

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தாலுக்கா, காரைச்சித்துப் புதூர் ஊராட்சியை 'காரைச்சித்து நாவடி', 'காரைச்சித்துப்புதூர்' என்று இரண்டு ஊராட்சிகளாகப் பிரித்து அமைத்து, கிராம வளர்ச்சி இயக்குநர் உத்தரவுகள் பிறப்பித்துள்ளார்.

ஊராட்சிகளின் அடுத்த சாதாரண தேர்தல் நாளிலிருந்து இந்த உத்தரவு அமுலுக்குவரும்.

[25-9-69 தேதியிட்ட கிராம வளர்ச்சி இயக்குநரின் நடவடிக்கைக் குறிப்பு எண்: 29155/69 பி 2.]

திருவிளக்கு ஊராட்சி இரண்டாகப் பிரிக்கப்படுகிறது!

சேலம் மாவட்டம் ஓமலூர் தாலுக்கா திருவிளக்கு ஊராட்சியானது 7·25 சதுர மைல்களுக்கு மேல் பரப்பளவு உள்ளது. அதனால் ஊராட்சிப் பரப்பளவு முழுமைக்கும், அந்த ஊராட்சியானது போதிய வசதிகளை மக்களுக்குச் செய்து கொடுக்க இயலாத நிலையில் இருக்கிறது. ஆகவே, இக் காரணங்களை முன்னிட்டு, சிறந்த நிர்வாகம் நடைபெறவும், ஊராட்சிப் பகுதியில் வாழ்ந்துவரும் மக்களுக்கு நல்ல முறையில் எல்லா வசதிகளையும் செய்து தரவும் வேண்டி, திரு

விளக்கு ஊராட்சியீனை, இரண்டாகப் பிரித்து, துட்டம்பட்டி ஊராட்சி, திசைவிளக்கு ஊராட்சி என்று இரண்டு ஊராட்சிகளாக அமைத்து, கிராம வளர்ச்சி இயக்குநர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த உத்தரவுகள் ஊராட்சிகளுக்கான அடுத்த சாதாரணத் தேர்தல் நாளிலிருந்து அமுலுக்கு வரும்.

[கிராம வளர்ச்சி இயக்குநரின் 18-9-1969 தேதியிட்ட நடவடிக்கைக் குறிப்பு ஆர்.டிஸ். 144060/69 பி. 2.]

ஊராட்சிகளில் அரிசனங்கள்/பழங்குடி மக்களுக்கு இடம் ஒதுக்குதல்

நகரம் அல்லது கிராமத்தின் மக்கள் தொகையைக் கவனத்தில் கொண்டு, தகுதியென்று பட்டால், ஒவ்வோர் ஊராட்சியிலும் அரிசனங்கள்/பழங்குடி மக்கள் உறுப்பினர்களுக்கென மூன்று இடங்களுக்கு மேற்படாமல் இடங்கள் ஒதுக்க, ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு, தமிழ் 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 15 (1) அதிகாரம் வழங்கியுள்ளது. இந்தப் பொருள் பற்றிப் பிறப்பிக்கப்பட்ட விதிகளின் கீழ், ஊராட்சியின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பங்குக்கு மேற்படாமல் ஒதுக்கப்படுகின்ற இடங்கள் இருக்கவேண்டும்; ஊராட்சியின் மொத்த மக்கள் தொகையில் அரிசனங்கள்/பழங்குடி மக்களின் தொகையானது பாதிக்கு மேல் இருந்தால், அந்த ஊராட்சியில் அந்த மக்களுக்கெனத் தனிப்பட்ட இடம் ஒதுக்கப்படத் தேவையில்லை.

2. இடம் ஒதுக்குதல்பற்றி அனுசரிக்கப்படவேண்டிய பொது விதிமுறைகள்பற்றி, 3-4-1951 தேதியிட்ட உள்ளாட்சித்துறை அரசுக் குறிப்பாணை எண் 11999/51-1இல் வரையறுக்கப்பட்டுச் சொல்லப்பட்டுள்ளது. இவ்விதி முறைகளின்படி, அரிசனங்கள்/பழங்குடி மக்களுக்கு ஒதுக்கப்படத் தகுதி என்றுள்ள இடங்களே, அப்படிப்பட்ட இடம் தனியாக ஒதுக்குதல் என்பதில்லாமலேயே, அவர்கள் பெறமுடியும் என்று எதிர்பார்க்கிற இடங்களில் அவர்கட்காக ஒதுக்கப்படும் இடங்கள் மொத்தமாக ஒதுக்கப்படவேண்டிய இடங்களிலிருந்து நியாயபூர்வமாக அவர்கள் வரமுடியும் என்றிருப்பதான இடங்களைக் கழித்ததாக இருக்கும். ஒரு குறிப்பிட்ட வார்டில் அல்லது ஒரு குறிப்பிட்ட ஊராட்சியில் அவர்கள் மிகப் பெரும்பான்மையான அளவில் உள்ளதால் இந்த நிலை ஏற்படும்.

3. அரிசனங்கள்/பழங்குடி மக்கள் ஒரு குறிப்பிட்ட வார்டில் மிகப் பெரும்பான்மையான எண்ணிக்கையில் இருந்தாலும், அந்தக் குறிப்பிட்ட வார்டில் அரிசனங்கள்/பழங்குடி மக்களைச் சார்ந்த ஒருவர்தான் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று நியாயபூர்வமாக எதிர்பார்ப்பதற்கு மாறாக, சில சமயங்களில் அரிசனங்கள்/பழங்குடிமக்களைச் சாராத வேறெருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு விடுகிறார். இதனால் அவர்களுக்கென்று இடம் ஒதுக்குகிறது என்ற நோக்கமே அடிபட்டுப் போகிறது என்று எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

4. அரசினால் பிறப்பிக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்குட்பட்டு அரிசனங்கள், பழங்குடி மக்களுடைய உறுப்பினர்களுக்கென ஊராட்சிகளில் இடம் ஒதுக்கலாம் என ஊராட்சிகளின் ஆய்வாளர்கள் (Inspectors of Panchanyats அதாவது மாவட்ட ஆட்சித் தலைவர்கள்) அறிவிக்கப்படுகிறார்கள். 3-4-1951 தேதியிட்ட உள்ளாட்சித்துறையின் அரசு குறிப்பாணை எண் 11999/51 1இல் சொல்லப்பட்டுள்ள கொள்கை முறையானது எந்த அளவுக்குப் பின்பற்றப்பட முடியுமோ அந்த அளவுக்குப் பின்பற்றப் படலாம் என்றும் ஒரு குறிப்பிட்ட ஊராட்சியில் அல்லது ஒரு குறிப்பிட்ட வார்டில் அரிசனங்கள்/பழங்குடி மக்கள் தொகையானது மிகப் பெருவாரியான பெரும்பான்மையில் இருப்பத

ஞல், அந்தப் பகுதியினர் பொது இடத்தையே வெற்றி பெற்றுப் பிடித்துக் கொள்ளமுடியும் என்று சாதாரணமாக எதிர்பார்க்கப்படுகிறது என்று ஊராட்சிகளின் ஆய்வாளர்கள் கருதினுலும், அரிசனங்கள்/பழங்குடி மக்களுக்கு அந்த இடத்தில் இடம் ஒதுக்குவதை ஊராட்சிகளின் ஆய்வாளர்களே இது, இந்த நடைமுறையானது தடுக்காது என்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர்கள் அறிவிக்கப்படுகிறார்கள்.

5. அரிசனங்கள்/பழங்குடி மக்கள் மிகப் பெரும்பான்மையாக இருக்கின்ற வார்டானது தனியாக ஒதுக்கப்பட்ட வார்டாக (Reserve ward) ஆக்கப்பட்டு, அந்த வார்டில், சட்ட மன்றத் தேர்தலுக்கு உள்ளதுபோல் அரிசனங்கள் / பழங்குடி மக்களேச் சேர்ந்தவர்கள் மட்டுமே போட்டியிடும்படியாக ஆக்கவேண்டும்; இப்படிச் செய்தால் இரட்டை உறுப்பினர்கள் வார்டு என்றுள்ள நிலே போய்விடும் எனவும் கருத்துரை வழங்கப்பட்டுள்ளது.

18-8-69 தேதியிட்ட அரசு குறிப்பாணே எண் 67508 1/68-3இல் முன்பே வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புகளே மாவட்ட ஆட்சித் தலேவர்கள் கவனிக்கும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இரட்டை உறுப்பினர் வார்டுகளில் மட்டும் தான் இடம் ஒதுக்கப்படல் வேண்டும் என்றும் ஒரே உறுப்பினர் வார்டுகளில் இடம் ஒதுக்குதல் கிடையாது என்றும் அக் குறிப்பாணேயில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. ஒரே உறுப்பினர் வார்டில் இடம் ஒதுக்குதல் என்பதை அனுமதிப்பதற்கில்லே.

(27-9-69 தேதியிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்துறையின் அரசுக் குறிப்பாணே எண் 80582 ஊராட்சித் தேர்தல் 69-2-ன் தமிழாக்கம்)

[Rural Development and Local Administration Department.

Memorandum No. 80582/pt. Election/69-2 dated 27-9-1969.

Sub: Panchayats - Reservation of Scheduled castes/Scheduled tribes—Clarification issued.

ஊராட்சி மன்றத் தேர்தல்கள் 1970

வாக்காளர் பட்டியல் தயாரிப்பு

ஊராட்சி மன்றங்களுக்கான கடந்த தேர்தல், 1965 சனவரி, பிப்ரவரியில் நடைபெற்றது. உறுப்பினர்கள் பதவிக் காலம் 1970 பிப்ரவரி 2இல் முடிவடையும். உறுப்பினர்கள் பதவிக் காலத்தைச் சில மாதங்களுக்கு நீடிப்பு தென்றும், தேர்தலே 1970 ஜூலேயில் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஊராட்சி மன்றங்கள் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல்களேத் தயாரிப்பது, வெளியிடுவது சம்பந்தப்பட்ட நடைமுறையில் ஒரு முக்கிய மாறுதல் செய்யப்பட்டுள்ளது. இதுவரை சட்டமன்ற வாக்காளர் பட்டியல்கள், அந்தந்த ஊராட்சி மன்ற அளவுக்கு ஏற்கப்பட்டு, ஊராட்சி மன்ற வாக்காளர் பட்டியல்களாக வெளியிடப்பட்டன. சட்ட மன்ற வாக்காளர் பட்டியல்களே, பொதுத் தேர்தலுக்கு முன்பு அல்லது இடைத் தேர்தலுக்கு முன்பு தான் நீவிரமான முறையில் திருத்த வேண்டும் என்று தேர்தல் கமிஷன் முடிவு செய்திருப்பதால் ஊராட்சி மன்றத் தேர்தலுக்காகத் தனியே ஊராட்சி மன்ற வாக்காளர்பட்டியல் தயாரித்து வெளியிடுவது அவசிய மாகிவிட்டது. அதையொட்டி இதற்கான ஏற்பாடு செய்ய 1958ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி மன்றச் சட்டம் 1968ஆம் ஆண்டின் தமிழ்நாடு 6ஆவது சட்டம் மூலம் திருத்தப்பட்டது.

வீடுவீடாகச் சென்று தகவல் திரட்டுவதன் மூலம் நகல் ஊராட்சி மன்ற வாக்காளர் பட்டியல் தயாரிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. 1-1-1970ஐத் தகுதித் தேதியாகக் கொண்டு ஊராட்சி மன்ற வாக்காளர் பட்டியல்கள் புதிதாகத் தயாரிக்கப்படும். 1-1-1970 இல் 21 வயதான

வர்களும் அதற்கும் மேல் வயதுள்ள வர்களும் நகல் பட்டியலில் சேர்க்கப் படுவார்கள். வீட்டுக்கு வீடு சென்று தகவல் திரட்டும் பணி பெரும் பாலான பகுதிகளில் 15-9-1969இல் தொடங்கிவிட்டது.

நகல் பட்டியல்கள் ஊராட்சி மன்ற வாக்காளர் பதிவு அதிகாரியின் அலுவலகத்திலும், ஊராட்சி மன்ற அலுவலகத்திலும், அலுவலகம் இல்லாத கிராமங்களில் முக்கியமான இடத்திலும் வெளியிடப்படும். மனுச் செய்யவும் மறுப்புத்தெரிவிக்கவும் 30 நாள் அவகாசம் தரப்படும். இந்தக் காலஅளவில், பெயர் சேர்க்கக் கோரி மனுச் செய்தால், பெயர் சேர்க்கக் கட்டணம் எதுவும் வசூலிக்கப்பட மாட்டாது. மனு சம்பந்தமாக அதிகாரிகள் ஏற்ற விசாரணை நடத்தி, தகுதி வாய்ந்த நபர்கள் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். குறிப்பிட்ட காலஅளவில் மனுச் செய்யாமல், அதன் வீணாவாகப் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமல் இருக்கும் நபர்கள், அதற்குப் பின்பும் பதிவு செய்து கொள்ளலாம். ஆனால் அதற்காக 50 காசு கட்டணம் கட்டி மனுச் செய்யவேண்டும்.

அரசியல் கட்சிகளும் பொது மக்களும் பொது நலச் சங்கங்களும் அதிகாரிகளுடன் ஒத்துழைத்து உரிய காலத்துக்குள் தகுதி வாய்ந்த நபர்கள் அனைவரையும் பட்டியலில் சேர்ப் பதில் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

[தமிழ்நாடு அரசின் 8-10-1969 தேதியிட்ட செய்தித் துறை வெளியீடு: 192]

அரசு உதவிச் செயலாளர்களுக்கு மாவட்டங்களில் பயிற்சி அளித்தல்

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில் உள்ள உதவிச் செயலாளர் களுக்கு (Assistant Secretaries) மாவட் டங்களில் நிர்வாகப் பணிகளில் பயிற்சி அளிப்பதென அரசு முடிவு செய்துள்ளது. மேலும் உயர்ந்த பதவிகளுக்கான பயிற்சியினை அவர் கள் பெறுவதற்காக வேண்டி இம் முடிவு செய்யப்பட்டுள்ளது. தற் சமயம் உதவிச் செயலாளர்கள் தலைமைச் செயலகத்தில் கோப்பு களைப் பார்க்கின்ற பணியிலேயே மிகவும் ஈடுபட்டுள்ளார்கள். மைய அரசின் மத்திய தலைமைச் செயலகப் பணிப் பிரிவு அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டுவரும் பயிற்சியை பெரும்பாலும் ஒட்டி மாவட்டங் களில் அரசு உதவிச் செயலாளர் களுக்கு இப்படிப்பட்ட பயிற்சி அளிப் பது, அவர்களுக்கு நிர்வாகத்தில் நேரடி அனுபவம் பெறுகின்ற வாய்ப் பினை அளிப்பதுடன், அவர்கள் மேலும் துணைச் செயலாளர்களாகப் (Deputy Secretaries) பதவி உயர்வு பெறும்பொழுது, அவர்களுடைய பணியைத் திறம்படச் செய்யவும் முடியும். உதவிச் செயலாளர்களுக் குக் கொடுக்கப்படும் பயிற்சித் திட்ட மானது, வருவாய்ப் பணிகளின் அடிப் படை அம்சங்களை உள்ளடக்கியதாக வும், முக்கியமான வளர்ச்சித் துறை களின் பணிகளில் அவர்களுக்கு நல்ல தொரு தொடர்பினை ஏற்படுத்து வதாகவும் அமையவேண்டுமென அரசு ஆணை பிறப்பிக்கிறது. இந்த வகையில் அரசு உதவிச் செயலாளர் களுக்கு 12 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கான ஒரு பயிற்சித் திட் டத்தினை அரசு தயாரித்துள்ளது.

2. இப்படிப்பட்ட பயிற்சி பெற வேண்டியவர் யார் யார் என்பதனைத் தமிழ்நாடு அரசுத் தலைமைச் செய லாளர் தேர்ந்தெடுப்பார். பொது வாக, தங்களுடைய தகுதி காண் நிலையினை (Probation) முடித்துக் கொண்டவர்களே இப்பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள். மூன்றாண்டு களுக்குக் குறைவாக உதவிச் செய லாளர்களாகப் பணியாற்றி வருபவர் கள் இப்பயிற்சிக்கு அனுப்பப்பட மாட்டார்கள்.

3. பயிற்சிக் காலம் முழுமையும் உதவிச் செயலாளர் (பயிற்சியில் உள்ளவர்கள்) எந்த மாவட்டத்தில்

அவர் பயிற்சி பெறுகிருரோ அந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் நிர்வாக ஆளுகையின்கீழ் இருப்பார்.

[9-10-69தேதியிட்ட பொதுத் துறை (பணிகள்)யின் அரசு ஆணை என் 1897ன் சுருக்கம்]

[Government of Tamil Nadu-Public (Services-E) Department No. 1897 Dated 9th October 1969.]

[Training—Public Service—Madras General Service, class XII-Assistant Secretaries to Government-Scheme of training in the District—Prescribed.]

குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றல் வேலைகளுக்கு, நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் கடன் வழங்கல்

தமிழ்நாட்டில் உள்ள 28 நகராட்சிகளுக்குக் (பேரூராட்சிகள் உட்பட) குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றல் ஆகிய பணிகளைச் செய்வதற்காக 1969-70ஆம் ஆண்டுக்காக 28 நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் மொத்தம் ரூ. 192·33 இலட்சம் ரூபாய்களைக் கடனுக வழங்க ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஒப்புக் கொண்டுள்ளது. அதற்குரித்தான நிபந்தனைகளுக்குட்பட்டு, கீழ்க்கண்ட முறையில் அந்த நிறுவனங்களுக்கு கடன் வழங்கப்படும் :

நகராட்சிகள்	(இலட்சத்தில்)
1. மதுரை	ரூ. 8·00
2. உதக மண்டலம்	ரூ. 14·67
3. ஈரோடு	ரூ. 4·00
4. பொள்ளாச்சி	ரூ. 5·33
5. கோவில்பட்டி	ரூ. 17·33
6. சேலம்	ரூ. 33 33
7. தாம்பரம்	ரூ. 6 67
8. ஆலந்தூர்	ரூ. 10·00
9. வாணியம்பாடி	ரூ. 6·67
10. செங்கற்பட்டு	ரூ. 3·33
11. ஆத்தூர்	ரூ. 6·67
12. திருச்சிராப்பள்ளி	ரூ. 6·67
13. மதுரை	ரூ. 1·33
14. காஞ்சிபுரம்	ரூ. 2·67
15. ஆம்பூர்	ரூ. 8·67
16. திருப்பத்தூர்	ரூ. 5·00
17. கிருஷ்ணகிரி	ரூ. 8·33
18. திருவாரூர்	ரூ. 6·67
19. இராமநாதபுரம்	ரூ. 8·00
20. கடையநல்லூர்	ரூ. 4·33
21. கோயம்புத்தூர்	ரூ. 1·33
பேரூராட்சிகள்	
22. மேல்விசாரம்	ரூ. 3·33
23. திருக்கோயிலூர்	ரூ. 4·33
24. கள்ளக்குறிச்சி	ரூ. 2·00
25. விக்கிரமசிங்கபுரம்	ரூ. 4·00
26. பெருந்துறை 27. கருமாண்டிச் செல்லிப்பாளையம்	ரூ. 8·67
28. சென்னிமலை	
மொத்தம்	ரூ. 192·33



பேரன்புடையீர்!

'சீரணி' ஆகஸ்டு திங்கள் இதழினைக் கண்ணுற்றுக் களிபேருவகை கொண்டேன். தங்களுக்கு என் இதயங்கனிந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

'சீரணி' இதழ் சிறந்த இலக்கியத் திங்களிதழாகப் பரிமளிக்கின்றது. அது கண்டு இறும்பூதெய்துகின்றேம். நூலகங்களும், கல்லூரிகளும், சிறப்பாகத் தமிழ்க் கல்லூரிகளும் 'சீரணி' இதழை வாங்கிப் பயன் பெறலாம்.

'வள்ளுவர் வழியில் இளங்கோ' என்ற தங்கள் ஆய்வுக் கட்டுரை எங்களைப் போன்றவர்களுக்கும் தமிழிலக்கிய ஆர்வங்கொண்டவர்களுக்கும் நல்விருந்து; ஒரு புதிய பாடம். அடுத்த இதழிலும் தங்கள் ஆய்வுக் கட்டுரையை எதிர்பார்க்கின்றேம்.

வேலூர் 'வாசகர் வட்டமும்' 'சீரணி' இலக்கிய இதழாக மின்னுவதுபற்றி மிக்கவும் மகிழ்ச்சி கொள்கின்றது.

கு. செல்லசாமி,
கதர் கிராமத் தொழில்
அலுவலகம், வேலூர்

தமிழக அரசின் சீரணி, திங்கள் இதழ் பார்க்கப் பொலிவும் அழகும் உள்ளதாய் இருந்தது. அறிஞர்களின் எழுத்தோவியங்களும் மற்றுமுள்ள கதைகளும், ஊராட்சிகளைப்பற்றிய செய்திகளும் படிப்பதற்குச் சுவையாகவும், அறிவுக்கு விருந்தாகவும் உள்ளன. மிகவும் குறைந்த விலைக்கு நிறைந்த பயன் தருவது 'சீரணி' ஒன்றே.

க. வே. சுப்பிரமணியன்
செயலாளர்
ஆசிரியர் சங்க மையம்
நெய்க்காரப்பட்டி அஞ்சல்
பழநி வட்டம்

வணக்கம். சீரணி (கிராம நலம்) இதழ் கண்டேன்; படித்தேன்; சுவைத்தேன்; அகமகிழ்ந்தேன். சீரணி எங்கும் பரவிச் சிறப்புற்றோங்க என் நெஞ்சம் நிறைந்த நல் வாழ்த்துக்கள் உரியன.

வ. பெருமாள்
தமிழ்ப் பேராசிரியர்,
கோலார் தங்கவயல்

சீரணிமூலம் சிறந்த சேவை செய்துவரும் தங்கட்கு என் உளமார்ந்த நன்றி. 'சீரணி'யைக் கடந்த மூன்று மாதங்களாகவே படிக்கிறேன். அதற்குமுன் சீரணியைப்பற்றித் தெரியாது. சீரணியின் சிறந்த சேவையைப் பாராட்டுகிறேன்.

கா. சின்னச்சாமி
சின்னக் குமாரபாளையம்,
அவிநாசி வட்டம்
கோவை மாவட்டம்

'சீரணி' திங்கள்தோறும் சிறப்பித ழாக மலர்தல் கண்டு பூரிப்படை கிறேன். திருவள்ளுவரின் மணி மொழிகளும் அண்ணல் காந்தியடிகளின் கருத்துரைகளும் ஆங்காங்கே இடம் பெறல் நலம். அறிஞர் பெருமக்களின் கருத்தோவியங்களைத் தாங்கி, இலக்கிய மணம் பரப்ப, தமிழ் மொழியின் ஏற்றங் காண, பெருமித நடை பயிலும் 'சீரணி'க்கு என்னுடைய பாராட்டுதல்கள்.

டி. பெரியசாமி
கிரஹர் (பழநி)
மதுரை மாவட்டம்

தமிழ்நாடு அரசுக்காக, அரசு எழுதுபொருள்-அச்சக இயக்குநர் திரு பி.எல்.எஸ். அச்சகத்தில் (65/1, ஆர்க்காடு சாலை, சென்னை-24) அச்சிடப்பட்டது.